MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
SERIES—27.

# திருமயிலைப் பிரபந்தங்கள்

# TIRUMAYILAI PRABANDHAṄKAL

EDITED BY

T. CHANDRASEKHARAN, M.A., L.T.

*Curator, Government Oriental Manuscripts Library, Madras*

*and*

*the Staff of the Library*

(*Under the orders of the Government of Madras*)

PRINTED BY THE SUPERINTENDENT
GOVERNMENT PRESS
MADRAS

1953

T. 1906

# INTRODUCTION

TIRUMAYILAI PRABANDHAṄKAḶ consists of the following four works: (i) Tirumayilaippiḷḷait-tamiḻ, (ii) Tirumayilaikkōvai, (iii) Tirumayilai Uvamai Veṇpā and (iv) Tirumayilai Veṇpā. Of these, the first two deal about God Siṅgāravelar enshrined at the temple of Sri Kapālīśvara in Mylapore. The other two deal about the Gods Kapālīśvara, Vināyaka in dancing, Siṅgāravelar and Karpakavalli. These works which are rich in similes, metaphor, etc., describe the greatness of these deities and the beauty of Mylapore.

Other works describing the greatness of these Gods are Tirumayilai Uḻā, Tirumayilaikkalambakam, Kapālīśvara Pañcaratnam, Karpakavalli Mālai, Siṅgāravelar Veṇpā, Tirumayilai Yamakavantādi.

The place now known as Mylapore is the same as the one called "Mayilāppu", etc. This is referred to in great detail by Thirujñānasambandar and Tirunāvukkarasu Nāyaṉār in their works like the Tēvāram.

The Vināyakar enshrined in the temple at Mylapore is known as 'Kūttāḍum Piḷḷaiyār' or Naṭana Vināyakar. The Lord Śiva who is enshrined here is known as Kapālī, since he appeared with the ornaments of skulls before Pārvatī. There are other names for this place like Punnai Vanam, Vēdapuri, Śukrapuri, etc. Śrī Rāma, Vālī, Sugrīva, Vāyilā Nāyaṉār, Ēlēlasiṅgan and others are said to have worshipped the Gods of this place. This is the place where Śivanēśaccelvar, an ardent devotee of Lord Śiva, who had collected the bones of his deceased daughter Pūmpāvai in a pot, had her life revived with the help of Tirujñānasambandamūrti.

It is mentioned in these works that there are many holy Tīrthas like "Vāli Tīrtha, Rāma Tīrtha, Kapāli Tīrtha, etc.," in this place.

The names of all these Gods and other deities are mentioned in the stanzas of all these works.

## TIRUMAYILAIPPIḶḶAIT-TAMIḺ.

This is a work eulogizing Lord Śiṅgāravelar. The "Piḷḷaittamiḻ" is one of the 96 kinds of works in Tamil literature. It describes the important features, usually of the life of a God or a very great man, dividing the period of youth into ten parts. It is again subdivided into two groups relating to Āṇpārpiḷḷaittamiḻ and Peṇpārpiḷḷaittamiḻ.

The Āṇpārpiḷḷaittamil̠ comprises of 10 chapters known as Kāppu, Seṅkīrai, Tāl, Śappāṇi, Muttam, Vārāṉai, Ambuli, Śiruparai, Śir̠r̠il, Sir̠utēr and the names Kaḷaṅgu, Ammāṉai and Ūsal, replace the terms Śir̠upar̠ai, Śir̠r̠il, and Śir̠uttēr in the Peṇpār̠piḷḷaittamil̠. This is sung during the bright fortnight of the odd months of a new born baby, starting with the 3rd month and ending with the 21st month. In the Piḷḷaittamil̠ all the ten sections have 10 stanzas except the first section called Kāppu which will be in 9 to 11 stanzas.

The work Śiṅgāravēlar Piḷḷaittamil̠ contains 101 stanzas in beautiful style. The author is said to be one Tāṇḍavarāyar belonging to Toṇḍai-nāḍu, who was patronized by one Pūmpāvai Vēlappa Mudaliar. This is said to have been sung (Arangēr̠r̠uppaḍi) in the month of Āvaṇi of the year Bhava corresponding to the Śaka year 1678. The style of this work is very beautiful and superb. It is in praise of God Muruka.

## TIRUMAYILAIKKŌVAI.

This work represents the type called "Kōvai" in Tamil literature and sings the praise of the Lord Siṅgāravēlar enshrined in the Kapālīśvara temple in Mylapore. It deals with Akapporuḷ like Morality, etc., and contains 416 stanzas. This is a rich composition in a very beautiful style, abounding in liṭerary flourishes. It describes the greatness of Mylapore and of the Lord Muruka. This is the work of one, Ambalavāṇakkavirāyar, a good scholar in Tamil, who was the Tamil Pandit in the Dharmapuram Mutt, and was the preceptor of Aruṇācalakavirāyar. He is different from the Ambalavāṇakavirāyar, the author of Arappaḷīśvarar Śatakam.

## TIRUMAYILAI UVAMAI VEṆPĀ.

This is composed in ordinary style by Naṭaliṅga Kavirāja of Tirunelveli. Mylapore is compared to Manmatha, lotus, the scriptures, etc.

## TIRUMAYILAI VEṆPĀ.

In more than 100 verses, Lord Śiva in the form of Kapālīśvara, enshrined at the temple in Mylapore is praised. The style is simple and beautiful. This gives an account of the greatness of the place and its holy tank. This work also is rich in literary flourishes, abounding in double *entendre*. Even the name of the author is not known.

All the above mentioned four works are printed from the paper manuscripts of this library bearing numbers (i) R. 861 and R. 887 , (ii) R. 884, (iii) R. 883 and (iv) R. 886. These manuscripts were purchased from one Sri C. V. Jambulingam Pillai of Mylapore in the year 1925–26.

After printing Tirumayilaikkovlai, it was brought to my notice that a copy of the same is available in Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras. On examination of this manuscript, it was found to contain the twelve verses from 373 to 384 which are missing in the manuscript of this library as well as 47 additional verses 417 to 463 in the end. These have been copied, edited and added as Appendix-I and Appendix-II respectively, printed on pages 141 to 150.

I have to express my thanks to Srimathi Rukmini Devi, the Adhyaksha of the Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras, for permitting me to copy the above verses from the manuscript of that Library.

My thanks are due also to Messrs. V. R. Kalyanasundaram, V. S. Krishnan and M. Pasupathy, Pandits of this Library who prepared the press copy and corrected the proofs.

T. CHANDRASEKHARAN,
*Curator.*

Government Oriental Manuscripts
Library, Madras-5,
Dated 15th December 1952.

T. 1906

# முன்னுரை.

"திருமயிலைப் பிரபந்தங்கள்" என்ற இத்தொகுப்பினுள்—1. **திருமயிலைப் பிள்ளைத்தமிழ், 2. திருமயிலைக் கோவை, 3. திருமயிலை உவமை வெண்பா, 4. திருமயிலை வெண்பா** என்னும் பெயரிய நான்கு நூல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் முன்னவை இரண்டும், சென்னை மயிலாப்பூர் கபாலீச்சரத்தின்கண் கோயில் கொண்டுள்ள சிங்கார வேலராகிய முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப் பெற்றுள்ளன. பின்னவை இரண்டும் மயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள கபாலீசர், கற்பகவல்லியம்மை, கூத்தாடும் விநாயகர், சிங்காரவேலர் ஆகியோரின் அரும் பெருஞ் சிறப்புக்களையும், மயிலைப்பதியின் பெருமைகளையும், உவமை வாயிலாகவும் சிலேடை முதலியவற்றாலும் விளக்குகின்றன.

மயிலைப் பதியைப் பற்றியனவாகிய வேறு பிரபந்தங்கள், திருமயிலை உலா, திருமயிலைக் கலம்பகம், கபாலீசர் பஞ்சரத்தினம், கற்பகவல்லி மாலை, சிங்கார வேலர் வெண்பா, திருமயிலையமகவந்தாதி என்பனவாம்.

மயிலாப்பூர் என்று தற்காலத்தில் கூறப்பெறும் இத்தலம் "மயிலாப்பு" என முன்பு வழங்கப்பட்டது. இது தேவாரம் பெற்ற திருப்பதியாகும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இத்தலத்தைப் போற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். திருநாவுக்கரசு நாயனாரும் வேறு தலங்களைப் பற்றித் தாமருளிய திருப்பதிகங்களில் மயிலையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அப்பகுதிகள் பின்வருவனவாம்.

"மங்குன் மதிதவழு மாட வீதி
மயிலாப்பி லுள்ளார்" (புக்க திருத்தாண்: 1)
"மயிலாப்புள்ளே செடிபடு வெண்டலையொன்
றேந்தி வந்து" (திருவொற்றியூர்த் திருத்தாண் : 6)

உமாதேவியார் மயிலுருவத்தை யடைந்து இத்தலத்து இறைவனைப் பூசித்தமையால் இதற்கு மயிலாப்பு, மயிலாப்பூர் என்னும் பெயர்கள் உண்டாயின. இப்பெயர்களின் சிதைவே மயிலை என்பது. கற்பகாம்பிகை பூசித்த செய்தியைத் திருஞான சம்பந்தர்

"மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்,"

என்று தெரிவித்தருளினர்.

இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகருக்குக் "கூத்தாடும் பிள்ளையார்," என்பது பெயர். இப்பெயர் "நடன விநாயகர்," என வடமொழியில் வழங்கப்பெறும். கோயில்கொண்டுள்ள சிவபெருமான் பெயர் கபாலீசுவரர் என்பது, பார்வதி தேவியாருக்கு இறைவன் கபாலமேந்தியவனாக இத்தலத்

தில் காட்சி கொடுத்தமையின் இப்பெயர் வழங்கலாயிற்று. (முன்பு காபாலீகர்கள் இங்கு குடியேறி யிருந்தனரென்றும், அவர்கள் மயிலைச் சிவ பெருமானுக்குக் " கபாலீசுவரர் " என்று பெயரிட்டன ரென்றும் சிலர் கூறுவர்.) கபாலீசுவரர் எழுந்தருளியுள்ள கோயிலுக்குக் கபாலீச்சர மென்று பெயர். அம்பிகையின் பெயர் கற்பகவல்லியம்மை. முருகப் பெருமானுக்குச் சிங்கார வேலரென்று பெயர். இந்தத் தலத்துக்குரிய விருட்சம் புன்னை. ஆதலின் புன்னைவன மென்றும இத்தலத்துக்கு ஒரு பெயருண்டு. வேதபுரி, சுக்கிரபுரி என்ற வேறு பெயர்களுமுள. உமா தேவியார், முருகக் கடவுள், இராமர், வாலி, சுக்கிரீவன், வாயிலார் நாயனர், ஏலேல சிங்கன் முதலானவர் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

சிவநேசச் செல்வர் என்னுஞ் சிவனடியார் தம்மகள் பூம்பாவை என்பவள் இறந்த பின்பு, அவள் எலும்புகளை ஒரு குடத்தில் சேமித்து வைத்திருக்க, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் இங்கு எழுந்தருளியபோது, குடத்திலுள்ள எலும்புகளை மீண்டும் மகளாகுமாறு பதிகம் பாடிய பெருமை பெற்றது இத்தலம்.

வாலி தீர்த்தம், இராம தீர்த்தம், கபாலி தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், வேத தீர்த்தம் முதலியன இங்குள்ள புண்ணிய தீர்த்தங்களாம். இந் நூல்களில் பலவிடங்களில் மேற்கூறிய செய்திகள் கூறப் பெற்றுள்ளன. அவைகளில் சில வருமாறு:

திருமயிலைப் பிள்ளைத் தமிழ் முதலான நான்கு பிரபந்தங்களிலும், கடவுள் வணக்கச் செய்யுட்கள் கூத்தாடும் பிள்ளையாரைப் பற்றியன.

" பேரின்ப வீடுதவு **கூத்தாடு மைங்கரப்**
**பிள்ளை**சர ணந்துதிப்பாம் [திருமயிலைப் - காப்புச் செய்யுள்.]

" பருகாவி சூழு மயிலைநற் கோவைப் படர்வதற்கு
முருகா ரொருகொம்பிற் **கூத்தாடும் பேரத்தி** முன்னிற்குமே.
[திருமயிலைக் கடவுள் வாழ்த்து.]

" **கூத்த விநாயகனும்** கும்பமுலை யாரிருவர்
காத்த விநாயகனுங் காப்பு " [திருமயிலை உவமை வெண்பா காப்பு.]

" கார்முகத் தானைக் கனிக்குவலஞ் செய்**நடனக்**
**கார்முகத் தானை** கழல் " [திருமயிலை வெண்பா காப்பு.]

இறைவன் திருநாமம் கபாலீசரென்பது :

" **மயில்பூசிக்க வுற்றவர் கபாலக் கரத்தினர்**
கஞ்சம்போன் முடிய தானைப் பழிச்சுதும் "
[திருமயிலைப் : காப்பு : 2]

" **கருத்தன்** மருவு **கபாலனென்றுங்** [திருமயிலை உவமை : 6.]

**அம்பிகையின் பெயர் கற்பக வல்லி யென்பது :**

" சிலைமகள் கற்பக வல்லியைப் போற்றுதும் "
[திருமயிலை காப்பு : 3]

" வளைசுரமும் கற்பக **வல்லியுஞ்**சேர் பண்பாலத் தனைமயிலை "
[திருமயிலை உவமை : 7]

" வேளூர் தையல்
நாயகியே **கற்பகமா**னாள் " [திருமயிலை உவமை : 74]

முருகப் பெருமானின் பெயர் சிங்கார வேலரென்பது :

" **சிங்கார வேலனைப்** பரவுமென்
மெய்ப்புகழ் தமிழ்தழைய வே " [திருமயிலை கடவுள் வணக்கம்.]

" **சிங்கார வேலரெனு நாமஞ் சிவகுமரர்**
மங்காது **பெற்ற மயிலையே** " [திருமயிலை வெண்பா: 42]

தலவிருட்சம் புன்னை என்பது :

" **கந்தஞ்** சேம்பார் **புன்னாகத்** தடத்தினர் " [திருமயிலை காப்பு : 2]

" **புன்னை வளர் மயிலாப்பூர்** " [திருமயிலை உவமை : 67]

" பூமணக்கும்
" **புன்னாக மேயார்** புரி " [திருமயிலை வெண்பா : 2]

இராமர் முதலானவர்கள் வழிபட்டுப் பேறு பெற்றனர் இத்தலத்தில் என்பது :

" சொன்மலிசீ **ராமன்சா முண்டிதுர்க்கை சுக்ரீவன்**
**மன்மதனும்** போற்று மயிலையே " [திருமயிலை வெண்பா : 49]

" **சங்கரனார்க் கந்நாட் டசதரன்சே யுற்சவங்கள்**
மங்கலமாய்ச் செய்த மயிலையே " [திருமயிலை வெண்பா : 48]

" **வாலிதக்கன் சங்கன் வசிட்ட வேதங்கள்**
மாலுமால் போக்கு மயிலையே " [திருமயிலை வெண்பா : 43]

" **கண்ணிழந்த வெள்ளி** கதியடைவான் முக்கணனை
வண்ணமுறப் போற்று மயிலையே " [திருமயிலை வெண்பா : 46]

பூம்பாவையைச் சம்பந்தப் பெருமான் உயிர்ப்பித்தது :

" **காழிக்கோ வெள்ளெலும்பை**
மாதங்க மாக்கும் மயிலையே " [திருமயிலை வெண்பா: 25]

இத்தலத்தில் பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன என்பது :

" **வாலிதீர்த் தஞ்**சேர் மயிலையே " (திருமயிலை வெண்பா : 37)

" **வேததீர்த் தஞ்**சிறந்த **வெள்ளிதீர்த் தம்**பிறவி
வாதைதீர்த் தோங்கு மயிலையே " (திருமயிலை வெண்பா : 39)

" சாற்று **மிராமதீர்த் தம்**பிறவி நோய்தனை
மாற்று வளஞ்சால் மயிலையே" (திருமயிலை வெண்பா : 47)

இத்துணைச் சிறப்புக்கள் வாய்ந்த இப் பழம்பெரும் பதியில்தான் பொய்யாமொழியாராகிய திருவள்ளுவர் வாழ்ந்திருந்தார். திருவள்ளுவர் ஆலயம் இத்தலத்தில் உளது. அச்செய்தியைக் குறிக்கும் பகுதிகளாவன :

" வள்ளுவரின் சொல்வளமே வாய்த்த "( திருமயிலை உவமை : 4)

" கள்ளமிலா வுள்ளத்துக் கற்புருவாம் வாசுகியார்
வள்ளுவரோ டும்வாழ் மயிலையே " (திருமயிலை வெண்பா : 2)

" காக்கிற் சினங்காக்க காவாக்காற் கொல்லுமெனும்
வாக்கின்மிக் கோர்வாழ் மயிலையே " (திருமயிலை வெண்பா : 3)

## I. திருமயிலைப் பிள்ளைத் தமிழ்

இது, திருமயிலைச் சிங்காரவேலரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டுள்ள பிரபந்தமாகும். தமிழ் மொழியிலுள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களில் பிள்ளைத்தமிழ் என்பது ஒன்று. தேவர்களையோ, மானிடரிற் சிறந்தாரையோ தலைவராகக் கொண்டு, அவர்களது இளமைப் பருவ நிகழ்ச்சிகளைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பாடுவது பிள்ளைத் தமிழாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களைக் கொண்டது ஆண்பாற் பிள்ளைத்தமிழாம். இவற்றுள் சிறுபறை, சிற்றில், சிறு தேர் என்பனவற்றை விலக்கி, கழங்கு, அம்மானை, ஊசல் என்ற மூன்று பருவங்களைச் சேர்த்து பெண்பாற் பிள்ளைத்தமிழ் பாடப்பெறும். பிறந்து மூன்ரும் மாதம் முதல் இருபத்தொறு மாதம்வரை ஒற்றைப்பட்ட மாதங்களில் வளர்பிறைப் பருவத்தில் பிள்ளைத் தமிழைப் பாடவேண்டும்.

" மூன்று முதல்மூ வேழு திங்களில்
ஒற்றை பெற்ற முற்றுறு மதியின்
கொள்ளுக பிள்ளைக் கவியைக் கூர்ந்தே. "

(இலக்கணவிளக் : பாட்டியல் : 49)

என்ற சூத்திரத்தால் இதனையுணரலாம். மூன்று, ஐந்து, ஏழாம் ஆண்டுகளிலும் பிள்ளைத்தமிழ் பாடலாம். பிள்ளைத்தமிழில் காப்புப்பருவம் ஒன்பது முதல் பதினெரு பாடல்கள்வரை பாடப்படும். மற்றப் பருவங்கள் பத்துப் பத்துப் பாடல்களுடையனவாம்.

**சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ்** எனப்படும் இந்நூலில், காப்பு முதல் சிறு தேர் ஈருகப் பத்துப் பருவங்களுள்ளன. கடவுள் வாழ்த்துப் பாடலுட்பட 101 பாடல்களைக்கொண்டது இந்நூல். நடைசிறந்துள்ளது. முருகப்பெருமானின் சிறப்புக்களைப் பலவாறு எடுத்துக்கூறுகின்றது. இந்நூலை இயற்றிய புலவர் பெயர் தாண்டவராயர் என்பதும், அவர் தொண்டை நாட்டைச்சேர்ந்தவரென்பதும், சக ஆண்டு ஆயிரத்தறுநூற்றெழுபத்தெட்டில் (18-ஆம் நூற்ருண்டு) பவ வருஷம் ஆவணிமாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் இந்நூலை அரங்கேற்றினரென்றும் தெரிகின்றது.

"நயமதுர கவிபொழியு நிபுணதாண் டவராய
நாவல னிசைந்து பாடி
நான்மறைசொல் வாணர்தமிழ் வாணர்நிறை தொண்டைவள
நன்னாட் டுளோர்கள் மெச்ச
இயல்புறு சகாத்தமோ ராயிரத் தறுநூற்று
எழுபத்து எட்டாண் டினில்
எய்துபவ வருடமா வணியுத்தி ரட்டாதி
யின்புட னரங்கேற் றிடுஞ்
செயமிலகு தமிழ் கொண்ட சிங்கார வேலவ"

(சிறுதேர்ப். 10.)

என்ற பகுதி இதனை யுணர்த்துகின்றது.

இந் நூலாசிரியர், மயிலாப்பூரில் வாழ்ந்து வந்த பூம்பாவை வேலப்ப முதலியாரென்னும் செல்வரின் ஆதரவினால், இந்நூலையும், "திருமயிலை யமக வந்தாதி" "சிங்கார வேலர் வெண்பா" என்ற நூல்களையும் இயற்றி அரங்கேற்றினர் என்று பின் வரும் பாடலால் அறியப் படுகின்றது.

தண்பார் துதிக்கு மயிலையந் தாதி சயிலநல்கும்
பெண்பாகந் தந்தருள் சிங்கார வேலவர் பிள்ளைத்தமிழ்
வெண்பாவா மூன்று மரங்கேறச் செய்துநன் மேன்மைபெற்றான்
பண்பா வலர்புகழ் பூம்பாவை வேலன்மெய்ப் பாக்கியனே.
(திருமயிலை யமக வந்தாதி : இறுதி; அரங்கேற்றம்.)

## 2. திருமயிலைக் கோவை

இது, திருமயிலைக் கபாலீச் சரத்தின்கண் எழுந்தருளியுள்ள சிங்கார வேலராகிய முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப் பட்டுள்ள கோவை யென்னும் ஒருவகைப் பிரபந்த விசேடமாகும். இதனை அச்சிட்ட பிறகு, அடையாறு மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமி நாதையர் அவர்கள் நூல்நிலையத்தில் பனையோலைப் பிரதி யொன்றிருப்பது தெரிய வந்தது. அதனுள், இந்நூல் நிலையப் பிரதியில் இல்லாத 373–384-ஆம் எண் வரையுள்ள பாடல்களும், இறுதியில் 47 பாடல்கள் அதிக மாகவும் காணப்பட்டன. அவற்றையும் பிறசேர்க்கையாக வெளியிட்டுள் ளேன். தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் கோவை யென்பதும் ஒன்று. இஃது அகப்பொருளைப் பற்றியது. களவு, கற்பு என்னும் ஒழுக்கங் களைக் கூறுவதாய் அமைந்து, கட்டளைக் கலித்துறை என்ற பாவகையால் பாடப் பெறுவது. திருச்சிற்றம்பலக் கோவையார், தஞ்சை வாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை, கோடீச்சுரக் கோவை முதலாயின இவ்வகையைச் சார்ந்தவையாம்.

திரு மயிலைக் கோவை யென்ற இந் நூல் நிலையப் பிரதியில் கடவுள் வாழ்த்து, அவை யடக்கச் செய்யுட்களுட்பட 416 கட்டளைக்கலித்துறைக ளுள்ளன. கற்பியலில் பரத்தையிற் பிரிவு என்ற பகுதியுடன் முடிந் துள்ளது. சிங்கார வேலரைப் பற்றிய சிறப்புக்களும, மயிலைப்பதியின்

பெருமைகளும் இந் நூலில் அழகுபடக் கூறப் பெற்றுள்ளன. சொல்நடை, பொருளழகு இவற்றில் சிறந்துள்ளது. "வரைவு கடாதல்" என்னும் "பகுதியில் பகல் வருவானை இரவு வருகென்றல்" என்னுந் துறையொன் றுள்ளது. தலைவியைச் சந்திப்பதற்காக பகற்காலத்தில் வருந் தலைவனை விலக்கி, இரவுப் பொழுதில் வருமாறுகூறுதல், என்பது இதன் பொருள். இத் துறைக்குரிய பாடலை ஆசிரியர் மிக அழகாகக் கூறுகின்றார்.

செந்திற் பதியுவந் தோன்மயி லாபுரிச் செல்வன்மத்த
தந்திக் கிளையவன் சிங்கார வேலன் சயிலமன்னு
பந்திக் கதிர்விரி நண்பகல் நீவரல் பான்மையன்றால்
அந்திக்கு நீவரிற் சந்திக்குஞ் சிந்திக்கு மாரணங்கே.

(திருமயிலைக்: 252)

இறுதி வரியில் அமைந்துள்ள சொன்னயமும் பொருணயமும் நம்மைக் களிப்புறச் செய்கின்றன. இது போன்ற பல சிறந்த பாடல்கள் இந் நூலில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இந் நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் அம்பலவாணக் கவிராயர் என்பது. இவர் சிறந்த தமிழ் புலவர். தருமபுர மடத்து ஆதீன வித்துவானாக இருந்தவர். அறப்பளீ சுவரர் சதகம் பாடிய அம்பலவாணக் கவிராயரினும் இவர் வேறானவர் என்று தெரிகின்றது.

### 3. திருமயிலை உவமை வெண்பா.

இஃது மயிலைப் பதிக்கும், மன்மதன், தாமரைப்பூ, வேதம் முதலான பல பொருள்களுக்கும் உவமை அமையுமாறு பாடப் பெற்ற நூற்று முப்பது வெண்பாக்களைக் கொண்டுளது. நடை சாதாரணமாக உள்ளது. திரு நெல்வேலி நடலிங்க கவிராசர் என்பவரால் பாடப்பெற்றது என்று மூலப் பிரதியின் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளது. இந் நூலைப் பற்றிய வரலாறாக வேறொன்றும் புலப்படவில்லை.

### 4. திருமயிலை வெண்பா.

இந் நூலில், மயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள சிவபிரானைப் பற்றிய தோத்திரங்களாகக் கடவுள் வாழ்த்து நீங்கலாக நூறு பாடல்களுள்ளன. நடையழகு சிறந்துள்ளது. இத்தலத்துச் சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றவர்களைப் பற்றியும், இப் பதியின் பழம்பெருமையையும், இங்குள்ள தீர்த்தங்களின் சிறப்புக்களையும் நன்கு விளக்கமுடன் எடுத்துக் கூறுகின்றது. பொதுவாகவும் சிலேடைகளாகவும் பாடல்கள் அமைந்துள்ளன. இதனை இயற்றினார் இன்னார் என்று தெரியவில்லை.

மேற்கூறப்பட்டவற்றுள், "திருமயிலைப் பிள்ளைத் தமிழ்" என்பது, இந் நூல் நிலயத்திலுள்ள R. 861, 887 என்ற எண்களைக் கொண்டுள்ள காகிதக் கையெழுத்துப் பிரதிகளை ஆதாரமாகக் கொண்டு வெளிடப் படுகின் றன. அவை 1925–26-ஆம் ஆண்டில் மயிலாப்பூர் ஸ்ரீ சி. வி. ஜம்புலிங்கம் பிள்ளை என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டனவாம். "திருமயிலைக்

கோவை என்ற நூல் **R. 884**-ஆம் எண்ணுள்ள பிரதியினையும், "திருமயிலை உவமை வெண்பா" என்பது **R. 883**-ஆம் எண் கொண்ட பிரதியினையும், "திருமயிலை வெண்பா" என்பது **R. 886**-ஆம் எண்ணினையும் ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றன. இம் மூன்றும் காகிதப் பிரதிகளே. இவையும் 1925–26-ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டவரிடமிருந்து நூல் நிலையத்துக்காக விலைக்கு வாங்கப் பெற்றனவாம்.

இறுதியாக, இந் நான்கு நூல்களையும் மூலப்பிரதிகளிலிருந்து பெயர்த்து எழுதி, அச்சிடுவதற்குரிய வகையில் அமைத்துக் கொடுத்த இந் நூல் நிலைய பண்டிதர்கள் ; ஸ்ரீ வி. ஆர். கல்யாணசுந்தரம், ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணன், ஸ்ரீ எம். பசுபதி ஆகியோருக்கு எனது நன்றி உரியதாம்.

இந் நூல் நிலைய திருமயிலைச் சிங்காரவேலர் கோவைப் பிரதியில், காணப் பெறாத, பாடல்களை தங்களிடமிருந்த பிரதியிலிருந்து எடுத்து வெளியிட அன்புடன் அனுமதியளித்த அடையாறு மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் நூல் நிலைய நிருவாகிகட்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்துகின்றேன்.

சென்னை,
1952-ஆம் ஸ்ரீ டிசம்பர் மீ 15உ.

**தி. சந்திரசேகரன்.**

# திருமயிலைப் பிரபந்தங்கள்.

## பொருளடக்கம்.


| | | பக்கவெண். |
|---|---|---|
| 1. | முன்னுரை (ஆங்கிலம்) | i |
| 2. | முன்னுரை (தமிழ்) | v |
| 3. | திருமயிலைப் பிள்ளைத்தமிழ் பருவ அட்டவணை | xiii |
| 4. | திருமயிலைக் கோவை பொருளட்டவணை | xiv |
| 5. | திருமயிலைப் பிள்ளைத் தமிழ் மூலம் | 1 |
| 6. | திருமயிலைக் கோவை | 45 |
| 7. | திருமயிலை உவமை வெண்பா | 109 |
| 8. | திருமயிலை வெண்பா | 127 |
| 9. | திருமயிலைக்கோவை : பிற்சேர்க்கை | 141 |
| 10. | திருமயிலைப் பிள்ளைத்தமிழ் பாட்டு முதற் குறிப்பு அகராதி | 151 |
| 11. | திருமயிலைக் கோவை பாட்டு முதற் குறிப்பு அகராதி. | 153 |
| 12. | திருமயிலை உவமை வெண்பா பாட்டு முதற் குறிப்பு அகராதி. | 159 |
| 13. | திருமயிலை வெண்பா பாட்டு முதற் குறிப்பு அகராதி | 161 |


---

## திருமயிலைப் பிள்ளைத்தமிழ்.

### பருவ அட்டவணை.


| தொடர் எண். | பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1. | காப்புப் பருவம் | 3 |
| 2. | செங்கீரைப் பருவம் | 8 |
| 3. | தாலப் பருவம் | 12 |
| 4. | சப்பாணிப் பருவம் | 16 |
| 5. | முத்தப் பருவம் | 20 |
| 6. | வருகைப் பருவம் | 24 |
| 7. | அம்புலிப் பருவம் | 28 |
| 8. | சிற்றிற் பருவம் | 32 |
| 9. | சிறுபறைப் பருவம் | 36 |
| 10. | சிறுதேர்ப் பருவம் | 40 |


---

# திருமயிலைக் கோவை.

## பொருளட்டவணை.


| வரிசை எண். | பொருள். | பக்க வெண். |
|---|---|---|
| 1. | விநாயகர் வணக்கம் .. .. .. .. | 47 |
| 2. | அவையடக்கம் .. .. .. .. .. | 47 |

### 1. களவியல்.

3. கைக்கிளை .. .. .. .. .. 47

காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல்.

4. தலைவிப் புணர்ச்சி .. .. .. .. .. 48

இரந்து பின்னிற்றற் கெண்ணல் ; இரந்து பின்னிற்றல், முன்னிலையாக்கல், வண்டோச்சி மருங்கணைதல், மெய் தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல், இடம்பெற்றுத் தழால், வழிபாடு மறுத்தல், இடையூறு கிளத்தல், நீடு நினைந்து இரங்கல், மறுத்தெதிர் கோடல், வறிது நகை தோற்றல், முறுவற் குறிப்பு உணர்த்தல், முயங்குதல் உறுத்தல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல், ஏற்புறவணிதல்.

5. வன்புறை .. .. .. .. .. 50

அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல், பெருநயப்பு உரைத்தல், தெய்வத்திறம் பேசல், பிரியேன் என்றல், பிரிந்துவரு கென்றல், இடம் அணித்து என்றல்.

6. தெளிதல் .. .. .. .. .. 52

7. பிரிந்துழி மகிழ்தல் .. .. .. .. 52

செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லல், பாகனொடு சொல்லல்.

8. பிரிந்துழிக் கலங்கல் .. .. .. .. 52

ஆயவெள்ளம் வழிபடக் கண்டு அது மாயமோ என்றல், வாயில் பெற்றுய்தல், பண்பு பாராட்டல், பயந்தோர் பழிச்சல், கண்படை பெறாது கங்குல் நோதல்.

| வரிசை எண். | பொருள். | பக்க வெண். |
| --- | --- | --- |
| 9. | இடந்தலைப்பாடு .. .. .. .. .. | 53 |

தந்த தெய்வம் தருமெனச் சேறல், முந்துறக் காண்டல், முயங்கல், புகழ்தல், உடன்புணர் ஆயத்து உய்த்தல்.

| | | |
| --- | --- | --- |
| 10. | பாங்கற் கூட்டம் .. .. .. .. .. | 54 |

தலைவன் பாங்கனைச் சார்தல், பாங்கன் தலைவனை உற்று வினுதல், தலைவன் உற்றது உரைத்தல், பாங்கன் கழறல், தலைவன் கழற்றெதிர் மறுத்தல், பாங்கன் தலைவனைப் பழித் தல், தலைவன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல், பாங்கன் தன் மனத் தழுங்கல், பாங்கன் தலைவனோ டழுங்கல், பாங்கன் எவ்விடத்தெவ் வியற்றென்றல், பாங்கன் இவ்விடத் திவ்வியற் றென்றல், பாங்கன் தலைவனைத் தேற்றல், பாங்கன் குறிவழிச் சேறல், பாங்கன் இறைவியைக் காண்டல், பாங்கன் இகழ்ந்த தற் கிரங்கல், தலைவனை வியத்தல், தலைவியை வியத்தல், தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல், தலைவன் சேறல், தலைவியைக் காண்டல், கலவியின் மகிழ்தல், தலைவியைப் புகழ்தல், தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல், தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

| | | |
| --- | --- | --- |
| 11. | மதியுடம்பாடு .. .. .. .. .. | 58 |

நாற்ற முதலிய ஏழானும் ஐயமுற்று ஓர்தல், அவ்வகை தன்னால் ஐயந்தீர்தல், தனிவியந்துரைத்தல், நடுங்க நாட்டம், பெட்டவாயில் பெற்றுச் சேறல், இரவு வலியுறுத்தல், ஊர் வினுதல், பேர்வினுதல், மரை வினுதல், பன்றி வினுதல், மானெடு மனம் வினுதல், வழி வினுதல், மொழியாமை வினுதல், இடை வினுதல், யாரே இவர் மனத்தெண்ணம் யாது ? எனத் தேர்தல், எண்ணந்தெளிதல், இருவரும் உள்வழி ஒருமையிற் போதல், கையுறை ஏந்தி நின்று அவ் வகை வினுதல், பாங்கி எதிர் எதின்மொழி கொடுத்தல், இறைவனை நகுதல். மதியினில் அவரவர் மனக்கருத்துணர் தல்.

| | | |
| --- | --- | --- |
| 12. | பாங்கிக்கூட்டம் .. .. .. .. .. | 61 |

தலைவன் உட்கோள் சாற்றல், பாங்கி குலமுறை கிளத்தல், தலைவன் தலைவி தன்னை உயர்த்தல், பாங்கி அறியாள் போன்று வினுதல், இறையோன் இறைவிதன்மை இயம்பல், பாங்கி தலைவி அருமை சாற்றல், தலைவன் இன்றியமையாமை இயம்பல், நின்குறை நீயே சென்றுரை என்றல், பாங்கியைத் தலைவன் பழித்தல், பாங்கி பேதமை ஊட்டல், காதலன் மூதறி வுடைமை மொழிதல், முன்னுறு புணர்ச்சி முறையுறக்

| வரிசை எண். | பொருள். | பக்க வெண். |
| --- | --- | --- |

கூறல், தன்னிலை தலைவன் சாற்றல், பாங்கி உலகியல் உரைத்தல், தலைமகன் மறுத்தல், பாங்கி அஞ்சி அச்சுறுத்தல், தலைவன் கையுறை புகழ்தல், பாங்கி மறுத்தல், ஆற்ரு நெஞ்சினெடு அவன் புலத்தல், பாங்கி ஆற்றுவித்து அகறல், தலைவன் மடலே பொருளென மதித்தல், பாங்கிக்கு உலகின் மேல்வைத்து உரைத்தல், அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல், தலைமகள் அவயவத்து அருமை சாற்றல், தலைமகன் தன்னைத்தானே புகழ்தல், பாங்கி அருளியல் கிளத்தல், பாங்கி கொண்டுநிலை கூறல், தலைவி இளமைத் தன்மை பாங்கி தலைமகற்கு உணர்த்தல், தலைவி வருத்திய வண்ணம் தலைவன் உரைத்தல், தலைவி செவ்வியருமை பாங்கி செப்பல், தலைவி செவ்வியெளிமை தலைவன் செப்பல், பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதல், அந்நகை பொருது அவன் புலம்பல், தலைவனைப் பாங்கி தேற்றல், பாங்கி கையுறை ஏற்றல், தலைவன் ஆற்றல், இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல், இறைவி அறியாள் போன்று குறியாள் கூறல், பாங்கி இறையோற் கண்டமை இயம்பல், பாங்கியைத் தலைவி மறைத்தல், பாங்கி என்னை மறைப்பதென்னெனத் தழால், பாங்கி கையுறை புகழ்தல், தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல், பாங்கி மறுத்தற்கருமை காட்டல், தலைவன் குறிப்பு வேருக நெறிப்படக் கூறல், பாங்கி தலைவியை முனிதல், தலைவி பாங்கியை முனிதல், தலைவி கையுறை ஏற்றல், தலைவி கையுறை ஏற்றமை பாங்கி தலைவற் குணர்த்தல், பாங்கி குறியிடங் கூறல், குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல், குறியிடத்து உய்த்து நீங்கல், தலைவன் இடத்து எதிர்ப்படுதல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல், தலைவன் தலைவியை ஆயத்துய்த்தல், எய்திப் பாங்கி கையுறை காட்டல், பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல், பாங்கி தலைவிக்கு ஓம்படை சாற்றல், விருந்து விலக்கல், விருந்து இறை விரும்பல்.

| 13. | பகற்குறி .. .. .. .. .. | 70 |
| --- | --- | --- |

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டிரங்கல், பாங்கி புலம்பல், தலைவனிடம் தலைவி வருந்தல், தலைவியைப் பாங்கி கழறல், தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல், பாங்கியொடு பகர்தல், பாங்கி அஞ்சி அச்சுறுத்தல், நீங்கற்கு அருமை தலைவி நினைந்து இரங்கல், தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல், பாங்கி சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறுத்தல், தலைவிக்குத் தோழி முன்னிலைப் புறமொழி மொழிந்து இற்செறிப்பு உணர்த்தல், 'பாங்கி தலைவன் முன்

| வரிசை எண். | பொருள். | பக்க வெண். |
|---|---|---|
| | நின்று இற்செறிப்பு உணர்த்தல், பாங்கி ஓம்படை சாற்றல், தலைவன் தஞ்சம் பெறுது நெஞ்சொடு கிளத்தல். | |
| 14. | **பகற்குறி யிடையீடு** .. .. .. .. | 73 |
| | பாங்கி இறைவனைக் குறிவரல் விலக்கல், பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கல், பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல், பின்னுல் நெடுந்தகை குறிவழி நீடுசென்று ஏங்கல், வறுங்களம் நாடி மறுகல், தலைவி வாழும் ஊர்நோக்கி வருந்தல். | |
| 15. | **இரவுக்குறி** .. .. .. .. .. | 74 |
| | இறையோன் இரவுக்குறி வேண்டல், பாங்கி நெறியினது அருமை கூறல், தலைவன் நெறியினது எளிமை கூறல், பாங்கி அவன் நாட் டணியியல் வினுதல், தலைவன் அவள் நாட்டணி யியல்வினுதல், பாங்கி தன்நாட் டணியியல் சாற்றல், இறை விக்கு இறையோன் குறி அறிவுறுத்தல், நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல், நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத் தல், நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல், பாங்கி தலைவனைக் குறியிடம் நிறீஇத் தாய் துயிலறிதல், இறைவிக்கு இறையோன் வரவறிவுறுத்தல், குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல், குறியிடத்துய்த்தல், தலைவன் குறியிடத்து எதிர்ப்படுதல், தலைவி நெறியினது அருமை நினைந்து இரங்கல், தலைவன் தலைவியைத் தேற்றல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல், தலைவனைத் தலைவி கங்குல்வரல் விலக் கல், தலைவன் தலைவியை இல்வயின் விடுதல், தலைவியை எய்திப் பாங்கி கையுறை காட்டல், பாங்கி தலைவியை இற்கொண்டு ஏகல், பாங்கி இறைவனை வரவு விலக்கல், தலை மகன் மயங்கல், தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல், திருமகட் புணர்ந்தவன் சேறல். | |
| 16. | **இரவுக்குறி இடையீடு** .. .. .. .. | 78 |
| | இறைவிக்கு இகுளை இறைவர வுணர்த்தல், தலைவி குறி மருண்டமை பாங்கிக்கு உணர்த்தல், பாங்கி தலைவன் தீங் கெடுத்து இயம்பல், புலந்தவன் போதல், புலந்தபின் வறுங் களம் தலைவிகண் டிரங்கல், தலைவி தன்துணைக்குரைத்தல், தலைமகள் அவலம் பாங்கி தணித்தல், இறைவன்மேல் பாங்கி குறிபிழைப்பு ஏற்றல், இறைவிமேல் இறைவன் குறி பிழைப்பு ஏற்றல், தலைவி குறிமருண்டமை பாங்கி தலைவர்க்கு உணர்த்தல், அவன்மொழிக் கொடுமை சென்று பாங்கி தலைவிக்கு இயம்பல், என்பிழைப்பு அன்று என்று இறை | |

| வரிசை எண். | பொருள். | பக்க வெண். |
|---|---|---|
| | மகன் நோதல், தாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர் கடுகல், நிலவு வெளிப்படல், கூகை குழறல், கோழிகுரல் காட்டல். | |
| 17. | **வரைதல் வேட்கை** .. .. .. .. | 81 |
| | தலைவியைப் பாங்கி பருவரல் வினவல், தலைவி அருமறை செவிலி அறிந்தமை கூறல், தலைவி தலைவன் வருந் தொழிற்கு அருமை சாற்றல், தலைவி தலைமகன் ஊர்க்குச் செல ஒருப்படுதல், பாங்கி தலைவனைப் பழித்தல், தலைவி இயற்படமொழிதல், கனவு நலிவுரைத்தல், கவின் அழிபு உரைத்தல், தன்துயர் தலைவர்க்கு உரைத்தல் வேண்டல், நின்குற்றம் நீயே சென்றுரை என்றல், அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி, ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி, காம மிக்க கழி படர்கிளவி, தன்னுள் கையாறு எய்திடு கிளவி, தலைவி நெறி விலக்குவித்தல், தலைவி குறி விலக்குவித்தல், வெறிவிலக்கு வித்தல், பிறர்விலக்குவித்தல், குரவரை வரவெதிர் கொள்ளு வித்தல். | |
| 18. | **வரைவு கடாதல்** .. .. .. .. | 83 |
| | வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல், அலர் அறி வுறுத்தல், தாய் அறிவுறுத்தல், வெறி அச்சுறுத்தல், பிறர் வரைவு உணர்த்தல், வரைவு எதிர்வு உரைத்தல், வரையு நாள் உணர்த்தல், தலைமகள் அறிவு அறிவுறுத்தல், குறி பெயர்த்திடுதல், பகல் வருவானை இரவு வருகென்றல், இரவு வருவானைப் பகல் வருகென்றல், பகலினும் இரவினும் பயின்று வருகென்றல், பகலினும் இரவினும் அகல் இவண் என்றல், காவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல், ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி, ஆற்ருத் தன்மை ஆற்றக் கூறல், காவல் மிகவுரைத்தல், காமம் மிக உரைத்தல், கனவுநலி உரைத்தல், கவின் அழிபு உரைத்தல். | |
| 19. | **ஒருவழித் தணத்தல்** .. .. .. .. | 86 |
| | தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல், பாங்கி விலக்கல், தலைவன் நீங்கல் வேண்டல், தலைமகனைப் பாங்கி விடுத்தல், பாங்கி தலைவிக்குத் தலைவன் செலவுணர்த்தல், தலைவி நெஞ் சொடு புலத்தல், காமம் மிக்க கழிபடர் கிளவி, தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல், பாங்கி தலைவிக்கு இறையோன் வந்தமை உணர்த்தல், வந்தோன் தன்னெடு நொந்து வினுதல், தலைவன் பாங்கியொடு நொந்து வினுதல், பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல். | |

வரிசை எண். பொருள். பக்க வெண்.

20. **வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் .. .. 88**

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல், நின் பொருட் பிரிவுரை நீயவட்கென்றல், நீடேன் என்று அவன் நீங்கல், பாங்கி ஓடரிக்கண்ணிக்கு அவன் செலவுணர்த்தல், தலைமகள் இரங்கல், பாங்கி கொடுஞ்சொற் சொல்லல், தலைவி கொடுஞ்சொற் சொல்லல், வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல், பருவம் கண்டு பெருமகள் புலம்பல், இகுளை வம்பிது வென்றல், இறைமகள் மறுத்தல், அவர் தூதாகி வந்தது இப்பொழுதெனத் தோழி சாற்றல், தலைவி ஆற்றல், அவன் அவண் புலம்பல், பாகனொடு சொல்லல், மேகத்தொடு சொல்லல், பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவு அறிவுறுத்தல், வலம்புரிக் கிழத்தி வாழ்த்தல், தலைவனைப் பாங்கி நினைந்தமை செப்பல், பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்தமை கூறல்.

## 2. வரைவியல்.

21. **வரைவு மலிதல் .. .. .. .. .. 90**

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உரைத்தல், காதலி நற்றாய் உள்ள மகிழ்ச்சி உள்ளல், பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை காதலிக்கு உரைத்தல், தலைமகள் உவகை உளத்தொடு கிளத்தல், தலைவனைப் பாங்கி வாழ்த்தல், தலைவி மணம் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல், பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல்

22. **அறத்தொடு நிலை .. .. .. .. .. 93**

தோழி கண்ணீர் துடைத்தல், தலைவி கலுழ்தற் காரணங் கூறல், தலைவி தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல், தலைவன் இகந்தமை எய்தக் கூறல், பாங்கி இயற்பழித்து உரைத்தல், தலைவி இயற்பட மொழிதல், தெய்வம் பொறைகொளச் செல்குவதென்றல், இவ்வயிற் செறித்தமை கூறல், செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல், செவிலி எறிவளை வேற்றுமைக்கு ஏது வினுதல், வெறிவிலக்கல், வெறி விலக்கியவழிச் செவிலி வினுதல், பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல், புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல், களிறுதரு புணர்ச்சி, தலைமகள் மெய்வேற்றுமை கண்டு செவிலியை வினுதல், செவிலி நற்றாய்க்கு முன்னிலையான் அறத்தொடு நிற்றல்.

வரிசை எண். பொருள். பக்க வெண்.

23. உடன் போக்கு .. .. .. .. .. 95

பாங்கி தலைவர்க்கு உடன்போக்கு உணர்த்தல், தலைவன் மறுத்தல், பாங்கி உடன்படுத்தல், தலைவன் போக்கு உடன் படுதல், பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல், தலைவி நாணழிபு இரங்கல், பாங்கி கற்பு மேம்பாடு புகறல், தலைவி ஒருப்பட்டெழுதல், பாங்கி சுரத்தியல்பு உணர்த்தல், சுரத்தி யல்பு உரைத்துழிச் சொல்லல், பாங்கி கையடை கொடுத்தல், வைகிருள்விடுத்தல், அவன் சுரத்து உய்த்தல், அசைவு அறிந்து இருத்தல், உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந் துரைத் தல், கண்டோர் இரத்தல், காவின் விலக்கல், தன்பதி அணிமை சாற்றல், தலைவன் தன்பதி அடைந்தமை சாற்றல்.

24. கற்பொடு புணர்ந்த கௌவை .. .. .. 98

செவிலி பாங்கியை வினுதல், பாங்கி செவிலிக்கு உணர்த்தல், செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல், செவிலி தன் அறிவின்மை தன்னை நொந்து உரைத்தல், செவிலி தெய்வம் வாழ்த்தல், செவிலி நற்றுய்க்கு அறத்தொடு நிற்றல், நற்றுய் பாங்கி தன்னேடு புலம்பல், நற்றுய் பாங்கி யர் தம்மொடு புலம்பல், நற்றுய் அயலார் தம்மொடு புலம் பல், நற்றுய் பயிலிடம்தன்னெடு புலம்பல், நிமித்தம் போற்றல், நற்றுய் சுரந்தணிவித்தல், நற்றுய் தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல், இளமைத் தன்மைக்கு உளமெலிந்து இரங்கல், அச்சத் தன்மைக்கு அச்சமுற்று இரங்கல், ஆயமுந் தாயும் அழுங்கக் கண்டு காதலின் இரங்குங் கண்டோர் இரங்கல், செவிலி ஆற்றுத் தாயைத் தேற்றல், செவிலி முக்கோற் பகவரை வினுதல், மிக்கோர் ஏதுக் காட்டல், எயிற்றியொடு புலம்பல், குரவொடு புலம்பல், சுவடு கண்டு இரங்கல், கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல், அவர் புலம்பல் தேற்றல், புதல்வியைக் காணுது கவலை கூர்தல்.

25. மீட்சி .. .. .. .. .. .. 102

சேண் அகன்றமை செவிலி தாய்க்கு உரைத்தல், தலைவன் மீண்டு தம்பதி அடைந்தமை சாற்றல், தலைவி முன்செல்வோர் தம்மொடு தம்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல், முன் செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தல், பாங்கியர் கேட்டு நற்றுய்க்கு உணர்த்தல், நற்றுய் உளங்கொள வேலனை வினுதல்.

| வரிசை எண். | பொருள். | பக்க வெண். |
| --- | --- | --- |
| 26. | தன்மனை வரைதல் .. .. .. .. | 103 |

நற்றாய் மணன் அயர் வேட்கையில் செவிலியை வினுதல், செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல், வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்.

## 3. கற்பியல்.

| | | |
| --- | --- | --- |
| 27. | இல்வாழ்க்கை .. .. .. .. .. | 103 |

தலைவனைப் பாங்கி வாழ்த்தல், பாங்கி தலைவியைத் தலைவன் வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை உரையாய் என்றல், தலைவி வருந்தாதிருந்ததற்குக் காரணங்கூறல், பாங்கி தலைவனை வரையுநாள் அளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல், மன்றல் மனைவரு செவிலிக்கு இகுளை இன்புற உரைத்தல், பாங்கி செவிலிக்கு நன்மனை வாழ்க்கைத் தனமை உரைத்தல், செவிலி, பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தல், செவிலி, தன்மனை வாழ்க்கைத் தன்மை உரைத்தல், செவிலி, நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்.

| | | |
| --- | --- | --- |
| 28. | பரத்தையிற் பிரிவு .. .. .. .. | 105 |

### 1. இளையகலாம்.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏதுவிதாம் இவை இறைவிக்கு என்றல், தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல், ஈங்கிது என்னெனப் பாங்கி வினுதல், இறைமகன் புறத்தொழுக்கு இறைவி பாங்கிக்கு உணர்த்தல், தலைவியைப் பாங்கி கழறல், செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல், அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக் கூறல், பரத்தையர் கண்டு பழித்தல், தலைவன் வரவுகண்டு வந்து வாயில்கள் மொழிதல், தலைவன் வரவு பாங்கி தலைவிக்கு உணர்த்தல், தலைவி எதிர் கொண்டு பணிதல், தலைவன் வாயில் வேண்டல், தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல், புணர்ச்சியின் மகிழ்தல்.

### 2. முதியகலாம்.

வெள்ளணி அணிந்து விடுத்தல், தலைவன் தன்மனத்து உவகை கூர்தல், தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல், தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல், பாணன் முதலாப் பாங்கன் ஈறாப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் மறுத்தல், பாணன் மறுத்தல், வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல், விறலி வாயில் மறுத்தல், கூத்தர் வாயில் மறுத்தல், பாங்கி மறை.

T. 1906

# திருமயிலைப் பிள்ளைத் தமிழ்

## (திருமயிலைச் சிங்கார வேலர் பிள்ளைத் தமிழ்)

(தாண்டவராயப் புலவர் இயற்றியது)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ்.

### கூத்தாடும் விநாயகர் வணக்கம்.

சீர்கொண்ட முத்தமிழ்சொல் நாவல ருளத்துநற்
செழுமறைகளின் சிரத்தும்
தென்மயிலை யூரகத் தயன்முதலி யோர்தொழுந்
திருக்கபா லீசரென்னப்
பேர்கொண்ட வேணிப்பி தாமருவு கோயிற்
பிறங்குகுண பாலிடத்தும்
பேரின்ப வீடுதவு கூத்தாடு மைங்கரப்
பிள்ளைசர ணந்துதிப்பாம்
தார்கொண்ட பன்னிரு புயத்தாறு முகவனைச்
சங்கரித ரும்புதல்வனைச்
சரவணனை முருகனைக் குகனையரி மருகனைச்
சடாட்சரத் திருமந்த்ரனை
வேர்கொண்ட மாமுதற் சூரனைக் கிரவுஞ்ச்
வெற்பினைக் கடலைவென்ற
வீரனைச் சிங்கார வேலனைப் பரவுமென்
மெய்ப்புகழ் தமிழ் தழைகவே.

## காப்புப் பருவம்.

### திருமால்.

முகில்வண்ணன் மரகத மெனும்பசிய மணிவண்ணன்
முதுகருங் கடலின் வண்ணன்
முகைவிண்டு தேன்சொரியு நறியபூ வைப்பூவின்
முழுநீல வண்ண னம்பொன்
துகில்வண்ணன் வித்துரும வாய்வண்ண னம்புயத்
துணைத்தாளின் வண்ணன் வண்டார்
துழாய்மவுலி வண்ணனென் றுழ்வார்கள் செந்தமிழைச்
சொலும் வண்ணனைப் பரவுவாம்
அகில்வண்ண மிலகிரு தனக்கோட்டு வள்ளிகட்
கஞ்சனமு மெழுதி நுதலின்
அழகொழுகு பொட்டிட்டு வெட்சிமலர் கூந்தலி
னணிந்தடிக் ளன்ப டியன்மேல்

மிகில்வண்ண வேடன் கணைக்கினைவ னென்றுசரண்
மேவு மெளனயாட் கொண்டருள்
வேடனைத் தென்மயிலை யூரனைச் சிங்கார
வேலனைக் காத்த ருளவே. (1)

**கபாலீச்சுரர்.**

(வேறு.)

அந்தண் டைம்பா னதிசூழ்நற் பிரதக்கண
ரஞ்சம் பேந்தா சறுவேளைப் பொடித்தவர்
அன்பர் தேர்ந்தோ தியபாடற் குறித்துவே
ளங்கம் பூம்பாவை யதாகப் படைத்தவர்
கந்தஞ் சேம்பார் புன்னைகத் தடத்தினர்
கண்கண் டைண்டோர் மயில்பூசிக்க வுற்றவர்
கந்தந் தேங்கால் கபாலக் கரத்தினர்
கஞ்சம் போன்ரு டியதாளைப் பழிச்சுதும்
எந்தந் தீங்கியா வையும்மாடத் துரத்திநல்
லின்பங் காண்கா ணைமோனப் பொருட்சொலில்
எங்குந் தாந்தா மெனுஞானக் குருக்களை
யென்றன் சேண்கோ புரவாயிற் றெருத்தலை
சந்தங் கோங்கார் நிறைகூடற் றலத்துயர்
தங்கந் தோன்ரு தனமீதிற் செழித்திடும்
சங்கஞ் சேர்ந்தாய் தமிழ்நூலைத் தெரித்தரு
டங்குஞ் சோகோங்கா கியசேயைப் புரக்கவே. (2)

**கற்பகவல்லி அம்மை.**

(புய வகுப்பு.)

கனகரை யட்டவர் புதல்வர் தமக்கதி
கதியருள் பச்சைநன் மெய்யர்பிற் ரேற்றிய
கவுரியை யொட்டலர் வளவர் துதித்திடு
கௌரியைப் பெற்றருள் செல்வியைத் தேக்குறு
கருமுகி லொத்திடு மலரள கத்தொளிர்
கருணை யுவட்டெழு கண்ணியைப் பூக்கொடு
கருதடி யர்க்கருள் கனிதரு மெய்க்கதி
கரிசற வுற்றருள் கன்னியைச் சீர்த்திகழ்
தினகரர் முற்பொலி யருண னிறத்தொளிர்
திகழ்வடி வத்தளிர் மெல்லியைப் பாக்கொடு
தினமும் வழுத்தினர் விழிமுன் னுதித்திடு
தெளிவுற கைக்கரு நெல்லியைக் காத்தருள்
திரள்கனி யைப்பொழி மலர்மது வைக்கடை
திரையமு தைப்பொருள் சொல்லியைச் சீர்செறி

திருமயி லைச்சிவன் மனைவியை யற்புத
சிலைமகள் கற்பக வல்லியைப் போற்றுதும்
மனகவ சத்திரன் முனிவ ரகத்தினை
வடவைய னற்சிறை யில்லைவிட் டார்த்திடு
மகியைமி குத்தெர்ளிர் சரவண நற்புனல்
வனசம லர்ச்சிறு பள்ளியிற் கார்த்திகை
வனமுலை தொட்டுணு மகவையி கற்பொரு
மறவவு ணர்க்குல வெய்யனைத் தாழ்த்துயர்
மகபதி யைத்தரு வளர்கக னத்தினின்
மகிழுவ மைத்திடு மையனைக் கூர்த்தயில்
அனகனை வைப்புறு சமணர்ம தத்தினை
யழியநி னைத்தர சுய்யவுற் றேட்டினை
அனலிடை யுற்றபின் னவர்சப தப்படி
யலைநதி யிட்டெதிர் செல்லமுற் காட்டிய
அதிசய சித்தனை யலகில்ப வுத்தரை
யசனிகொ லப்பணி சைவனைத் தீர்த்தர்கள்
அரியய னைப்பழ வடியரெனச் செய்த
வழகயில் கைக்கொளு மெய்யனைக் காக்கவே. (3)

**திருமகள்.**

(வேறு.)

சொற்கமல வானுலக மிவ்வுலகி லுண்டென்று
சுருதிதிரு மால்சதுமுகன்
சுக்கிரன் முதற்றேவர் தவமுனிவ ரெழுவருந்
துதிசெயுந் தென்மயிலைவாழ்
விற்கமல வெண்டிங்கள் செஞ்சடையின் மேல்வைத்த
விமலக்க பாலீசர்தம்
மெய்ப்பாதி குடிகொண்ட கற்பகமின் னுளுதவும்
வேலன்ற னைப்புரக்க
பற்கமல முத்தமும் தமிழ்க்குமுதிர் பவளமும்
பணைத்தோளி னுக்குவேயும்
பாட்டளிது தைந்தபைங் கூந்தற்கு முகிலுமிணை
பகர்தலரி தானவடிவப்
பொற்கமல மீதுநற் செங்கோ னடாத்தவரு
பூவேந்தர் வண்புயத்தும்
புயல்வண்ணன் மருமத்து மகலாதி ருக்குநம்
பொன்மா தெனுஞ்செல்வியே. (4)

**கலைமகள்.**

பண்டிங்க ளப்பரிய தமிழ்பாடு மருணகிரி
பாமாலை கண்டுவேதப்

பயனையொரு பாட்டாக நக்கீரர் புகல்கின்ற
பாக்கண்டு மோர்காசெடைக்
கொண்டிங்க ளக்கிரிடை யேகரைத் தாலென்ன
கூறுமென் புன்சொல்கொளும்
குருபரனை மயிலைவளர் சிங்கார வேலேந்து
குமரனைத் தனிப்புரக்க
வெண்டிங்கள் வளர்பக்க நவமியிற் பூசித்த
பேருளஞ் சேர்பாரதி
பேரந்த காரமடர் ஞானவா தித்தவொளி
பெருகவருள் பனுவலாட்டி
வெண்டிங்கள் மேனியொடு செவ்வாயு மன்மதனு
மிக்கவிழி யும்புருவமும்
மேவியா மும்பொழியும் வெள்ளியிழையு மஞ்சதிரை
வேல்குழலு மிசைவாணியே. (5)

**கூத்தாடும் விநாயகர்.**

தண்கோட்டு வெண்மதியை வானதியை யெட்டலாற்
சடைபோல மடல்விரிதலால்
தனிமூன்று கண்களுள வாற்றென்ன மரமெலாந்
தாணுவென் னிறைமயிலைவாழ்
வெண்கோட் டெழுத்தாணி கொண்டொருவி யாதன்சொல்
வேதப்பொ ருட்பாரதம்
வெற்பகத் தெழுதவல கற்பகச் செஞ்சரண
மேன்மையுற வஞ்சலிப்பாம்
திண்கோட்டு மலையிமய மகண்முலைக் கோட்டூறு
தென்தமிழ்க் கடலையுண்டு
சிவசமய ரிடைமின்னி மறுசமயர் நெஞ்சந்
திடுக்கிடக் குமுறியார்த்து
விண்கோட்டி னவுண்ட வங்கமொரு பெண்ணுக
மெய்யமுத மழை[கள்] பொழியும்
மேகமென முன்வந்த பாலனைச் சிங்கார
வேலனைக் காத்தருளவே. (6)

**நான்முகன்.**

உரையைப் படைத்தநால் வேதங்க ளும்படைத்
துபநிடத மும்படைத்தே
ஓதுமிதி காசமா றங்கம்பு ராணமீ
ரொன்பதினையும் படைத்துத்
தரையைப் படைத்தமர ருலகைப்ப டைத்துயிர்க
டம்மைப்ப டைத்ததன்றித்
தன்னைப்ப டைத்தமா றன்னைப் படைக்கவல
சதுமுகனை யஞ்சலிப்பாம்

பரையைப்ப டைத்தசிவ னுணரவரி தாமொரு
பதப்பொருளு ணர்த்துகுருவை
பாகீர திக்குமுமை மாதுக்கு நடுவுநிலே
பார்த்தொழுகு கின்றசுதனை
விரையைப் படைத்தநறு நீபமல ருடன்வெட்சி
வேண்டித் தரித்தபுயனை
மிக்கபுகழ் திருமயிலே மேவிவளர் சிங்கார
வேலனைக் காத்தருளவே. (7)

### வடுகக் கடவுள்.

(வேறு.)

கொஞ்சு கிளிநான் மறையோதுங் குயிலி
னிசையாழ் போற்கூவும்
குளிர்கா வினிற்பைந் தோகைநடங் குலவுஞ்
செந்நெல் கன்னலென
விஞ்சு வளஞ்சேர் தென்மயிலே விசாகப்
பெருமாள் குகப்பெருமாள்
வெற்றிப் பெருமாள் சிங்கார வேலப்
பெருமா டனைக்காக்க
துஞ்ச லிலாதான் புவிகாக்குந் துத்திப்
பணியா னிடிக்குரலான்
சூலப் படையான் விரிசடையான் துகிலேப்
புனையா மருங்குடையான்
வஞ்சர் மனம்போற் கஞ்சுகியான் மறைத்தார்
பிரமன் சிரக்கரத்தான்
மதுரத் தமிழோர் கொண்டாடும் வடுவில்
வடுகப் பெருமானே. (8)

### வென்றிவேல்.

(வேறு.)

மயன் மனத்தி னுலமைத்த பசும்பொனுல கத்தோர்
மகிதலத்தோர் பாதலத்தோர் வணங்குமயி லேயில்வாழ
குயவரியி னதளாடை யுடுத்தகபா லீசர்
குமரனென வந்தருள்செய் குருபரனைக் காக்க
அயனரியை யயனரிபோற் றுரந்தசிங்க முகவன்
அசமுகிதன் வயிற்றுதித்த வலகில்பெரும் படையால்
செயமிகுமச் சூரனுயி ரன்னமெனப் புசித்துத்
தென்கடனீ ராற்றுரகந் தீர்ந்தகதிர் வேலே. (9)

**கார்த்திகை மாதர்.**

(வேறு.)

அகனகம் விளக்கியெழு சலதியும்வி ளக்கிவி
யகிலமும்வி ளக்கிநகர் தாழ்
அடவியும்வி ளக்கிமலர் குவளையும்வி ளக்கியல
ராம்பலவும் விளக்கி
ககனமும்வி ளக்குசடை யரவினைவி ளக்கியிருள்
கந்தரம்வி ளக்கியரனார்
கண்ணெனவி ளங்குமதி தன்மனைவி யெனவந்த
கார்த்திகைப் தம்பணிருவாம்
மகனகம கிழ்ச்சியுறு சசிமகளை னப்புவிசொன்
மடமயின டித்தபுயனை
மதுநுகர்ம லைக்குறவர் சிறுமிதன வெற்பணைய
மடல்கொளும யற்குமரனை
இகனகமெ னக்கடவு ளதிவதமி யற்றவுண
ணிகல்கொளநி னைத்தகுகனை
இமையவர்வ ழுத்தவள மிகுமயிலை யிற்குடிகொ
ளெழிலயில னைக்காக்கவே. (10)

**காப்புப் பருவம் முற்றிற்று.**

---

## 2. செங்கீரைப் பருவம்.

மருமமிசை யிலகியப தக்கமுங் காதிலணி
மகரகுண் டலமுநுதலில்
வச்சிரம ழுத்துசிறு சுட்டியொடு கட்டியம
ணிப்பட்ட மும்மகுடமும்
பருமவச லத்திணைசொன் மொய்ம்பிலணி வலயமும்
பன்னிருக ரக்கடகமும்
பைம்பொனரை வடமுமரை ஞாணுநூ புரமுமிரு
பங்கயத் தாளுமெண்மைத்
தருமநிறை முந்நூலு மிலகுமீ ராறுகட்
சண்முகமு மன்பர்காணத்
தண்குயிலின் மீதெழுமி ளம்பரிதி போலிந்த்ர
தனுவைநிகர் மஞ்ஞைமிசையே
திருமயிலை தனின்மருவு சிங்கார வேலனே
செங்கீரை யாடியருளே
செங்கண்மாற் றிருமருக கங்கையா டருமுருக
செங்கீரை யாடியருளே. (1)

மின்னலிணை யாமிடையி னந்நலார் சந்த்ரசிலை
மேடையிடை நின்றுமதியை
* வெண்ணெயென வெண்ணியங் கண்மிசீ ளுங்கிளியை
மெண்மழலை மொழிதிருத்திப்
மின்னல்செறி கூந்தற்கு மணமூட்டு புகையைமழை
பெய்யுமுகி லென்றுநாடிப்
பேடைமயி னடனமிட வண்டிசைகள் பாடும்பெ
ருந்தொண்டை வளநாட்டினில்
கன்னல்செறி யாலையிற் சாருறு போலவே
கமலத்த டாகமேவிக்
கதலிக்கும் வீதிநடு கமுகிற்கு மள்ளர்நடு
கழனிகட் கும்பாய்தலால்
செந்நெல்விளை மயிலைவளர் சிங்கார வேலனே
செங்கீரை யாடியருளே
செங்கண்மாற் றிருமருக கங்கையா டருமுருக
செங்கீரை யாடியருளே. (2)

பாற்கடலெ னப்பெருகு சிவசத்தி தீர்த்தமுறு
பங்கயங் குளிர்ந்துமலரப்
பணைமருப் பெருமைகன் றுந்திமுட்டியதெனப்
பருமடிப் பால்பொழியவிண்
மாற்கம்வரு கதிரவன் தேர்ப்புரவி யஞ்சியே
மனக்கதியின் மிகநடக்க
வானவர்ம டந்தையர்க ளிமையாத கண்கணர
மடந்தையர்கள் கண்களாகச்
சூற்கதிய முகிலுலவு பனசத்தின் முட்கனிச்
சுளைவிண்டுதே றல்சொரியும்
சுரபுன்னை சண்பக மிலஞ்சிநிறை சாலையிற்
றுய்யபூ மாரிபொழியச்
சேற்களுகண் மயிலைவளர் சிங்கார வேலனே
செங்கீரை யாடியருளே
செங்கண்மாற் றிருமருக கங்கையா டருமுருக
செங்கீரை யாடியருளே. (3)

சுக்கிலமெ னுஞ்சிறிய வித்துளே யுயிரெனுஞ்
சூக்மவுட லுடனடங்கிச்
சுரோணிதச் சேற்றினு னன்னமய நீரினுற்
றூலவடி வாயுதித்து
மிக்கபிர பஞ்சத்தின் யானெனதெ னும்பற்றின்
வேரூன்றி யைந்தவாவாம்
வெங்கிளைப ணைத்துவெகு துன்பமே காய்த்தெழில்
வினைத்தச்ச னுற்றறிபடும்

* எண்ணியுங் கண்ணி மீதுங்கிளி—(பாடம்)

இக்கனவை மெய்யென மயக்குமா யந்தவிர்ந்
தேதிலார்க் கெளியனாகி
எதிர்வந்து முத்தியருள் சச்சிதா னந்தகும
ரேசனே குருராசனே
திக்கிலுயர் மயிலைவளர் சிங்கார வேலனே
செங்கீரை யாடியருளே
செங்கண்மாற் றிருமருக கங்கையா டருமுருக
செங்கீரை யாடியருளே. (4)

முகமலரை மோந்துமுத் தாடியிரு விரலினான்
முன்கவுணெ றித்தெயிறிலா
முறுவல்கண் டுளமகிழ்ந் தாறுபால் பீறிடு
முலைக்கண்க யக்கியூட்டி
நகைமலர்வெ தும்பவெந் நீராட்டி நேயமுட
னறுங்குங்கு மங்களாட்டி
நற்றுகிலி னுலொற்றி நெற்றியிற் றிருநீறு
நனிநிலப் பொட்டுமிட்டே
அகல்கலத் தயினிநீர் சுற்றியம் மானீந்த
வணிதொட்டின் மேல்வளர்த்தி
ஐயனே யரையனே யாறுமுக னேயென்றெம்
மம்மைகொண் டாடவந்த
சிகிரிதிகழ் மயிலைவளர் சிங்கார வேலனே
செங்கீரை யாடியருளே
செங்கண்மாற் றிருமருக கங்கையா டருமுருக
செங்கீரை யாடியருளே. (5)

மணிமக ரக்குழை முருகொடு மௌலியும்
வளைசுட் டியுமாட
மார்பணி கண்டிகை நித்தில மாலைமுன்
மலர்வெட் சியுமாடத்
திணிபுய மிசைசெறி கேயூ ரத்தொடு
சிறுகங் கணமாடச்
செய்யபொன் னரைஞா ணரைவட மாடத்
திகழ்பரி புரமாடப்
பணிமொழி கற்பக வல்லிநின் னழகைப்
பரிவொடு கொண்டாடப்
பையவெ ழுந்துத வழ்ந்துக டாட்ச
பங்கய முகமாட
அணிமயி லைப்பதி யானட மாடிட
வாடுக செங்கீரை
யாருமை பெற்றரு ளாறுமு கச்சுத
னாடுக செங்கீரை. (6)

கஞ்சம லர்க்கணை முயன்று பிசைந்துநின்
கைம்மலர் வாடாமே
கனிபவ ளத்துவர் வாயித ழூறிக்
கவினுடை நனையாமே
செஞ்சர ணத்தையு தைத்தழு திருகண்
டிரண்முத் துதிராமே
சிறுபிறை வேணியர் மார்பிடை யாடித்
திருவடி காயாமே
குஞ்சர மென்னவி சைந்து தவழ்ந்து கு
றுங்கடை யேறமே
குவவுத் திண்புய மீதொளி தாவுங்
குழைகள்கு லுங்காமே
அஞ்சம லர்ப்பொய்கை மயிலையி னரசே
யாடுக செங்கீரை
யாருமை பெற்றரு ளாறுமு கச்சுத
னாடுக செங்கீரை. (7)

குண்டலம் வெயிலிர விண்டல மெண்விசை
கொண்டலம் வருகாதும்
குங்கும பரிமள சந்தன மிலகிய
கொங்கல ரணிமார்பும்
மண்டல மிசைமதி மண்டல மெனுமுக
மண்டல மோராறும்
மந்தர கிரிவட விந்தமு நிகரென
வன்றட மிகுதோளும்
தண்டமிழ் பொழிகள்ப யின்றிடு மழலைகள்
தங்கிய கனிவாயும்
சங்கர ரணிபிறை கண்டிகல் திருநுத
றணிலிடு திருநீறும்
அண்டர்க டொழவரு மயிலையி னரசே
யாடுக செங்கீரை
யாருமை பெற்றரு ளாறுமு கச்சுத
னாடுக செங்கீரை. (8)

(வேறு.)

குவடுதோ றின்புறு கோவே செந்தே னுண்டாடும்
குறவர்ம கட்குமணாளா சங்கே தந்தீரும்
தவமுனி வழ்கருள் வாழ்வே செஞ்சேண் மஞ்சாரும்
சரவண நற்சுனை நண்பா விண்பா ரின்பேதப்
புவனம ளித்தவி தாதா வென்று யின்றோர்சொற்
பொருளை விரித்திலை மூகா வம்பா வென்றோதும்
சிவகும ரப்பெரு மானே செங்கோ செங்கீரை
திருமயி லைப்பதி வேலா செங்கோ செங்கீரை. (9)

கரிபொரு மற்பரி காலா டிண்டே ரின்சேனை
  கலைபொரு விற்கணை யாலே கொன்றாய் கண்டோடி
விரிகடன் மத்தியின் மாவாய் நின்றோர் வன்சூரன்
மிகுதவ மற்செய்து மீளா முன்போய் வென்றோய்பொற்
  றருவம ரர்க்கர சானே ணண்பார் பெண்பாகா
    தமிழ்முனி சற்குரு நாதா நம்பா லன்பால்வன்
சிரமிசை வைத்திடு தாளா செங்கோ செங்கீரை
  திருமயி லைப்பதி வேலா செங்கோ செங்கீரை. (10)

**செங்கீரைப் பருவம் முற்றிற்று.**

---

## 3. தாலப் பருவம்.

ஊனே சுமந்த மானிடரு முயர்பொன்
  னுலகிற் புத்தேளும்
ஒளிநான் முகனு மெமதிடுக்கண் ணொழித்தா
  னெனவே முறையிடலால்
கானேர் துளவப் புயக்கமலக் கண்ணன்
  மகர வடிவாகிக்
கடலுட் புகுந்தம் மறைதிருடுங் கள்வ
  னுடலஞ் சிதைத்தெவர்க்கு
நானே தலைவ னெனத்தருக்கி நாம
  நரகந் தனிற்கிடந்து
நையும் பிறவி தொலைவதற்கா நாடிப்
  பரவிப் பூசித்த
மீனே சுரன்றந் தருள்கந்த வேளே
  தாலோ தாலேலோ
வேத புரிவாழ் சிங்கார வேலா
  தாலோ தாலேலோ. (1)

நள்ளின் யாமத் தாலயத்து ணந்தா
  விளக்கைத் தூண்டுகின்ற
நற்புண்ணியத்தா லிப்பிறவி நைந்திப்
  புவியாண் மாவலியாம்
வள்ளி யோன்பான் மூவடிமண் மால்சென்
  றிரக்கும் போதிசைந்த
வண்மை கண்டு தடுத்தகொடு மாபா
  தகத்தான் மூவுலகும்
எள்ளி யேச வொருகணிழந் தெய்தா
  நீசவடி வெய்தி
என்செய் வேமென் றெணத்தவமு மியற்றித்
  தெளிந்து பூசித்த

வெள்ளீ சுரன்றந் தருள்கந்த வேளே
　　தாலோ தாலேலோ
வேத புரிவாழ் சிங்கார வேலா
　　தாலோ தாலேலோ. (2)

வையம் புகழுந் தசரதன் முன்மதலை
　　யாகித் தாடகையை
வதைத்து முனிவன் மகங்காத்து வலியார்
　　சனகன் வில்லொடித்துச்
செய்யசீதை தனைமணந்து செமதக் கினிதன்
　　சுதனை வென்று
சீரை புனைந்து வனஞ்சென்று சிந்து
　　வார மணையடைத்துத்
துய்ய வெள்ளி மலையெடுத்தான் றுவள
　　வீழ்த்தி மனைவிகொண்டு
துங்க வயோத்தி நகர்மகுடஞ் சூடி
　　ராமன் வந்திறைஞ்சும்
மெய்ய கபாலீ சுரன்றந்த வேளே
　　தாலோ தாலேலோ
வேத புரிவாழ் சிங்கார வேலா
　　தாலோ தாலேலோ. (3)

ஒளிவிண் ணுலகத் திந்திரனுக் கொற்றைக்
　　கவிகை நிழற்றுதல்போல்
ஓங்கும் பாரிசாத வல்லிக் குதவுங்
　　கொழுகொம் பாய்வளர்ந்து
தளிர்பொன் னம்பொன் னலரான் மால்சதுரா
　　னனத்த னெனச்செழித்துத்
தழைக்குந் தேனு லரம்பையர்க டகுபைங்
　　கூந்த றனைநனைத்துக்
குளிர்தண் மடுவிற் கஞ்சமஞ்சக் குலவித்
　　திளைக்குஞ் சினைபலவாய்க்
குவிமுத் தரும்பு தாரகையின் கூட்டம்
　　போல மிகவிளங்கி
மிளிர்புன் னகைத் தீசர்தந்த வேளே
　　தாலோ தாலேலோ
வேத புரிவாழ் சிங்கார வேலா
　　தாலோ தாலேலோ. (4)

அன்போர் வடிவாஞ் சிவனேய
　　ரருமைத் தவத்தாற் பெற்றெடுத்த
அரிவை யழகைக் கண்டுவக்கு
　　மளவில் கிளைஞர்க் கருளாமே

தென்பூ மியினிற் கெள்ணியர்கோன்
செயலே வியந்தங் கவர்க்களிக்கச்
சிந்தித் திருக்கும் போதரவாற்
சிதைய வவண்மெய் யனலழற்றி
என்போர் குடத்தி லெடுத்தமைத்தன்
றெதிர்ந்த சிறுவர் முனம்வைக்க
இன்சொற் றமிழ்பத் தோதுதனு
மெழுந்த மடமா தரையாட்கொள்
மின்பூம் பாவை யீசர்தந்த
வேளே தாலோ தாலேலோ
வேத புரிவாழ் சிங்கார
வேலா தாலோ தாலேலோ. (5)

(வேறு.)

இந்தீவ ரத்தினனை வண்டார்வ னப்பிளளு
ரென்பார் வாழ்வாராம்
இந்த்ராணி பொற்பினுயர் பெண்கோடி யுற்றுலவு
மேல்வீடே நீள்வான்
மந்தார மட்டணுகு சந்தர்வ ருக்கைபுனை
மாவே மாகாவாம்
மந்தார வெட்சி நிறை நந்தாவ னத்தின்மிகு
தேனே காலாறும்
செந்தான மிட்டபொழு தாம்பூத லத்திலுறு
நீரோ பாலாறும்
தொந்தோமெ னச்சுரர்க ணின்றுடு சுக்கிரபுரி
யாள்கோ வேவேளே
தந்தாவ ளத்துரியர் கங்காளர் பெற்றசுத
தாலோ தாலேலோ
சங்கிராம வெற்றிமிகு கங்காந திக்குமர
தாலோ தாலேலோ. (6)

அம்போரு கச்சுனையி னின்றேல மிட்டலறு
போதே போதாதோர்
அம்போரு கத்தின்முனம் வந்தாள்வ டத்தர்மரு
மானே மானேவா
வும்பாணி யத்தர்மகி ழுஞ்சீரு ரைத்தகுரு
நாதா நாதாவேர்
ஒன்றுய்மு ளைத்தமுத லைந்தேப ரப்பிரம
ரூபா ரூபாபூம்
கொம்பாமி டைக்குறமி னண்பாத ரித்திடுமெ
ஞ்ஞளா தாளாறுய்
கொந்தாம லர்க்குண்மது நந்தாத சுக்ரபுரி
யானே யானேயா

சம்பூர ணப்பரமர் கங்காளர் பெற்றசுத
தாலோ தாலேலோ
சங்கிராம வெற்றிமிகு கங்காந திக்குமர
தாலோ தாலேலோ. (7)

பைங்காய்ப முத்தகமு கங்கார் முகிற்குமுயர்
மானுள் போலாநீ
பம்பூவ குத்திடலும் வந்தேய ருச்சனைசெய்
வேதா வேயாநீள்
கொங்கார்மு கைத்தளவம் வெங்காம மிக்கநகை
மானுர் தானுமால்
கொண்டாசை யுற்றவர்கை கண்டீர்வ தொப்பிதழி
மாகோ ழேதார்சேர்
செங்கேத கைக்குண்மடல் வெண்டாத டுத்தமுசு
நீசே வார்போலாம்
செஞ்சாலி முத்தமொளிர் சிங்கார சக்ரபுரி
நாடாள் கோமானே
சங்கார்தி ருக்குழையர் கங்காளர் பெற்றசுத
தாலோ தாலேலோ
சங்கிராம வெற்றிமிகு கங்காந திக்குமர
தாலோ தாலேலோ. (8)

(வேறு.)

பண்டைநான் மறைதே ருங்குரு பரனே
தாலோ தாலேலோ
பந்தவல் வினைதீ ரும்படி யருள்வாய்
தாலோ தாலேலோ
குண்டலி யிடைசூ ழும்பிர ணவமே
தாலோ தாலேலோ
கும்பக வெளிநா தந்தரு மொளியே
தாலோ தாலேலோ
தொண்டர்க ளுளமே வுஞ்சர வணனே
தாலோ தாலேலோ
தொம்பத மருள்பே ரின்பமெய் வடிவே
தாலோ தாலேலோ
தண்டமிழ் மயிலே சன்றரு சுதனே
தாலோ தாலேலோ
சங்கரி புதல்வா ஐங்கரர் துணைவா
தாலோ தாலேலோ. (9)

ஒண்பதி பசுபா சங்களை யொழிவாய்
தாலோ தாலேலோ
உண்சுவை யொளியூ றுந்தொலி மண்மே
தாலோ தாலேலோ

திண்புவி பொருண்மா தென்றமும் மயமே
தாலோ தாலேலோ
தெண்கட லமுதே கண்கொளு மணியே
தாலோ தாலேலோ
பண்பக ரிசையே நண்பினர் நசையே
தாலோ தாலேலோ
பைந்தமி ழுரையே யிந்திரர் துரையே
தாலோ தாலேலோ
தண்பொழின் மயிலே சன்றரு சுதனே
தாலோ தாலேலோ
சங்கரி புதல்வா வைங்கரர் துணைவா
தாலோ தாலேலோ. (10)

**தாலப் பருவம் முற்றிற்று.**

---

## 4. சப்பாணிப் பருவம்.

பனிவட்ட மதியுடன் பரிதிவட் டத்துருட்
பார்வட்ட விரத மேறிப்
பங்கயவுள் வட்டப்பொ குட்டுநான் முகனுங்கு
பழமறைப் புரவி தாண்டக்
குனிவட்ட வாயிரத் தெட்டுமுடி மேருவிற்
கொடுவட்ட வாசு கியினுன்
கூராழி வட்டக்க ரத்தனொரு வாளியாய்க்
கொண்டண்ட வட்ட வுயிரை
முனிவட்ட முப்புரவ ரெதிர்வட்ட மிட்டைந்து
முகவட்ட மிலக முன்போர்
முயல்வுற்ற போதவர்கள் கரவட்ட மனதுன்னி
முகில்வட்ட விளமின் னல்போல்
தனிவட்ட மிட்டுநகை செய்தவன் றந்தசுத
சப்பாணி கொட்டி யருளே
சண்முகவி சாகனே தென்மயிலே வேலனே
சப்பாணி கொட்டி யருளே. (1)

முந்துவா னிமயத்தின் மேனேதவ மகிமையான்
முளரித்த டத்து தித்த
முதுமறைசொ லருணநிற வனிதையை விரும்பியே
முக்கணன் வேட்கு நாளில்
இந்தமா னிடருரகர் சித்தர்விஞ் சையர்முனிவ
ரிமையவர்க ளொழுத லாலே
இவ்விடைப ணிந்தேற்றத் தக்கணத் திக்கணத்
தேகெனவி யந்து வந்து

விந்தமா கிரியையும் டக்கியவ் வாதரவின்
வில்வலன் றனைமு டுக்கி
மேதினியி லுள்சிவத் தலமெலாந் தரிசித்து
மிக்கசெந் தமிழ்வி ளங்கும்
சந்தன சலமுனிவ ணங்குகா ரணகுரவ
சப்பாணி கொட்டி யருளே
சண்முகவி சாகனே தென்மயிலை வேலனே
சப்பாணி கொட்டி யருளே. (2)

கானமிசை யுலவுவெங் கரடிபுலி யானையைக்
கணபணப் பெருமா சுணக்
கயிற்றிடைமி னுக்கரிய பொற்பணியெ னத்தமது
கந்தரத் திட்டு முனிவர்
ஊனமுத மின்றுநகர் புண்ணீர்கு டித்திரவி
யூர்தேரின் மோலி சூட்டி
ஒண்மதியி னைப்பிழிந் தொழுகுபன் னீரிலே
யும்பர்க்கு வினையு ரைத்து
பீனதன வாளெயிற் றரிவையர்க ளுடலிடைப்
பெய்துகுல கிரியே ழையும்
பிடுங்கியவர் கையிலிட் டாடுமம் மானையெனப்
பிலவாய்தி றந்து கூறும்
தானவர்க ளுயிருண்ட காலாயு தக்கடவுள்
சப்பாணி கொட்டி யருளே
சண்முகவி சாகனே தென்மயிலை வேலனே
சப்பாணி கொட்டி யருளே. (3)

வட்டமிடு மோராழி வையத்தி னிற்கட்டு
மரகதப் புரவி தம்மை
மனைக்குதிரை யாக்கிவிண் டவழுமுகி லேழையும்
வளைகின்ற சாட்டை யாக்கி
அட்டகுல வெற்புமுறை யிடமாக்கி வாருதிக
ளவையெட்டும் வாவி யாக்கி
யானையெட் டையுமுகைத் தூரத்தி யாக்கிதிறை
யளக்குமிட மளகை வாக்கிச்
சிட்டருறு பொழிலேழு மனந்தவன மாக்கியே
டிசையுண்ணு பூதங் களைச்
சேனைகளு மாக்கிமல ரயனரியொ டிந்திரன்
செங்கோலின் முறைந டக்கச்
சட்டமிடு நவவீரர் தமையனென வந்தவன்
சப்பாணி கொட்டி யருளே
சண்முகவி சாகனே தென்மயிலை வேலனே
சப்பாணி கொட்டி யருளே. (4)

மதுமுகந் துண்டுயிர்வ தைத்தமரர் முனிவரரை
வாதிக்கு நிசிசர ரையும்
வஞ்சமும முக்காறு மிவறலுங் குடிகொண்ட
மனிதர்ப சாசர் களையும்
விதுமுகங் கருகநற் சனர்கள் வறிஞராய்
வீடுதோ றிரந்துண் ணவும்
வேறொருவர் காதறனை யுள்ளம்வைத் துணையன்றி
வேறில்லை யெனுவ ரைவிலாப்
பொதுமுகம் பார்த்துழலும் வேசியர்கண் மயல்கொண்ட
புருடரையு மேன மைத்தாய்
போதித்த மறைமுதற் பிரணவப் பொருளென்ன
புகலடா வென்று சொல்லி
சதுமுகன்மு டித்தலைபு டைத்திடுக ரங்களாற்
சப்பாணி கொட்டி யருளே
சண்முகவி சாகனே தென்மயிலை வேலனே
சப்பாணி கொட்டி யருளே. (5)

(வேறு.)

விறன்மிகு முக்கிர பூதப் படைநல்
வீரர்கள் புடைசூழ
விண்டொடு பொற்றேர் மிசைசென் றங்கொரு
வெற்பி னிருந்தமர்செய்
மறவவு ணப்பெரு வாருதி யுண்டிட
வடவைத் திருவுருவாம்
வடிவேல் தொட்டிகல் வென்றபின் மணம்விரி
வாகைத் தொகைசூடி
நறவுமிழ் கற்பக நளிநீ ழற்குடி
நண்ண வமைத்திடலால்
நாகம் பணிசெயு மாகண் டன்னரு
ணன்னுதன் மனநாணக்
குறமகண் முற்செல மயன்முதிர் கிழவன்
கொட்டுக சப்பாணி
கொத்தலர் கற்பக வல்லித ருங்குக்
கொட்டுக சப்பாணி. (6)

தென்றற வழ்ந்துல வும்பொழின் மன்னிய
செய்யப ரங்கிரியும்
திரையொலி முழவொலி வளையொலி செறியுந்
சீரார் செந்தூரும்
என்றும்வ லந்திரி யென்றுட னிந்துவு
மிமையவ ரும்பரவும்
ஏரக முந்திரு மாவூறு திருவா
வினன்குடி யென்பதியும்

பன்றிய முயலக ரேர்ந்திடு சாரற்
பழமுதிர் சோலையினும்
பற்பல கோடிகு றிஞ்சிநி லத்தெழு
பைம்பொற் கொடுமுடிசேர்
குன்றுதோ றுடனு மாடிய முருகன்
கொட்டுக சப்பாணி
கொந்தலர் கற்பக வல்லித ருங்குக
கொட்டுக சப்பாணி. (7)

மஞ்சரி மொய்த்த குழற்பிறை நுதலிணை
வாள்விழி மதிமுகமும்
வள்ளைகள் செவிபவ ளம்மிதழ் முத்தொளிர்
வாணகை செங்காந்தள
அஞ்சரி யுற்றகை யசலமி ணைத்தன
மாலிலை யகடுந்தி
ஆறுந் திச்சுழி கொடியிடை யரவல்கு
லானைக் கைதொடைநல்
சஞ்சரி கச்சர ணன்னம் மயிலின்
சாயற் குயிலினிசை
தத்தைசொன் மெய்த்தளிர் மேனித் தெய்வத்
தன்மைவ னப்பினிளம்
குஞ்சரி யைப்புணர் குஞ்சரர் துணைவா
கொட்டுக சப்பாணி
கொந்தலர் கற்பக வல்லித ருங்குக
கொட்டுக சப்பாணி. (8)

சரவண பவவெனு மறிஞர் மனத்தி லிருப்போனே
தமிழ்கொடுன் னடியிணை துதிசெய்கு லத்தை வளர்ப்போனே
அரவணை யரியய னமரரி டுக்கண் ணொழித்தோனே
அலைகடல் சுவறிட வயிலையெ டுத்து விடுத்தோனே
விரகமெய் மயறரு குறமக் ளச்ச் முறத்தானே
விரைவொடு மதகரி முகனைவ னத்தி லழைத்தோனே
குரவர் திகழ்புய வறுமுக கொட்டுக சப்பாணி
குகமயி லையின்வளர் குருபர கொட்டுக சப்பாணி. (9)

பலகலை குறுமுனி யறியநொ டிக்குள் ளுரைத்தோனே
பகையற வயலெனு முறைமத் விர்த்த கருத்தோனே
அலகில் மெய்யடி யருணகி ரிக்கருள் வைத்தோனே
அவனவ ளதுவெனு மருவுரு வத்தை யமைத்தோனே
நலதவ முயல்பவ ரணுகிய முத்தி நிலத்தோனே
நதிமதி முடியினர் தொழுமௌ னத்தை விரித்தோனே
குலமயின் மிசைவரு சரவண கொட்டுக சப்பாணி
குகமயி லையின்வளர் குருபர கொட்டுக சப்பாணி. (10)

சப்பாணிப் பருவம் முற்றிற்று.

---

## 5. முத்தப் பருவம்.

பொழியுஞ் செந்தேன் மலர்ப்பொழில்கள்
பொதியு நீருண் புயலளக்கப்
பொற்கோட் டிமயப் பொருப் பரசன்
புதல்விக் கருணைத் தண்ணிலவின்
விழியு மன்பு முனதுமதி
விம்ப வதன மேலமைத்து
விம்மும் குடம்போற் றனஞ்சுரந்து
மேரு வரைவீ ழருவியென
வழியும் பாலை மணிச்செம்பொன்
வள்ளத் தேந்தி நின்கைதர
வாங்கி யயின்ற வவ்விடையே
மதுரத் தமிழாந் தேவாரம்
மொழியு மழலைத் திருவாயான்
முத்தந் தருக முத்தமே
முகிறேய் புன்னைக் காமருவு
முருகா முத்தந் தருகவே. (1)

வானப் பொருளா கியசிந்தா
மணியு மானு மிருநிதியும்
மலர்ப்பொன் மரமு மரம்பையர்கள்
வாய்செந் தேனுங் கடலமுதும்
தானப் பொருட்கிம் புரிக்கோட்டுத்
தவளக் கவளக் களிற்றின்மிசை
தங்கு மரசும் புவியரசுந்
தந்தோர் முத்தித் தடமேவும்
ஞானப் பொருளுந் தரவல்ல
நம்பன் பழிச்சி வணங்கிநின்று
நான்கு மறைக்கு முதற்பொருளை
நவிலா யென்முன் னேமொழித்தின்
மோனப் பொருட்சொல் திருவாயான்
முத்தந் தருக முத்தமே
முகிறேய் புன்னைக் காமருவு
முருகா முத்தந் தருகவே. (2)

சதிர்முத் தரையு மெண்ணுத
சங்கப் புலவோர் நின்றிறைஞ்சத்
தனிப்பொற் பலகை மீதிருந்து
தண்டா மோனந் தணந்திருந்து
கதிர்முத் திலகும் வெண்ணகையங்
கயற்கண் மாதர் கருத்துவக்கும்
கடம்பா டவியின் வாழ்சோலைக்
கடவுளுடனே தருக்கஞ் செய்து

எதிர்முத் தகத்தா லவர்சொன்ன
வெல்லாப் பொருளு மகழ்ந்தன்பாய்
இறைய ஞர்சொல் பொருள்பொருளொன்
றீந்து கரம்பொன் முடிதுளக்கி
முதிர்முத் தமிழைப் புகழ்வாயான்
முத்தந் தருக முத்தமே
முகிறேய் புன்னைக் காமருவு
முருகா முத்தந் தருகவே. (3)

மறுவற் றொளிரும் மதிமுகமும்
வடிவேலம்பும் வாள்குந்தம்
வயங்கு நீல மான்வண்டு
வலைவா ருதிநே ரிருவிழியும்
சிறுகச் சிறந்த தமருகம்போற்
றிகழ்ந்து நுடங்கு நுண்ணிடையும்
செம்பொற் குடஞ்சூ ழிளநீர்திண்
சிலையைப் பொருத கனதனமும்
உறுபுத் தமுதுஞ் சருக்கரைதே
னொத்த மொழியு மிகச்செறிந்த
உன்று யெனுங்கற் பகவல்லி
யுளத்தா மரையை யலர்த்துநிலா
முறுவற் பொருந்துந் திருவாயான்
முத்தந் தருக முத்தமே
முகிறேய் புன்னைக் காமருவு
முருகா முத்தந் தருகவே. (4)

நத்த மிப்பி முற்றுகார் நளின முத்தம் பங்கமுறும்
நத்தை முத்த நலிபடும்வேய் நன்னெற் கன்னன் முத்தினரசல்
மத்தக் கசக்கோட் டேனத்தின் வண்கோட் டுளமுத் தறுத்தெடுப்பர்
வான்முத் தந்தோ மின்னினையு மச்ச முத்தமலை போதும்
கொத்தின் பூக முத்துதிரி கொக்கின் முத்தம் புலானுறும்
குளிர்வெண் மதிய முத்தமறுக் கோதாய் முத்தங் கோதானின்
முத்த முறுவற் றிருவாயான் முத்தந் தருக முத்தமே
முகிறேய் புன்னைக் காமருவு முருகா முத்தந் தருகவே. (5)

(வேறு)

களமாரி நெற்கதிர்க ளெழுதுவா லொண்கிரிக
டுப்பவதி னேறு சங்கம்
கதிர்மதிய னந்தமென வெண்ணிலவு காலக்க
டிக்குவளை குமுத மலர

வளவர்செய் திருப்பணிசெய் முகப்பினவ மணிகளால்
வளைகின்ற சிகரி மகுடம்
வான்முகிலை யளவிடுங் கேதனங்க ரங்களால்
வானவரை வரவ ழைக்கும்
இளஞ்வயிலெ றிக்குமணி நெடுவீதி யாவணத்
திரையுமொலி கடல்க ளொக்கும்
இரதியூர் வசிமாதர் இவரென்று மாதர்குழ
லெழிலியென மயின டிக்கும்
அளவின்வள நிறைமயிலை யதிபனென வருமுருக
வமுதவாய் முத்த மருளே
அவுணர்கிளை களைவேல விமயமக டருபால
வமுதவாய் முத்த மருளே. 6

ஒளிர்சிறைவி ரித்துவளை யறுகாலை யூன்றியுட
லுட்கூனி மிர்ந்தெ ழுந்தே
ஓடியா டிப்பாடி நாடியூ டிப்பெடைக
ளுடன்மலர்க் காவி னேகித்
துளிமதுவ யின்றதுது வர்ப்பிதென விட்டுநறை
சொறியுமலர் வாவி யுற்றுச்
சுருண்முகைபு டைத்தவிழ்த் துந்திக்கு டைந்திகழ்
துதைந்தகத் தேனை யுண்டு
களிமிகுதி யான்மனம யிங்கியிசை முரலாது
காலோடு கால்கள் பின்னிக்
கதிரவன லர்த்துசெந் தாமரைப் பள்ளியிற்
கருமணிகள் போற்கண் டுயில்
அளிகள்பயின் மயிலைதனி லதிபனென வருமுருக
வமுதவாய் முத்த மருளே.
அவுணர்கிளை களைவேல விஷயமக டருபால
வமுதவாய் முத்த மருளே. 7

வன்னமலர் வாவியிடை சென்றுசிறு மூலங்கள்
வாலமுத மென்ன வுண்டு
மதுநீர ருந்திநறு மணம்வீசு சந்தனமென்
மகரந்த முடறி மிர்ந்து
யன்னமுயர் குடையாக நெட்டிதழ்வி ரிந்ததண்
பங்கயத் தவிசின் மேவிப்
பலகலைக் கேள்விமுயல் வேந்தரென வேறுபல
பறவைமென் குரல்க ளோர்ந்து
தன்னினமெ னும்பெடையை யோர்சிறையி னுன்மெலத்
தழுவித்தி ளைத்து வீதி
தனில்வந்து நூபுரமி ரங்கியடி பேர்த்திடுந்
தையலார் நடைகள் கற்கும்

அன்னநிறை மயிலைதனி லதிபனென வருமுருக
வமுதவாய் முத்த மருளே
அவுணர்கிளை களைவேல விமயமக டருபால
வமுதவாய் முத்த மருளே. (8)

வகிரு மதியை யிணைசொன் னுதலும்
வளைகள் செறியு மத்தமும்
வரிவை யடரு நெடிய விழியும்
வலிய வரையை யொத்திடும்
நகில வினையு மொளிமின் னிடையு
நகையின் றுகிரின் முத்தமும்
நளின மலரின் முகமு மினிய
நறிய மொழியு மற்புத
எகின நடையை யிகழு நடையு
மிருளோ டிகலு மைக்குழல்
எழிலு மருண நிறமு மிலகு
மிமய வரசி புத்திர
முகிலை யனைய கருணை வடிவின்
முதல்வ தருக முத்தமே.
முதிய மறைகள் பரவு மயிலை
முதல்வ தருக முத்தமே. (9)

அருவு முருவு மகில தலமு
மணுவு மலையு மற்றுள
அளவில் பொருளு நொடியி னளவி
னமையை நினையு நிற்குண
ஒருவ னிதய மகிழ வொருசொல்
லுணர வுரைசெய் விற்பன
உதய வருணர் வருண நளின
வுபய சரண சிற்பர
மருவின் மணமும் வெளியின் வெளியு
மதுவில் ரசமு மொப்பவன்
மனதி னிறையு நிமல வருளின்
வடிவ வகர வக்கர
முருக மரையின் மலரின் வளரு
முருக தருக முத்தமே
முதிய மறைகள் பரவு மயிலை
முதல்வ தருக முத்தமே. (10)

**முத்தப் பருவம் முற்றிற்று.**

## 6. வருகைப் பருவம்.

செஞ்சரணின் விரலிருமு ழந்தாட்க ளீராறு
செங்கைகள் சிவப்ப வூன்றிச்
செஞ்சதங்கை கள்கொஞ்சநூபுர மொலித்திடச்
சிவன்மார் பின்னிடை தவழ்ந்து
சஞ்சரிகண் வெண்டலையை வேணிநடு மடுவினிற்
றங்குநீ ரால லம்பித்
தண்கொன்றை மாலைகளி னூறுதே னேந்திவான்
றுவுமா னுக்க ருத்திப்
பஞ்சுரமி சைத்தசிறு வண்டைப்பி டித்துநெளி
பாம்பின்வா யிற்ப டுத்திப்
பனிமதியை வாங்கியுமை நுதலிணைய தாமெனப்
பார்த்துவிளை யாடு குமரர்
மஞ்சரிய ளித்தபிடி யானைமண வாளகுற
வள்ளிநா யகன்வ ருகவே
மஞ்சண்முதி ரிஞ்சிகொளும் விஞ்சிவிரி கஞ்சநிறை
மயிலை நாயகன் வருகவே. (1)

சிலைநுதலி லணிசுட்டி பளபளென வொளிவிடச்
செய்யபொற் பட்ட மின்னச்
செவிமகர குண்டலம் பன்னிரண் டாதித்தர்
செறிவதென வெயிலெ றிப்பக்
கலைமதிமு கத்தமிழ்த மொழுகுகனி வாயினிற்
கதிர்முறுவ னிலவ றிப்பக்
கண்டசர மொளிர்தவள முத்துமா லிகைத்திரள்
கனவுடுப் போல்வி ளங்க
விலையில்லா மாணிக்க மரகதம முத்திகதிர்
வில்வாகு வலய மொளிர
வெற்றிவீ ரக்கழல் சதங்கைகிண் கிணிமணிகொள்
வீரநூ புரமு ழங்க
மலைமகட வத்தின்வரு செல்வநா யகனீப
மாலைநா யகன்வ ருகவே
மஞ்சண்முதி ரிஞ்சிகொளும் விஞ்சிவிரி கஞ்சநிறை
மயிலை நாயகன் வருகவே. (2)

செங்கயல்வி ழிச்செவிலி யொக்கலையின் வைத்துனைத்
திண்சிலைக் கோடு காட்டிச்
சீதமுலை காட்டிநட மாடுமயில் காட்டிவளர்
திங்கள்வரு வழிகாட் டிநின்
சங்கரிக ரத்தேந்தி நறியநீ ராட்டியிரு
தனகிரிப் பாலூட் டியோர்
தங்கநவ ரத்தினத் தோட்டின்மிசை யாட்டிநற்
றுராட்டி முத்தாட் டிட

இங்கிவர்க ளிவ்வாறு சீராட்டல் கண்டுவா
னிமையவர்கள் பாராட் டலும்
ஈரேழு பதினுனு புவனமுமோ ரண்டமெனு
மெண்ணரிய கோடி யண்ட
மங்களகல் யாணமிக வளருநா யகநீபு
மாலைநா யகன்வ ருகவே
மஞ்சண்முதி ரிஞ்சிகொளும் விஞ்சிவிரி கஞ்சநிறை
மயிலை நாயகன் வருகவே. (3)

கங்கையக முகமலர்ந் தெதிர்வந்து வாவென்று
கைகொட்டி நின்ற ழைக்கக்
கண்டுதலை யைக்கவிழ்ந் திருதாளு தைந்துமத
களிறெனப் பிளிறி யார்த்துச்
செங்கைமல ராற்பிசைந் தீராறு நயனமுஞ்
சேப்பக் கலுழ்ந்து பொங்கித்
தேங்கித்தி கைத்துச்சி னத்துப் பிணீக்கந்
திளைத்திடுத லுற்று நோக்கிக்
கொங்கைபிதிர் விட்டோடு பாலுட னனைப்பக்
குடங்கையா லேந்தி மெல்லக்
கொஞ்சிக்கு லாவியிஃ தியாதைய னேயென்று
கொண்டாடு மைய வெற்பின்
மங்கைவத னும்புயம் பார்த்துநகை யாடியுள
மகிழுநா யகன்வ ருகவே
மஞ்சண்முதி ரிஞ்சிகொளும் விஞ்சிவிரி கஞ்சநிறை
மயிலை நாயகன் வருகவே. (4)

பொற்பளிங் காற்செய்த தூண்டோறு முன்னிழல்
பொலிந்திலங் குதலை நோக்கிப்
பூதநா யகன்மதலை யாதலா லிவனுமெப்
பொருள்களினு நிறைவ னென்றே
பற்பல கணங்கள்வந் தங்கங் கிறைஞ்சிப்
பரிந்தெடுக் கவுநண் ணிமெய்ப்
பரிசித்து வெட்கமணி மண்டபத் திடையிட்ட
பஞ்சணையின் மேற்ற வழ்ந்து
கற்பரசி யாமிமய மாதுசெங் காந்தளங்
கைவிரல்கள் பற்றி நின்று
காதிலிரு குண்டலஞ் சுழலநுத லணிசுடிகை
கதிராறு போற்று லங்க
மற்புயமீ ராறுங்கு லுங்கநட மிடுசுப்ர
மணியநா யகன்வ ருகவே
மஞ்சண்முதி ரிஞ்சிகொளும் விஞ்சிவிரி கஞ்சநிறை
மயிலை நாயகன் வருகவே. (5)

(வேறு.)

காதி னுனது மதலைமொழிக்
கருதிக் கேட்டோ ரிசைகேளார்
கண்ணா லுனது திருவழகைக்
கண்டோர் பிறவித் துயர்காணார்
தீதி லுருவந் தீண்டினவர்
செழிக்கு மடவார் முலைதீண்டார்
சீத முறுவ றனைப்பார்த்தோர்
திகழு நிலவு தனைப்பாரார்
ஓதி னரிய வாய்முத்த
முண்மை யாகப் பெற்றோர்கள்
ஒன்று மிரண்டு மூன்றென்னு
முயர்ந்த முத்தி நனிவேண்டார்
ஆதி முதலே யாறுமுக
வமுதே வருக வருகவே
அங்க மொருபெண் ணுமயிலை
யரைசே வருக வருகவே. (6)

வீறு நிறைமெய் யுயிர்காம
விழைவே முத்தி யெனுமதமும்
விலையூன் மண்ணுக் கொக்குமென
மிசையு மாசீ வகர்மதமும்
நீறு புனைதல் பாவமென
நீந்தித் திடுசா ரணர்மதமும்
நீடுங் கரும முத்தியென
நிகழ்த்து மீமாஞ் சையர்மதமும்
தேறும் பிரமஞ் செகத்தெனவே
செப்பும் வேதாந் தம்மிரண்டும்
திறஞ்சேர் முத்தி யெனும்பேதச்
செருக்கு மகற்றி யுட்சமயம்
ஆறு முரைசெய் யாறுமுக
வமுதே வருக வருகவே
அங்க மொருபெண் ணுமயிலை
யரைசே வருக வருகவே. (7)

பொறியோ ரைந்துந் தகளியதாய்ப்
பூத மைந்து மதன்றெண்டாய்ப்
பொருந்து மவாவா லுண்டாகும்
புலன்க ளைந்து மணிவிளக்காய்ச்
செறியூ னுடம்பே யாலயமாய்த்
திரநீள் சுழினைக் கம்பமதாய்த்
தெளிநீர்க் கங்கை யாரமுதாய்ச்
செம்பொற் சிகரி சேகரமாய்

நெறிசேர் வாயிற் றிருவாயாய்
நிருத்த மடவார் சுவாசமதாய்
நிவேத முளஞ யமைத்தெண்ணி
நிகழ்த்து மொழிகள் வாச்சியமாய்
அறிவோ ருளஞ்சே ராறுமுக
வமுதே வருக வருகவே
அங்க மொருபெண் ணுமயிலை
யரைசே வருக வருகவே. (8)

(வேறு.)

முடவர் நுகர நெடிய மலையின்
முடியி னறவு நணுகல்போல்
முதிய மறையு மறிய வரிய
முதல்வ னுனது வடிவையே
அடரு மமரர் முனிவர் மனித
ரசுர ரனைவ ரறியவே
அமல வரனு மிமய மயிலு
மருளு மழகு முதல்வனே
உடலு மவுண ரிருளை முடுகு
முதய ரவியி னயிலனே
உரக படமு முடலு நெறிய
வுலக மிலகு மயிலனே
மடலின் வனச நயன வதன
நிமல வருக வருகவே
மகர சலதி முரசின் மயிலை
வரதன் வருக வருகவே. (9)

பிரமர் கவுணி யர்குல திலக
பிரபலன் வருக வருகவே
பெருக நிதிய வசிய ருதவு
பெரியன் வருக வருகவே
பரமர் பரவு கமல சரண
பகவன் வருக வருகவே
பழைய வடிய ரிதைய மருவு
புனவன் வருக வருகவே
குரவ னபணி யிமய சயிலி
குழகன் வருக வருகவே
குணக ணபண பணிவி னணியர்
குமரன் வருக வருகவே
மரக தநிற முகின்மெய் வளையன்
மருகன் வருக வருகவே
மகர சலதி முரசின் மயிலை
வரதன் வருக வருகவே. (10)

**வருகைப் பருவம் முற்றிற்று.**

## 7. அம்புலிப் பருவம்.

சித்தசன் கவிகையா னெனவும்பர் புகலமர
செகமெங்கு மொலிபரவலாற்
செய்யபொன் னூமொரு திரணமென நினையவே
செய்யவல் லவனுதலால்
புத்தமுத மென்னவே நகையினில வொழுகலாற்
பூரணக் கலையாட்சியால்
பொங்குமலை வாருதியி னோர்பிறவி யுறுதலாற்
பூமிதனை வலம்வருதலால்
முத்தமருள் வாயினுல் வாரணக் கரனென்று
முன்னூ லெடுத்தோதலால்
முத்தமிழ்ச் சம்பந்த ராசனிவ னுதலான்
முற்றுநினை யொப்பன்கண்டாய்
அத்தனரு டிருமதலை யாதலா னிவனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (1)

காசிபன் வரத்துதைய னுதலா லாசையுறு
கட்டிளமை யுடன்மேவலால்
ககனவழி யேகியக் கல்லோல மோலமிடு
கடல்வாயி னிற்றங்கலால்
மாசில் கருத்தனிவ னுதலா னுடோறு
மனமகிழ்நல் லின்பமுறலால்
மத்தமறு துணையாகி யுத்திதனை மெலிவித்த
மாபுகழின் வாக்குமிகலால்
தேசிக னெனப்பெயர் சொல்லிலாரி னுங்காண
சீயத்த நாதனெனலால்
செம்பாதி யீசனம் பிறையாக வோட்டலாற்
சீர்தூக்கி னின்னையொப்பான்
ஆசிடை நுடங்குகற் பகவல்லி சேயனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ வாட வாராய். (2)

கற்கடக மிதுனமுறு செங்கையுற் றுய்மலர்க்
காலிற்சி லம்புவந்தாய்
கவினூ மாலையக் கந்தரஞ் சூழக்
கணங்களுட னேதிரிகுவாய்
சிற்சொருப மாகிக்கு ழந்தையென வுலகெலாந்
தெரிசிக்க வேவளருவாய்
சிவன்சடா முடிமீதுஞ் சிவவடிய ரகமீதுஞ்
செழித்துமிக வேதிகழுவாய்

ஏற்கதிர வற்குமுன் கலைகள்கிர கிக்கவே
யீகுவாய் புந்தியருள்வாய்
இத்தொழில்க ளிவனுக்கு மாறு திருக்கையா
லிவனின்னை யொப்பதறிவாய்
அற்புத கபாலீசர் சிங்கார வேலனுட
னம்புலீ யாட வாராய்
ஆதிமயி லையப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (3)

தேரினுரு ளாகியே நீசுழலு வாயிவன்
றேரேறு சிவன்மைந்தனும்
தென்னிலிங் கையினேக வஞ்சுவா யிவனுனைச்
செல்வித்த ராமன்மருகன்
வாரிதிக ழிப்பிமுத் தொளியையொத் தாயிவன்
மாணிக்க வொளியாயினோன்
வருகுணக் கன்றியுத் தரமறிகி லாயிவன்
வளைசமுத் திரமுவறிவோன்
கூரிரவி னிருளொன்ற கற்றிடவ லாயிவன்
கொடுவினையி னிருளோட்டுவோன்
கூறினின் றனிலுமொரு கோடிகுண மதிகமாங்
கூடவிளை யாடநின்போல்
ஆருமிலை யென்றுநினை யாமலெம் மையனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (4)

வீரனொரு வன்றுளி னுதைகள்பட் டாயிவன்
வீரர்க்கு முதல்வனானோன்
வெய்யவன் முகங்கண்டு நாணிமறை வாயிவன்
வேல்கண்டு கதிர்கனண்ணும்
கோரமுட னின்குருச் சாபமுற் றாயிவன்
குருசாமியாய் முன்னின்றோன்
குக்கிடக் குரல்காணி னஞ்சுவா யிவன்கொற்றக்
கொடிக்குரலென் றுமகிழ்வோன்
நேரம்வர வேமுன்னி நீநடப் பாயிவன்
நேரம்வர வே நினைகிலோன்
நிந்தைக்கு மாளாவை யிவனெய்து நெறிகண்டு
நீடுலகு ளோர்வாழ்த்துவார்
ஆரணம் பரவவரு சிங்கார வேலனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (5)

எவ்வுயிர் தனக்குநீ யிருபட்ச ளுதியிவ
னெந்நாளு மொருபட்சனும்
இடமிடம தன்றியிடம் வேறில்லை யுன்றனக்
கெண்டிசையு மிவனெய்துவோன்
ஒவ்வொரு கலைக்குலகை வலம்வந்து பெறுவையிவ
ஞேதுமெண் ணெண்கலையுளோன்
ஓயாத லைந்தலந் தேதேய்கு வாயிவ
ஞோதலத் துற்றுய்குவோன்
நவ்விவிழி யாருனைக் கண்டேசு வார்களிவ
னயனவீக் கணம்வேண்டுவார்
நல்லவர் சதுர்த்திதனி லுன்முகம் பாரார்க
ளுன்சொல்வ தன்றுகண்டாய்
அவ்வவர் கருத்தறிந் தருள்செய்முரு கேசனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (6)

விண்ணுறு தலைவைத்த பரமற்கு மெய்ஞ்ஞான
விதியைமுறை யாயுரைத்தான்
மீனவன் கூன்வெப்பு நீங்கவம ணர்கணெஞ்சம்
வீடவெண் ணீறளித்தான்
உண்ணுடி யூனற்ற வங்கமொரு பெண்ணுக
வொருநொடியி னிற்சமைத்தான்
ஊமையொரு பிள்ளைவாய் விண்டுநூ லுரைத்திடவு
மொருமொழியின் வாக்களித்தான்
எண்ணாத பலவெண்ணி யென்மறுத் தீர்க்குமிட
மெத்தல மெனத்திகைத்தாய்
இமையவர்க டொழுகபா லீசுரத் தெய்திடீ
லிட்டகா மியமெய்துவாய்
அண்ணுவி னமிழ்தொத்த சிங்கார வேலனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாட வாராய். (7)

மனந்தனி னினைந்தவுட னக்கீரன் முன்வந்து
வனகற்கி முகியைவென்றான்
வாசவன் முதற்றே வரைந்தருவி னீழல்குடி
வைகமிக வாழ்வளித்தான்
கனந்தரு தமிழ்ச்சங்க மதுரைநகர் மூழ்கவரு
கடலைவே லானீவினான்
கடிகியண் ணாமலையி னருணகிரி முன்றெழுது
கர்ணுமா வோடிவந்தான்
தனந்தனியி ருந்தேங்கு நீயென்ற பூரண
சமாதியை யியற்றவேண்டா

சகலவடி வாய்நின்ற தெய்வமென் றெண்ணிநீ
தாள்பற்றி முத்திபெறுவாய்
அனந்தகுண கல்யாண சிங்கார வேலனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (8)

வெம்மையவு ணர்கள்வாரி வெற்பஞ்ச வேவிட்ட
வேலோன் றிருப்பதறிவாய்
வேதன் முடித்தலைக ளொன்றுடொன் றடிபட்டு
விண்ணென்று புண்ணீர்வரச்
செம்மைவிரல் காய்ப்பமுன் குட்டியது மறிவாயிச்
செம்மல்முனம் வந்தயானை
சீறிடமுன் னவமதிப் புண்டுநீ பட்டதுயர்
செப்புவதென் யாருமறிவார்
மும்மையு மளிக்கவல னொருமதலை யாகிமணி
முன்றிலிடை நின்றுகஞ்ச
முகமலர்ந் துன்னையவன் வாவென்ற ழைத்ததுவு
முன்செய்த புண்ணியங்காண்
அம்மைமுன் நீவந்த தேனென் றுரைத்திடா
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (9)

சின்னம் படைத்தசம ணெண்ணு யிரம்போர்க
டென்மதுரை வையைக்கரைத்
திட்டதனி னட்டகழு வேறவுஞ் செய்துபின்
றிரும்பிவரு போதுவழியில்
கன்னங்கறுத்தவுட லுளமுடைய பாதகக்
கண்பனைக் காடென்னவே
காணுமுகம் விண்ணிடியை யேவித்து ரத்தசிறு
காளையுனை வரவழைத்தான்
பொன்னம் புயத்தடம் நண்ணுமட வார்களணி
பூணின்மணி யானுமீசர்
பொற்கோயில் கட்டுமணி வச்சிரத் தானுமலர்
பூத்தவிசு போல்விளங்க
அன்னங்க ளொத்தினமும் வாழ்தொண்டை நாடனுட
னம்புலீ யாடவாராய்
ஆதிமயி லைப்பதியின் மேவுமயி லத்தனுட
னம்புலீ யாடவாராய். (10)

**அம்புலிப் பருவம் முற்றிற்று.**

Tr.

## 8. சிற்றிற் பருவம்.

வைய மளந்த நின்மாமன்
    மார்பி னடக்கக் கௌத்துவமா
மணிசற் றழுந்தப் பெருவிரலின்
    வருந்தி மயங்கி மெலிவதுகண்
ணைய னேயென் றனைத்துமெல்ல
    வாற்றித் தேற்றி யகமகிழ
அழகு பொழிபொற் றுகில்சாத்தி
    யாழி சங்க யகங்கையினில்
பைய வைத்துப் பாற்புகட்டும்
    பவள வாயின் முறுவலுறும்
படிசெய் துமையாள் கைகொடுக்கப்
    பரிந்து வாங்கிக் கண்ணொற்றும்
செய்ய கமலப் பொற்றுளாற்
    சிறியேஞ் சிற்றில் சிதையலே
சீலா மயிலைப் பதிவேலா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (1)

துட்ட நமனை மார்புதைத்துத்
    துங்க மதனை வீழ்த்தெரித்துத்
துய்ய வெள்ளி வெற்பெடுத்த
    தொலையா வரக்கன் றேணெரித்துக்
குட்ட வெள்ளைக் கடலுதித்த
    கொடிய விடத்தை மிடற்றடக்கிக்
குலைசெய் குஞர்வாழ் முப்புரத்தைக்
    குறிய நகையாற் பொடிபடுத்தி
வட்ட மதியி னுடற்றேய்த்து
    வலிய தக்கன் சிரஞ்சிதைத்து
வணங்கும் புலிபாம் பெலியெறும்பு
    மற்று மறுபத் துடன்மூன்று
சிட்டர்க் கருள்செய் சிவன்புதல்வா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (2)

கருவார் பிறவிக் கடல் கடத்திக்
    கதிவீ டருளு மென்றெண்ணிக்
கண்டு தொழுது புதியநறுங்
    கடப்ப மலரா லருச்சிக்க
மருவார் தமக்குங் கிட்டாத
    மலர்த்தாள் வருந்த மறுகின்வந்து
மதலை முடித்த பி[த்]தர்தந்த
    மதலை யென்ப தறிவித்தாய்

பொருவா ரணத்தின் முகனைவென்ற
புழைக்கை யானை முகனெனநீ
போதிவா ளாவென வெம்மைப்
புடைத்தாய் நினக்கு முறையென்றுற்
றிருவார் மார்பன் றிருமருகா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (3)

உந்தை வேட னுணெச்சி
லுண்டா னெனயா மிகழ்ந்தோமோ
உனது மாம னெய்திருடி
யுரலிற் கட்டுண் டடியுண்ட
நிந்தை சிறிது முரைத்தோமோ
நின்முன் னவன்றன் பெருவயிற்று
நீல னெனயாம் பகர்ந்தோமோ
நின்னைக் கடம்ப னென்றேமோ
விந்தைக் குறத்தி தருந்தினைமா
விசைந்த தொருவர்க் கிசைந்தோமோ
விளையாட யரோமணற் சோற்றை
வேட்டால் விருந்தென் றறியோமோ
சிந்தை மகிழ்கற் பகவல்லி
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (4)

மீண்டுமடித் தாயாங்கள் வண்டல்
விளையாட் டிடமோ பகையெந்தாய்
விண்ணு மண்ணுக்க வல்ல
விரைப்பூங் கமலஞ் சிரமன்று
பண்டு நிருத பலர்மேவும்
பாரா வாரா வாரியன்று
பஞ்சா னனத்தின் முக்குடையோன்
பாழிப் புயத்தா ருகனன்று
ஞெண்டு கொழுத்தால் வளைகிடவா
நீதி போலாஞ் சூரனன்று
நெடிய கொடிய மயல்விளக்கு
நீலக் கிரவுஞ் சமுமன்றுற்
செண்டு பிடித்துச் சீர்காத்தாய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (5)

வண்டார் மலர்க்குஞ் சியைமுடித்து
　　மணிபொற் சுடிகைத் தனைத்திருத்தி
வள்ளக் குமுத வாய்முறுவல்
　　வழங்கு நிலவி னமுதுண்டு
தண்டா மரைநன் முகவேர்வை
　　தன்னைத் துடைத்து முத்தமுண்டு
தயங்கு நடைகண் டுளமகிழ்ந்து
　　தாயார் விடுத்த திதற்கோதான்
தொண்டா யுங்கள் பணியியற்றுந்
　　தொழும்ப ரெம்மை வீதிதொறுந்
துரத்திப் பேதைப் பெண்கணெஞ்சந்
　　துடிக்கச் செய்தா யிதுநீதி[தகை]யோ
திண்டார் புனைபன் னிருதோளா
　　சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
　　சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (6)

மதியி னிலவு கானற்குள்
　　வளையின் பெரிய பாண்டத்துள்
வயலின் செந்நெற் கதிரினுதிர்
　　வண்முத் தரிசி கொழித்திட்டுப்
புதிய நதியின் பால்வார்த்துப்
　　பெருமுத் திப்பி யான்மூடிப்
புனைசந் தனச்சூட் டடுப்பேற்றிப்
　　பூங்குங் குமத்தா லுமிதூவி
முதிய பவளப் பொறிவைத்து
　　மூட்டி முளரித் தாள்மாட்டி
முயன்று சமைத்த சிறுசோற்றை
　　முன்ன முனக்கிட் டுண்ணேமோ
திதிய மருமான் மருகோனே
　　சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
　　சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (7)

ஆதி மறையு மயன்மாலு
　　மறியாப் பரமன் றிருத்தோளி
னகன்மார் பிடையிற் றவழ்ந்தேறி
　　யணிந்த தவளத் தூளிதமாய்
பூதி யதனி லேபடிந்து
　　புழுதி யாட்டன் றயர்ந்ததுவும்
புரிமென் கூந்த ரிமயமயிற்
　　புளகத் தனத்திற் றிமிசுண்ணத்
தாதி னனைந்து விளையாடுந்
　　தகவு நினக்கு சகசமலாத்

தமியேங் குறித்த மணிலிதுன்பாற்
    ருள்கண் முந்தி யுறுத்தாதே
தீதில் குணத்தார்க் கருள்புரியுஞ்
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (8)

ஆறு தலையான் தவத்துதித்த
    ஆறு தலையான் நான்மறையுள்
ளாறு தலையா மங்காத்து
    ளாறு தலையே சொலுமெளியேங்
கூறு தலைச்சொ லுட்கொள்ளாய்
    கொதித்தாய் சீறிக் கோபித்தாய்
குணித்தாய் நடித்த யிசைபடித்தாய்
    கோல மறுத்த தனிநடந்தாய்
வேறு தலைவ ருன்குறும்பை
    விலக்க வலவ லங்குளரோ
மேலா மைந்து தொழிலுனக்கு
    விளையாட் டன்றி யிதுதொழிலோ
தேறு தலைச்சங் கத்தமிழ்சொல்
    சேயே சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (9)

மாவேந் தியபைந் துணர்ப்புன்னை
    வனத்தின் மலரைப் பறித்தோமோ
மறைதோய் கபாலி தீர்த்தத்தின்
    வந்து புனலைக் குடைந்தோமோ
மூவேந் தர்கள்செய் நின்கோயில்
    முகப்பிற் சிறுசோ றமைத்தோமோ
மூங்கிற் சிறிய முச்சில்கொண்டு
    முன்றிற் றரளங் கொணர்ந்தோமோ
பாவேந் தர்கணின் னருணகிரிப்
    பாடுந் தமிழைப் பழித்தோமோ
பலகால் நாங்க ளாடிடத்திற்
    பகைமை கருதி வருவதென்னே
தேவேந் திரனார் திருமருகா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சீலா மயிலைப் பதிவேலா
    சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (10)

**சிற்றிற் பருவம் முற்றிற்று.**

---

## 9. சிறுபறைப் பருவம்.

அசமுகிதன் னன்னைபெறு நிருதர்சது ரங்கங்க
ளகிதலத்தி னண்ணி டமிலா
தடுக்கிட்ட பாண்டமென வொன்றின்மே லொன்றுற்ற
வத்தனையு மூள்க னலின்வீழ்
மசகதிர ளொப்பவிடு முனதுவடி வேலினுன்
மடித்தபினு மப்ப டிவர
வாருணமு தித்தகதிர் முன்னிருளெ னக்கருவி
மறநிருத ரைக்கூ ளிகள்
முசலமுத லானடித் தம்மிமிள கென்னவே
முதுநிலத் திட்ட ரைத்து
முன்னின்ற போர்த்தலைவர் கந்தரந் திருகிமணி
முடியைவிட் டாடச் செய்தே
திசைபுகழ வெற்றிபுரி சேனுபதித் தலைவ
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் புகழவரு மயிலையம் பதிமுருக
சிறுபறை முழக்கி யருளே. (1)

எண்டிசைக ளுஞ்செக்கர் நிறமாக வங்கங்கி
ரத்தங்கள் சிந்த வானத்
தெண்ணில்பிறை யகல்பகலி லுற்றதென வேதோற்ற
வெண்கிரிகள் பொடிய தாகக்
கொண்டலிடி யுக்கவெனப் பேழ்வாய்தி றந்தலறு
குரலண்ட கூட முட்டக்
கோதிலவர் வீசுவது நிலைநின்ற மின்னெனக்
குவலயத் திருளை யோட்ட
மண்டிகிரி பம்பரஞ் சூறைவளி போலவே
மண்ணும்விண் ணுஞ்சு ழன்று
மாயைபல செய்துபுத் தேள்பூத வீரர்கண்
மயங்கித்தி யங்கி முடுகும்
திண்டித்த சூளாளி பிளந்திடு குபோரியே
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் பரவவரு மயிலையம் பதிமுருக
சிறுபறை முழக்கி யருளே. (2)

கடலேழு நிறையோரி மைப்பொழுதி னுண்டிடுங்
கதிரின்வடி வேலெ டுத்துக்
கரியநிசி சரர்பிசித வுடலினிறை கறையக்க
ரைபுரள வேய கத்துக்
குடன்மூளை நிணமெலாம் வீரகா ளிப்பசிகு
றைத்திடவ ளத்து மற்றைக்
குறைத்தலைக ளெப்பறந் தலையினின் றுடிடுங்
கூற்றுமவ ருயிருண் பனும்

நடனவில ரம்பையர்வி மானமெதிர் கொளவேறி
நாகலோ கத்தெய் தலும்
நரிகழுகு கழுதுகால் கைசிரம் பங்கிட்டு
நல்விருந் தேயர்த் துணைத்
திடமழிவில் சிங்கமுக வனைவென்ற சரபமே
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் பரவவரு மயிலையம் பதிமுருக
சிறுபறை முழக்கி யருளே. (3)

புங்கவர்த மக்கிடர்வி ளைத்தவர்க் கரசொரு
பொறிக்குயில தாக வோட
புலோமிசை கரந்தவளைப் பற்றுமச முகிகையைப்
பொருகாள னுர்து ணிக்க
அங்கவைந டந்ததென் றேயறிந் தச்சூர
னமரரைச் சிறையில் வைக்க
அலகில்பல பூதகண மிரதமயில் வாள்கணைவில்
லரனுனக் கீந்த னுப்பத்
துங்கமுட னலைவாயின் வைகியுன் றம்பியைத்
தூதனுப் பியும்வ ணங்காத்
துட்டவு ணக்கடலை யோரம்பின் வடவையாற்
றாளிபட வென்று ஞானச்
சிங்கமென வாகைபுனை பன்னிரு புயத்தனே
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் பரவவரு மயிலையம் பதிமுருக
சிறுபறை முழக்கி யருளே. (4)

கோலவா ரணநான்கு கோட்டுலக் கைகள்கொடு
கொடுநிருதர் பற்கு வைகளைக்
கோதின்மகு டத்துரலி னிடையிட் டிடித்துக்
கொழித்துவெண் மாவ தாக்கி
பாலலோ சனநீவி சன்னதிநி வேதனம்
பண்ணியொரு கூன்கு றட்பேய்
பரிவாகி யேதின்ன வெண்ணிவரு பொழுதைந்து
பட்டினிப் பேய்ப்ப றித்துச்
சாலவொரு பிடியள்ளி வாயினிட மிடறினிற்
றக்கிவிக் கிக்க டநிணைத்
தண்ணீர் குடித்திளைப் பாறிமகிழ் வாகிநின்
சார்திருப் புகழ்கள் பாடும்
சிவசிவ பூதகண நாதசே னைத்தலைவ
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் பரவவரு மயிலையம் பதிமுருக
சிறுபறை முழக்கி யருளே. (5)

(வேறு.)

களமிசை யாலம டக்கிய முக்கணர்
    கைத்துடி யிசையென்ன
ககனத் திடைசொரி யாயிர வதன
    கங்கைமு ழக்கென்னத்
துளவணி நெடுமால் கொட்டிய முழவத்
    துழனியி னார்ப்பென்னச்
சுரர்முனி வரர்தொகு மவையின்வி ளங்குஞ்
    சுருதித் தொனியென்னக்
குளமது நிகரென வுனதுதி ருப்புகழ்
    கூறுக லிப்பென்னக்
குணில்கொடு குறவர்கு றிஞ்சிநி லப்பறை
    கொட்டும திப்பென்ன
முளரிய யன்றலை குட்டொலி யென்ன
    முழக்குக சிறுபறையே
முத்தமிழ் மயிலையி னருளுரு முருக
    முழக்குக சிறுபறையே. (6)

புடவிக் குரமென் வேதன மைத்தபொ
    ருப்பும்வி திர்ப்படையப்
பொற்றிரு வானவர் நற்றின மென்பு
    கழ்ந்தும கிழ்ச்சி பெறத்
தடவிக் ரமசமர் நிருதர்தி யங்கிச்
    சிந்தைக லக்கமுறச்
சேணுறும் விஞ்சையர் வீணைகள் விட்டுச்
    செவிநிறை யமுதுண்ணக்
கடமிக் குளதிசை யானைக ளொட்டலை
    காதுகள் செவிடுபடக்
கட்செவி யெட்டுநெ ளிந்துப யந்தெறி
    கனலுமிழ் கண்மூட
முடவுப் படவர வமளியென் மருக
    முழக்குக சிறுபறையே
முதுதமிழ் மயிலையி னருளுரு முருக
    முழக்குக சிறுபறையே. (7)

நாகநி ழற்றரு வானவ ரெனவே
    நற்பூ மாரிபெய
நளினத் திருமக ளுடற விர்ந்தரு
    ணரணன் மார்பணையக்
கோகில முதலா கியசில பறவைகள்
    குழைமர முழைநுழையக்
குஞ்சர மொடுசீ யம்பகை யின்றியோர்
    குகையின டங்கியிட

வாகன மாகிய நின்மயின் மகிழ்வாய்
மகிதல நின்றாட
வஞ்சனை செயுநிரு தத்திர ளேழெனும்
வாரியை விட்டோட
மோகினி யாகிய மாறிரு மருக
முழக்குக சிறுபறையே
முதுதமிழ் மயிலையி னருளுரு முருக
முழக்குக சிறுபறையே. (8)

சிலைநுதன் மைக்குழல் வனச மலர்க்கொடி
பணிசரணுள்
திரையமு தைப்பொரு கருணை நிறைத்திடு
கயல்விழியாள்
கலைமதி யொப்பதோர் திருவத னத்தினள்
பிடியிடையாள்
கனகம யக்கிரி கடைபடு செப்பினை
யிகழ்முலையாள்
முலைமுகை முத்தென முறுவல் விளைத்திடு
சிறுநகையாள்
முதிர்கத லிக்கனி நறியச ருக்கரை
யெனுமொழியாள்
மலைமகள் பெற்றருள் முருக முழக்குக
சிறுபறையே
மயிலை நகர்க்கிறை புதல்வ முழக்குக
சிறுபறையே. (9)

படியி னிடத்தெனைக் கருவி னுதித்திடும்
பகைதடிவோய்
பலகலை கற்றவர் சொலும்வழி நிற்பவ
ரறிபொருளே.
துடியிடை நற்குற மடமயி லைப்புணர்
சுகமயமே
சுரர்முனி வர்க்கருள் செயவரு தற்பர
சுயசொரூபா
அடிகளு றத்தவர் மனதிரு ளைப்பொரு
மிளரவியே
அமலர்செ விக்குண மெனுமொரு சொற்பொரு
ளருள்குருவே
வடிவழ கைப்பொரு முருக முழக்குக
சிறுபறையே
மயிலைந கர்க்கிறை புதல்வ முழக்குக
சிறுபறையே. (10)

**சிறுபறைப் பருவம் முற்றிற்று.**

## 10. சிறுதேர்ப் பருவம்.

பையவந் துதயகிரி மீதேறி யிரவிருட்
படலமொடு சீத மிக்கப்
பனித்தலைய கற்றிவெண் மதிமுக மழுங்கவும்
பண்ணிவா னத்து மீன்கள்
வெய்யதண் கிரணவொளி யுள்ளடங் கச்செய்து
மேதினியில் வாழு முயிர்கள்
விழிகட்கு முதவிமிகு பற்பலகு ணங்களைவி
ளக்கிவை களையெ ழுந்த
துய்யதமிழ் மறைச்சைவர் செங்கையி னருக்கியத்
துணையினிற் றன்வ லியினூற்
துட்டநிசி சரர்பகையை நீக்கியவ் வுணவினூற்
சுரர்மகிழ வனச மலரச்
செய்யும்வெங் கதிரவன் றேர்நாண மாயூர
சிறுதே ருருட்டி யருளே. (1)

பாரான வந்தவத ரித்துக்க பாலீசர்
பாதம்ப ணிந்து பெயக்குநாட்
பத்திசெய் தரக்கர்தமை வெல்லும்வரம் வாங்கியப்
பத்துமுக ராவ ணனையும்
பேரான கும்பகரு ணன்றனையு மற்றுளப்
பிள்ளைகளை யும்ப டையையும்
பிலத்தினி லிருந்துவரு மாமூல பலமுடன்
பெறுவரங் களையும் வென்று
தாரான வாகையு மணிந்தயோத் தியின்வந்து
தனதுசெங் கோல்ந டத்தித்
தருமிறைக டிரைகளைக் கொண்டுங்க ளாலையந்
தாள்கட்டி வைத்த நேயச்
சீராமர் செய்தேரு வந்தவடி வேலவ,
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (2)

கலையார வேகற்ற கும்பமுனி சொல்லிலக்
கணமுடன் காவியத்துக்
கனிமதுர நவரசமு மசலமுரு கப்பாடு
காந்தாரத் திசையீ ரமும்
மலையாரு மகில்குங்கு மத்தினுள வாசமுடன்
மற்றுமுள காவின் மணமும்
வளர்தொண்டை நாடதனில் விளைசெந்நெல் வயலூடு
மள்ளர்களை களையு மாதர்
தலையார மேலிந்த னக்கோட்டின் மீதணிவு
வாதுகற் பூர கானத்

தருமணமும் வருவிருந் தூட்டமனை தொறுமட்ட
சட்டாச மணமு முண்டே
சிலையார வேளிர்தம் வகும்வீதி தனின்முருக
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (3)

கங்குவளை தின்றிக்க ருந்துமா னின்மனைக்
கன்றுன்னி நின்று முலையின்
கண்டிறந் தூற்றுபா லாற்செந்நெல் விளையுமுயர்
கமுகுகனி நெறியுச் சியினில்
தங்குவளை வயிறுளைந் தீன்றமுத் தினிற்பெருகு
தண்ணிலவி ளுல்வா வியினில்
தாமரையின் மலர்குவியு மாம்பன்மலர் விரியுமித்
தண்பனைத் தொண்டை நாட்டில்
பொங்குவளை கடல்சூழ்ந்த பூவுலகி னின்னருட்
புதுமையறி விக்க வேண்டி
பொற்புறுதி ருத்தணிகை வெற்பினொரு தினமொரு
பொய்கைதனி லுண்டாக் கியவிச்
செங்குவளை மாலையணி சிங்கார வேலவ
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (4)

வார்பெறுத னத்திருக் காமாட்சி தவமறிய
வந்தயே காம்ப ரேசர்
மதகரி சிலந்தியா வுடனம்பி வேடனும்
வணங்குகா ளத்தி யீசர்
நீர்பெறுச டாடவிகு லுங்கவொரு பதினெட்டு
நித்தியிடு தியாக ராசர்
நித்தருத் தங்கமுகு வந்துபூ சிக்கவரு
நிகழ்வேத கிரியீ சுரர்
தார்பெறுசி ரத்தின்வரு மாசிலா மணியீசர்
தண்டிருப் பாசூ ரீசனுர்
தங்குதிரு விற்கோல நாதர்திரு வான்மீசர்
தாமர்திரு வல்லி தாயார்
சீர்பெறுதி ருக்கபா லீசரருள் வேலவ
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (5)

உன்மயம் தாமென்ற பொறிபுலன் கரணங்க
ளொன்றியொன் றறிய மாட்டா

துன்னுயிரு மறிவிக்க வறியுமது வன்றியே
யுனதெனதெ னத்தி யங்கும்
பொன்மயமு நிலமயமு மனையாட்டி மயமுமெய்ப்
பொருதவத் தையினி லுண்டோ
பொய்யுணர்வி தனைவிட்டு மெய்யுணர்வை நாட்டியே
புவனபோ கங்க ளெல்லாம்
மென்மயம தாகவே நீநினைகு வாயென்ற
னிதயத்தி லேவி ளங்கி
யெள்ளுக்கு ளெண்ணெய்போ லெப்பொழுது மகலாத
வின்பவடி வாகி நிறைந்த
சின்மயநி ராமயகு ழந்தைவடி வேலவ
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (6)

பத்தியுட னுதையத்தெ ழுந்துபுனன் மூழ்கியே
பரிந்துவெண் ணீற ணிந்து
பகர்பூத சுத்திமுத லைந்தையு மியற்றியே
பதுமா சனத்தி லிருந்து
புத்தியொரு மிக்கமுக் குணமைந்து புலனையும்
புறம்விடா துள்ள டக்கிப்
போக்குவர வானயிடை பிங்கலையின் வாயுவைப்
பூரித்து ளேநி றுத்தி
நித்தியம தாமிதைய புண்டரிக மலருளே
நீடுசின கரம மைத்து
நிமலவடி வுள்ளூறப் பாவித்து விதிமுறை
நினைந்துசிவ பூசை செய்து
சித்திபெறு வாயிலார்க் கருள்கபா லீசர்சுத
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (7)

ஆசில்விரை வாசுகவி யரியசந் தத்தமிழ்க்
கருணகிரி நாதர் தன்னால்
ஐந்திலக் கணமுமுரை யதிமதுர கவிதைதனை
யன்புமிகு நற்கீ ரனால்
பேசுசித் திராதிகவி பிரமபுர வேதியன்
பிள்ளையெனு நின்வாக் கினால்
பெருகுவித் தாரகவி பாரகா வியமுதற்
பிரபந்த மற்று மெல்லாம்
மாசில்வர முறுகச்சி யப்பனாற் செந்தூரின்
மருவுபகழிக்கூத் தனால்
வளர்குமர குருபரத் தம்பிரா னல்வழியில்
வருபொய்யா மொழிய வவையால்

தேசுபெறு முலகறிய வறிவித்த தேசிக
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (8)

முந்துதொகை யெண்பெயர் முறைபிறப் புருவளவு
முதலந்த மிடைபோ லிகள்
மொழிபுணரப் புறத்தெழுந் தியல்புதனி மைத்தோர்
மொழியைந்து பாலி ருதிணை
யுந்தனையு மூன்றிடத் தும்வழக் குச்செய்யு
ளோர்குறிப் பால்வெளி யிதனுல்
ஓதுதல் சொலதுவிற் குசாற்றறி சொல்பெயர்
வினைகளுட னிடையுரிசொ ஞன்காம்
ஐந்திணை யகம்புறமு திரைகோட லாதியா
மகவைபொ ருளலங் காரமு
மணியிரண் டாறுருப் பாயிரண் டாகுமயற்
பவ்வைந் திலக்க ணமெனுஞ்
செந்தமிழ்க் குறுமுனி வணங்குகுரு தேசிக
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (9)

புயலைநிகர் செங்கையினர் பூம்பாவை யூரவர்நின்
புகழ்மருவு பிள்ளைத் தமிழால்
புகலெனத் தம்மமுத வாக்கிஞ லொருசீர்
புகன்றதுன் வாக்க தாக
நயமதுர கவிபொழியு நிபுணதாண் டவராய
நாவல னிசைந்து பாடி
நான்மறைசொல் வாணர்தமிழ் வாணர்நிறை தொண்டைவள
நன்ஞட்டு ளோர்கள் மெச்ச
இயல்புறுச காத்தமோ ராயிரத் தாறுநூற்
றெழுபத் திடனெட் டாண்டினில்
வெய்துபவ வருடமா வணியுத்தி ரட்டாதி
யிலின்பு டனரங் கேற்றிடுஞ்
செயமிலகு தமிழ்கொண்ட சிங்கார வேலவ
சிறுதே ருருட்டி யருளே
திரைவாரி முத்தருறை மயிலாபு ரிக்கிறைவ
சிறுதே ருருட்டி யருளே. (10)

**சிறுதேர்ப் பருவம் முற்றிற்று.**

**திருமயிலைப் பிள்ளைத் தமிழ் முற்றும்.**

T. 1906

# திருமயிலைக் கோவை

## (திருமயிலைச் சிங்காரவேலர் கோவை)

(அம்பலவாணக் கவிராயரால் இயற்றப்பெற்றது.)

வேலு மயிலுந் துணை.

# திருமயிலைக் கோவை

### விநாயகர் வணக்கம்

பெருகா ரணம்புகழ் சிங்கார வேலர் பெருமைசொல்ல
வருகாதல் சேரும் பலன்மேவி வண்டு மலர்ப்பசுந்தேன்
பருகாவி சூழு மயிலைநற் கோவை படர்வதற்கு
முருகா ரொருகொம்பிற் கூத்தாடும் பேரத்தி முன்னிற்குமே. (1)

### அவையடக்கம்

வியலா ரொளிர்மணிக் கோவையுங் கானின் மிகப்படருஞ்
செயலாருங் கோவையுங் கோவையென் றேபுவி செப்புதல்போல்
மயலான தின்றிப் பலநூலுங் கற்றவர் வாய்மொழியால்
இயல்கோவை தானுமென் கோவையுங் கோவை யெனத்தகுமே.
(2)

## நூல்

## 1. களவியல்.

### கைக்கிளை

#### காட்சி

நீர்கொண்ட கொண்டல் செழுந்தா மரைகுமிழ் நீலமலர்
ஏர்கொண்ட கோங்குசெவ் வாம்பல்பைங் காந்த ளிவைமலர்ந்து
சீர்கொண்ட சுந்தர சிங்கார வேலர் திருமயிலைக்
கார்கொண்ட காவி லொருகாம வல்லியென் கண்ணுற்றதே. (1)

#### ஐயம்

கானிட மாமயிற் சிங்கார வேலன் கவின்மயிலைத்
தேனிட மாமல ரோபுன லோபணி சேரிடமோ
வானிட மோமலர் மாலிகை யோமன் மதனிடமோ
மானிட மோவல்லி யேழவென்ன நின்றவிம் மானிடமே. (2)

#### துணிவு

வாரணி கொங்கை மதவா ரணங்குற வள்ளிபங்கன்
பூரணி மாமகன் சிங்கார வேலன் புகழ்மயிலை
ஏரணி பூவடி செங்காவி மைக்கண் ணியம்புதல்போல்
தாரணி மானெனுங் காரணி வார்குழற் றாரணியே. (3)

### குறிப்பறிதல்

அனையும் பிதாவு மனையான் மயிலை யருட்குமரன்
புனையும் கடம்பணி சிங்கார வேலன் பொலன்கிரிவாய்
எனையும் பராகச் சிவனுக வையுற வின்றிப்பலகால்
நினையும் படிசெயு மம்மாதர் நீல நிகர்விழியே. (4)

### இதுவும் அது

வார்க்கட ணுக முகத்தான் கிரவுஞ்ச வஞ்சனஞ்சப்
போர்க்கட னுடும் படையான் மயிலைப் புனிதனருட்
சீர்க்கட லாகிய சிங்கார வேலன் சிலம்பின்மின்னுள்
கார்க்கட லானகண் பாற்கட லாம்வகை காட்டியதே. (5)

கைக்கிளை முற்றிற்று.

---

## தலைவிப் புணர்ச்சி.

### இரந்து பின்னிற்றற்கு எண்ணல்

நீர்தந்த சேற்றினை,நீரே கழுவுமந் நீர்மையைப்போல்
நீர்தந்த காமக் கனலைத் தவிர்ப்பவர் நீரெனவே
வார்தந்த பூண்முலைக் கோதநெஞ் சேசெல்வ மாமயிலைத்
தார்தந்த மார்பினர் சிங்கார வேலர் தடங்கிரிக்கே. (6)

### இரந்து பின்னிற்றல்

கான்மயி லாகி யுமைபூசை செய்த கவின்மயிலைத்
தேன்முகை விண்டவர் சிங்கார வேலன் சிலம்பினெளி
யேன்மிசை யம்பிரண் டேவ யிரங்கு மியன்மறந்தைம்
பான்முடி சாய்த்துப் பதம்பார்த்து நிற்பதென் பைந்தொடியே. (7)

### முன்னிலை யாக்கல்

பாரும்விண் ணும்புகழ் சிங்கார வேலன் பயின்மயிலை
சூருமின் பாவை யுறுபண்ணை நீமறந் தாசுமின்றிச்
சேரும் வித்தார மதுரமும் பேசிலைச் சித்திரமே
நேருமென் னுநின்ற சித்திர மேதும் நிகழ்த்துகவே. (8)

### வண்டோச்சி மருங்கணைதல்

மருவார் குவளையன் சிங்கார வேலன் மயிலையன்னுன்
நெடுவார் குழலுறை வண்டர்கண் டீடை நேர்மையெண்ணீர்
படுகுழை யாகிய வண்டர்கள் சாலப் பழகிடினும்
நடுவே பொல்லாங்கு செயுந்திறங் கண்டனென் நானிலத்தே. (9)

### மெய்தொட்டுப் பயிறல்

மெய்த்தே வரும்பணி சிங்கார வேலன் விரவுசெந்நெல்
செய்த்தேன் பெருகு மயிலையி னுன்முனஞ் செய்தவத்தால்
நெய்த்தேன் குழலு மிடுபணி யாரமும் நேர்திருத்தி
வைத்தே மணவிர தம்நிறை வேற்றினன் வாணுதலே. (10)

### பொய் பாராட்டல்

மணிவாய்த்த திண்புயன் சிங்கார வேலன் மயிலைமின்னே
அணிவாய்த்த நின்முகச் செவ்விகண் டேங்கி யகம்வருந்திய்
பணிவாய்க் கிடந்து தவமுயன் மாமதி பாரறியத்
தணிவாய்ச் சுழன்றிர வெய்திமெய் தேய்ந்து தளர்கின்றதே. (11)

### இடம்பெற்றுத் தழால்

முதியா ரறிவி லுறைஞான வாரிதி மூவிரண்டு
மதியாகு மானனன் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
விதியாக முற்றிய தானமும் வாய்த்து மேவுமின்னாள்
கதியாகு நல்லமு தந்தரு சொர்க்கநங் கைவசமே. (12)

### வழிபாடு மறுத்தல்

துடியேற்ற செங்கைக் கபாலீசர் மைந்தன் சுரனரவிண்ணில்
குடியேற்றி வைத்தவன் சிங்கார வேலன் குறத்தியெனும்
வடியேற்ற கண்ணி மணாளன் மயிலை மயிலைமணிக்
கொடியேற்ற மாகுந் திருநாண் மருவக் குறித்தருளே. (13)

### இடையூறு கிளத்தல்

அப்புற்ற வாவி புடைசூழ் மயிலை யன்பவளம்
ஒப்புற்ற மேனியன் சிங்கார வேல னுயர்வரையில்
செப்புத் தனத்தைப் புதையாய்ப் புதைத்தனை சேலைமுற்றும்
இப்பெற்றி செய்குவ தென்னுகு மங்கைக், கியம்புகவே. (14)

### நீடு நினைந்து இரங்கல்

மருமொய்த்த வெட்சியன் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
உருவத் தொடுமத் திரநா ணெனக்கானு முறுவ திந்தப்
பருவத் தருவிற் படர்காம வல்லியின் பாங்கெய்தலான்
நிருமித்த வண்ணத்தி னில்லாம லேக நெகிழ்ந்ததுவே. (15)

### மறுத்தெதிர் கோடல்

சாலி சொரிந்த தரள நிலாவு தடமயிலை
மோலி புனைந்தருள் சிங்கார வேலனை முன்னலர்போல்
வேலி பிரிந்த பயிர்போ லுயிரு மெலிந்திடவென்
பாலி னிருந்த பெருநா ணுருகிப் படர்கின்றதே. (16)

### வறிது நகைதோற்றல்

சித்தம் பலவழி செல்லாம லாக்மச் செம்பொருளை
நித்தம் பகர்ந்தருள் சிங்கார வேலவர் நீண்மயிலைச்
சத்தம் பயிலளி சூழ்தோகை யார்முகந் தாமரைவாய்
முத்தம் பவளமென் றெண்ணவெண் மூரல் முளைத்ததுவே. (17)

### முறுவற் குறிப்பு உணர்த்தல்

பொய்ச்சங்கந் தீர்த்தருள் சிங்கார வேலன் புனமயிலோன்
செய்ச்சங்கம் பான்மதி போல வுலாவுந் திருமயிலைக்
கைச்சங்க மின்னிடை மானுள் வதன கமலமிசை
மெய்ச்சங்க மிங்குற முத்த நிலாவிது மேவியதே. (18)

### முயங்குதல் உறுத்தல்

கொங்கார் மலர்த்தண் டலைசூழ் மயிலைக் குழகனெளிர்
சிங்கார வேலன் மகவான் பணிபவன் சேரிமையக்
கங்கா நதியைப் பயோததி வந்து கலந்ததொக்கும்
செங்காவி யங்கண் மடமானை நானின்று சேர்ந்ததுவே. (19)

### புணர்ச்சியின் மகிழ்தல்

தாய்க்கே யிணைநல்ல தம்பிக்குத் தம்பி தருமநிதி
ஆய்த்தேர் குமர குருநாத பூபதி யன்புபுரி
சேய்த்தே மயிலையிற் சிங்கார வேலன் சிலம்புமின்னுள்
வாய்த்தேனை யுண்டுளம் வாய்த்தேனை யாரொப்பர் மாநிலத்தே.
(20)

### புகழ்தல்

வேரித் திருமலர்ச் சிங்கார வேலர் வியன்மயிலை
மாரித் தடமுகில் சூழ்நந்தி மால்வரை மான்முலைபோல்
பாரித் திறுகிப் புளகித் திளகிப் பணைத்தெழுந்து
பூரித் தனுமுனக் குண்டோ வமுதப் புதுக்குடமே. (21)

### ஏற்புற வணிதல்

மேடையுஞ் சோலையுஞ் சூழ்மா மயிலையன் மெய்யமுதும்
மாடையு மன்னவன் சிங்கார வேலன் வரையணங்கே
ஓடையும் பூவுங்கல் லாரமுத் தோடு மொலிசெய்வண்டும்
ஆடையு மெய்யணி யாவு முன்போல வணிந்தனமே. (22)

### தலைவிப் புணர்ச்சி முற்றிற்று.

---

## வன்புறை.

### அணிந்துழி நாணியது அறிந்து தெளிவித்தல்

மாலன்ன வாகனன் போற்றும் மயிலையன் வள்ளியம்மை
சேலன்ன கண்மகிழ் சிங்கார வேலன் சிலம்பினிலம்
பாலன்ன மேயிட்ட பொற்கலங் காணினுன் பாங்கமைந்த
மேலன் னவரு மிசைவா ருளமஞ்சி வெள்கலையே. (23)

### இதுவும் அது

சேந்தன் மயிலையிற் சிங்கார வேலன் செழுங்கிரியில்
காந்தளின் வண்டுமிடைப் பாலதெய் யாடையுங் கார்ப்புயன்மேல்
ஏந்திய தாரையுஞ் செப்பார் பணியு மியைந்த வண்ணம்
போந்துகண் டாரைய மெய்தார்வெள் கேனுளம் பொற்கொடியே.
(24)

### பெருநயப்பு உரைத்தல்

மாகத்தர் போற்றிய சிங்கார வேலன் மயிலுகந்தோன்
ஆகத் துயிருக் கிறையோன் மயிலையின் ளுள்முகம்போல்
பூகத்து மீதம் புயம்பூத் தமுதம் பொருந்தி யன்பால்
தாகத்தைத் தீர்ப்பதும் வண்டேயுண் டேகண்ட தன்மைசொல்லே.
(25)

### தெய்வத்திறம் பேசல்

பொய்த்தெய்வ மாகிய வானோர்க் கடிமை புகாமலருள்
வைத்தென்னை யாண்டவன் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
மெய்த்தெய்வந் தந்த புணர்ப்பினை யாவர் விலக்குகிற்பார்
எய்த்துள்ளம் வாடி வருந்தலென் னேமல ரேந்திழையே. (26)

### பிரியேன் என்றல்

வள்ளிக் கொடிபடர்ந் தோங்கிய தாரு மயிலையுள்ளோர்
கொள்ளச் சிறப்பருள் சிங்கார வேலன் குலவரைமேல்
அள்ளற் கமைந்த வழகணங் கேயென் னருந்துணையே
உள்ளத் தயர்வு கொள்ளேல் பிரியேனுனை யுண்மையிதே. (27)

### இதுவும் அது

பசிக்கா ரமுத முயிர்க்குச்சஞ் சீவினி பாரமயில்
நிசிக்கா தவம்வறு மைக்கோர் நிதியெனு நின்னையென்றும்
சசிக்கோ முகத்தி வருந்தேல் பிரிகிலன் றண்மயிலைச்
சுசிக்கா தவனருள் சிங்கார வேலன் சுடர்வரைக்கே. (28)

### பிரிந்து வருகென்றல்

வானினுஞ் சீரருள் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
தேனினும் பாலினும் யாகினும் வாய்மொழித் தேமளித்த
மானினு நீள்விழி யாய்வினை யாடுதி வல்விரைந்தே
நானினி யம்மலைச் சாரல்சென் றிங்ஙன் நண்ணுவனே. (29)

### இடம் அணித்து என்றல்

என்னே மயங்கி மனந்தளர் வெய்த லிரவியன்ன
பொன்னேமி யான்பணி சிங்கார வேலர் புகழ்மயிலை
மின்னே நுஞ்சார லராமணிச் சோதி விரவியெம்மூர்
மன்னேர் படிக மணிமாட மாமணி மாடங்களே. (30)

### இதுவும் அது

கருங்காவி யங்கண் கலங்கினே யேனுள்ளங் காண்மயிலைத்
தருங்காத லல்கிய சிங்கார வேலர் சயிலநும்மூர்
மருங்கார் கொடிக்கறி மேவிப் படர்தர வாய்த்ததெம்மூர்
பெருங்காய மஞ்சள் பழம்புளி மாவினம் பெண்ணமுதே. (31)

வன்புறை முற்றிற்று.

---

## தெளிதல்

சோதி மயிலையிற் சிங்கார வேலன் சுனைவரைமேல்
மாதித யங்கலங் கேலென்று தேற்றிய வாசகத்தை
நீதி யுடன்தெளிந் தேனைப் பிரிகிலர் நேரிழைக்காய்ப்
பாதி பசந்தவர் போலன்பர் யாரென்ற பார்த்திபரே. (32)

### இதுவும் அது

பொன்மயி லாபுரிச் சிங்கார வேலர் பொலன்கிரிமேல்
என்மனந் தன்னை மிகத்தேற்றி யாற்றி யெனக்குறுதி
நன்மையிங் கோதி யகன்றிடு மெய்யன்பர் நான்வருந்த
வன்மைகொண் டங்குறை யார்வரு வார்சொன்ன வாய்மை
[கொண்டே. (33)

---

## பிரிந்துழி மகிழ்தல்.

### செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லல்

போராகும் பூஞ்சிலைச் சிங்கார வேலர் புகழ்மயிலை
வாராருந் தாமரை சேதாம்ப லும்பல் வள்ளைமலர்
ஓராவி போலுமென் னீராவி மாத ருருமருவிச்
சீராகச் செல்லுத னேக்குநெஞ் சேகண் சிறந்திடவே. (34)

### பாகனொடு சொல்லல்

மற்புயன் சிங்கார வேலன் மயிலையின் மன்னியயாம்
முற்புறஞ் செய்த தவத்திடை யீடு முதியதவம்
பிற்புறஞ் செய்ததுந் தோன்ற நடந்துதன் பிற்புறம்பார்த்
துற்பல நோக்கி செலல்காண் வலவ வுவந்துநின்றே. (35)

பிரிந்துழி மகிழ்தல் முற்றிற்று.

---

## பிரிந்துழிக் கலங்கல்

### ஆயவெள்ளம் வழிபடக் கண்டு அது மாயமோ என்றல்

சிந்தித்த தெய்வம் விழியெதிர் தோன்றத்தன் சீரடியார்
வந்தித்தல் போலெண்ணில் மாதரித் தோகையை வந்தித்தலால்
சந்தித்தல் பொய்மை யதோமெய்ம்மை யோவளஞ் சார்மயிலைப்
புந்தித் தயாநிதி சிங்கார வேலர் பொருப்பிடத்தே. (36)

### வாயில் பெற்றுய்தல்

கருமைப் புயலன்ன வெஞ்சூர னஞ்சக் கறுவிவென்ற
பெருமைப் புயாசலன் சிங்கார வேலன் பெருங்கிரிவாய்
இருசொற் கொருபொருள் போலே தனக்கு மிவட்குமுயிர்
ஒருமைத் தெனச்சொலு மிம்மாதர் பார்வை யுறவுதந்தே. (37)

### பண்பு பாராட்டல்

மோகந் தவிர்த்தருள் சிங்கார வேலர் முதிர்ந்தசிவ
போகந் தழைமயி லாபுரி மாதிவ ளொண்ணிறம்போல்
சோகந் தவிரத் தளிராது சோகஞ் சுடர்முகம்போல்
தாகந் தவிர வுதியாது பூரண சந்திரனே. (38)

### பயந்தோர் பழிச்சல்

அன்பா லெனக்கருள் சிங்கார வேல ரணிமயிலை
இன்பா ரமுதை மடவா ராசியை யீன்றெடுத்தோர்
மன்பார் புரந்து வளர்செல்வ மும்பெரு வாழ்வுமெய்தி
நன்பா லுகம்பல மன்னுக பூவி னலம்பெறவே. (39)

### கண்படை பெருது கங்குல் நோதல்

சீற்றுர் பிறைநுதல் கூடிப் பிரிந்தவச் சேண்மை கண்டோர்
நோற்றுர் மயிலையிற் சிங்கார வேலனை நோக்கி நின்று
போற்றுர்க ளின்ப மெனவே யனந்தலும் போனதந்த
மாற்றுர்க ளின்ன லெனநீண் டிருண்டது வான்கங்குலே. (40)

பிரிந்துழிக் கலங்கல் முற்றிற்று.

---

## இடந்தலைப்பாடு.

### தந்த தெய்வம் தருமெனச் சேறல்

ஊழிற் பெருவலி யாவுள வென்னுமுன் னேருரையைச்
சூழிற் றருந்தெய்வ நெஞ்சே வருந்தலச் சூழல்செல்வாம்
காழிக் கவுணிய ரங்கம்பெண் ணுக்குங் கவின்மயிலைக்
கோழிக் கொடியினன் சிங்கார வேலன் குலவரைக்கே. (41)

### முந்துறக் காணல்

கண்ணுக் கொளியு முயிருக் கறிவுங் கவிக்கிசையும்
விண்ணுக் கிரண்டு சுடரும் பிரிந்துபின் மேவுதல் போல்
எண்ணிற் பெரும்புகழ் சிங்கார வேல ரெயின்மயிலைப்
பெண்ணுக் கரசி பிரிந்துமுன் போல்வரப் பெற்றனமே. (42)

### முயங்கல்

பந்தக் கரும மலமாயை தீர்த்துப் பரிமயின்மேல்
வந்தக் கதியருள் சிங்கார வேலர் மயிலைவெற்பில்
சந்தக் களப முலைமலை மாதரார் தந்தநலம்
சிந்தைக்கு ணின்று தெவிட்டாம னித்தியந் தித்திக்குமே. (43)

### புகழ்தல்

தருசொற் குயில்பயில் செந்தளிர் மாம்பொழிற் றண்மயிலைக்
குருசொற் பிரணவச் சிங்கார வேலன் குலகிரிமேல்
வருசொற் சசிமுகம் வேர்ப்ப வரம்பை வணங்கவிவள்
இருசொற்கம் போல வொருசொற்கம் பேரின்ப மீவதின்றே. (44)

### உடன்புணர் ஆயத்து உய்த்தல்

கலைமுறை கற்ற பெரிய பராசரன் காதலர்க்கு
நிலையுப தேசஞ்செய் சிங்கார வேலர் நிதிமயிலை
தலைமுத லங்க முறுமுடற் கோருயிர் சார்வதுபோல்
முலைமட மங்கைய ராயத்து நீசென்று மன்னுகவே. (45)

## இடந்தலைப்பாடு முற்றிற்று.

---

## பாங்கற் கூட்டம்.

### தலைவன் பாங்கனைச் சார்தல்

சீரானை வேந்தனைச் சிங்கார வேலனைச் சேர்மயிலை
ஊரானை மாமயி லூர்வானை வாழ்த்துமென் னுள்ளமயல்
பாரானை நண்புறு பார்ப்பானைச் சார்ந்திப் பரிசுரைத்தால்
வாரானை வந்தவன் சேனைத் தலைவியை மன்னுவனே. (46)

### பாங்கன் தலைவனை உற்று வினுதல்

தேராது நண்புகொண் டோர்செயுஞ் செய்கை திறம்பினையோ
சோரா தடைக்கலஞ் சேர்மன்னர் நாடுறச் சூழ்ந்தனையோ
சீரார் மயிலையிற் சிங்கார வேலர் சிலம்பண்ணலே
போராரு நின்புய வாட்டமென் காட்டப் புகுந்ததுவே. (47)

### இதுவும் அது

மன்பார் புரக்குஞ் செயற்கிடை யூறிங்ஙன் வந்ததுண்டோ
என்பா னினது குறிப்பின்றி நிற்ற லிசைந்ததுண்டோ
இன்பாகு மேனியன் சிங்கார வேல னெழின்மயிலை
அன்பான வண்ணனின் றேள்வண்ண மிவ்வண்ண மான
[தென்னே. (48)

**தலைவன் உற்றது உரைத்தல்**

ஆவிக் கருள்புரி சிங்கார வேல னருகிருக்கும்
தேவிக் கினியவன் பொன்னூர் மயிலைச் சிலம்பினண்பா
வாவிக் கயலை வலைவளைந் தாங்கென் மனத்தை மின்னாள்
காவிக் கருங்கண்ணி சூழ்ந்தே கவரக் கலங்கினனே. (49)

**பாங்கன் கழறல்**

போதைச் சொரியும் பொழில்சூழ் மயிலைப் புனிதன்மலர்க்
கோதைப் புயாசலன் சிங்கார வேலன் குலகிரிமேல்
காதைப் பொருதும் விதிமாது நோக்கிற் கலங்கினையால்
பேதைப் பொருட்டிழப் பாரோ வறிவு பெரியரே. (50)

**தலைவன் கழற்றெதிர் மறுத்தல்**

அருந்தமி ழாகரர் சிங்கார வேல ரணிமயிலைப்
பொருந்துநண் பாவெனைத் தேற்றவென் னுரும் புயன்சிறக்க
வருந்திருக் காஞ்சி நடுவெளி மேலுற வைத்தகுடப்
பெருந்தனங் கண்டவர் யார்மயங் காரிப் பெருநிலத்தே. (51)

**பாங்கன் தலைவனைப் பழித்தல்**

மல்லிக்கு வேள்பணி சிங்கார வேலர் மயிலைநண்பா
வில்லுக்கு நேர்நுத லாள்பொருட் டாக மெலிவதுதான்
கல்லுக்கு வாய்மடங் காத பெரிய கணிச்சிபசும்
புல்லுக்கு நேரிய தன்வாய் மடங்குதல் போன்றதுவே. (52)

**தலைவன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல்**

மேழி வளர்கொடிக் காராளர் வாழும் வியன்மயிலை
வாழி திருவருட் சிங்கார வேலர் வரையினண்பா
ஊழி பெயரினும் பேராவென் சார்பெனு மோங்குகரை
வீழி யிதழி மயல்வெள்ள மோத மெலிந்ததுவே. (53)

**பாங்கன் தன்மனத் தழுங்கல்**

விரியா யிரங்கதிர் வெய்யோற்கு மின்மினி மிக்கவொளி
பிரியா தளிப்பது போலவந் தோநங்கள் பார்த்திபர்க்கு
திரியா வறிவினை யானோ திருத்துவன் சீர்மயிலைப்
புரியாறு மாமுகன் சிங்கார வேலன் பொலங்கிரிக்கே. (54)

**பாங்கன் தலைவனோ டழுங்கல்**

சேவைப் பணக்கொடி தேவாதி தேவன் திருமகன்பூம்
பாவைச் சினகர சிங்கார வேலன் பயின்மயிலை
மாவைப் புணரு மணிமார்ப நீதி மணம்பொருந்தாப்
பூவைக்கு மாலை மருவுதல் யான்முன் புரிதவமே. (55)

### பாங்கன் எவ்விடத் தெவ்வியற்று என்றல்

தண்ணேர் கடம்பணி சிங்கார வேலன் தடமலர்த்தேன்
பண்ணேர் மயிலையன் மேருவெற் பாமுன் படியளந்தோன்
கண்ணே நெடுங்கண் வளரிட மோவவன் கைக்குடையோ
விண்ணே பயிலிட மேதிய லேதந்த மெல்லியற்கே. (56)

### பாங்கன் இவ்விடத் திவ்வியற்று என்றல்

சோதிகண் மேவிய சிங்கார வேலன் சுராதிபன்சீர்
வீதியின் மும்முர சார்க்கு மயிலை விசாகன்வெற்பில்
ஓதிய வங்க மெவையு முவமைக் குவமையதா
மாதியன் மேவு மிடமணம் வீசு மலர்ப்பொழிலே. (57)

### பாங்கன் தலைவனைத் தேற்றல்

கானுறை வள்ளி கனிவாய்ச்செந் தேன்சுவை கண்டுமகிழ்
வானுயர் கீர்த்தியன் சிங்கார வேலன் மயிலைநண்பா
தேனுகர் வண்டுக் கலர்மேவு தென்றற் றெரிப்பதுபோல்
நானுன தாவி யனையா ணிலைகண்டு நண்ணுவனே. (58)

### பாங்கன் குறிவழிச் சேறல்

பயிலும் பெருவிறற் சிங்கார வேலன் பதிமயிலை
மயிலும் பிணையு மெகினமுஞ் சக்கர வாகமுமாம்
குயிலும் கிளியு மினமென்று மேவநங் கொற்றவனூர்
அயிலும் சுவையமு தன்னுள் மருவுங்கொ லாய்பொழிற்கே. (59)

### பாங்கன் இறைவியைக் காண்டல்

மண்ணுடர் போற்றிய சிங்கார வேலன் மயிலைநண்பன்
உண்ணுடு மன்புறு மின்னு ளியலை யுரைத்திடுங்கால்
கண்ணு லறிவரி தென்றே செவிப்புலன் கண்டவந்தப்
பெண்ணு ரமுத மெதிர்நின்ற வாறென்ன பெற்றிமையே. (60)

### பாங்கன் இகழ்ந்ததற் கிரங்கல்

உடுமணி மாலையன் சிங்கார வேல னுயர்மயிலை
நெடுநக ரன்னவிந் நேரிழை யாளெதிர் நின்றுமைக்கண்
கடுவுறழ் வேல்பொரக் காமவெந் தீச்சுடக் கண்டபுண்மேல்
அடுபுதுக் கார மெனவிகழ்ந் தோதி னேனண்ணலே. (61)

### தலைவனை வியத்தல்

நிறைவா ருதியெழிற் சிங்கார வேலர் நெடுந்திரைசூழ்
பொறைவாணர் போற்று மயிலைத் தடத்தம் புயமலர்மேல்
உறைவாள் வருத்த மெலிகாய மின்றி யுாத்தின்வந்த
மறைவாணர் வேந்தன் பெருமையை யார்சொல்ல வல்லவரே. (62)

### தலைவியை வியத்தல்

மந்தா இனிமைந்தன் சிங்கார வேலன் மயிலையன்னுள்
கொந்தாரும் வெட்சித் தொடையுடை யான்வரைக் கொற்றவர்க்குச்
சந்தாபந் தீர்க்குந் தருணசந்தி ரோதையந் தண்ணளியால்
அந்தாகந் தீர்க்கு மமுதாவி நல்கு மணங்கிவளே. (63)

### தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல்

வைச்சமெய்க் கீர்த்தியன் சிங்கார வேலன் மயிலையன்னுள் (64)
அச்சமு நாணும் பயிர்ப்பு மடமையு மன்புறுகண்
மச்சமுஞ் சோலைக் கெழில்செய் யுருவு மருவியிரு
பச்சிளநீர் கொண்டுநின் னருள்கண்டே னெங்கள் பார்த்திபனே.

### தலைவன் சேறல்

கரும்புங் கமுகமும் வாழையு மேவிய காமயிலைப் (65)
பெரும்புண்ணி யப்பொருள் சிங்கார வேலன் பிறங்கலின்வாய்
அரும்புந் தளிரு மலருஞ்செந் தேனு மளியுங்கொண்டு
விரும்பும் பசுங்கற் பகக்கொம்பர் காணிலென் மெய்த்தெய்வமே.

### தலைவியைக் காண்டல்

மதிநுதல் வேர்ப்பப் புடைநோக்கி நோக்கம் வரம்வதிரக் (66)
கதிர்முலை விம்ம விருப்போங்க நின்றதோர் காமவல்லி
துதிமயி லாபுரிச் சிங்கார வேலவன் சூரனுளத்
ததிபயங் கொள்ளச் சிலைவாங்கு சேந்த னணிவரைக்கே.

### கலவியின் மகிழ்தல்

மன்மந் திரமுரை சிங்கார வேலன் மயிலையின்சேர் (67)
பன்மந்தி ரப்பொருள் செவ்வேள் புகழன்ன பாற்கடலில்
தன்மந் தரமை யரைவா யமுதுண்ணத் தந்ததிவள்
தன்மந் தரம்பத் தரைவா யமுதுணத் தந்ததுவே.

### தலைவியைப் புகழ்தல்

மெய்வா ரணத்துசன் சிங்கார வேலன் விசாகனன்பர் (68)
பொய்வா ரணந்தவிர்த் தாள்வோன் மயிலைப் பொலங்கொடிக்கு
மொய்வா ரணமன்னு மைவா ரணமுலை மோகனமால்
கைவா ரணங்கனங் கார்மேவு வாரணங் கண்ணிணையே.

### தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல்

கயிலைப் பொருப்பர் தருந்திருப் பாலகன் கற்றவர்வாழ் (69)
மயிலைப் பதிவளர் சிங்கார வேலன் மணிவரைமேல்
பயிரைப் புரக்க மழைமின் னெடுவரு பான்மையினென்
உயிரைப் புரக்க வரினுயிர்ப் பாங்கியோ டுற்றருளே.

### தலைவியைப் பாங்கிற் கூட்டல்

தடத்துக்குத் தாமரை தாமரைக் காமலர் தண்மலர்க்கு
மடற்பெற்ற தேனந்தத் தேனுக்குத் தீஞ்சுவை வாய்த்தெனக்குக்
குடக்கொற்ற நீள்கொடிச் சிங்கார வேலன் குணமயிலை
இடத்துற்ற பூம்பொழி லாயத்துப் பாங்கியோ டெய்துகவே. **(70)**

**பாங்கற் கூட்டம் முற்றிற்று.**

---

## மதியுடம்பாடு.

### நாற்ற முதலிய ஏழானும் ஐயமுற்று ஓர்தல்

சுருங்கிய வுண்டி தனிவைகல் தெய்வந் தொழாமைசெயல்
ஒருங்கு மறைத்தன் முலைத்தோள் பணைத்தன்மை யோதிமணம்
திருந்து நடையிவை வேறுய வாறெவன் சீர்மயிலை
அரும்பு நகையருட் சிங்கார வேலன்வெற் பார்மகட்கே. **(71)**

### அவ்வகை தன்னால் ஐயந் தீர்தல்

உணர்ந்தார் மயிலையிற் சிங்கார வேல னுமைபுதல்வன்
புணர்ந்தா ரிருமங்கை யர்பாகன் வெற்பிற் பொருந்தியகம்
கணந்தா திவர்மலர்க் கைசேர்மின் னுட்கொரு காவலரால்
மணந்தா துண்டெனப துரைத்தது கோதை மலர்மணமே. **(72)**

### தனைவியந் துரைத்தல்

மாவரந் தந்தருள் சிங்கார வேலர் மயிலைவெற்பில்
தாவர மங்கையர் போலு மடந்தைநின் கண்மலரிந்
தீவர மேற்குளம் வேர்ப்பவு மாறு திருத்தவுமெய்
மேவரச் செய்யவுந் தக்கது வோவவ் வியன்சுனையே. **(73)**

### நடுங்க நாட்டம்

வேதங்கள் பஞ்சரத் தஞ்சுகங் கூறும் வியன்மயிலை
நீதங்கள் செப்பிய சிங்கார வேல னெடுங்கிரிமேல்
மாதங்கஞ் சீறி மருமத்துத் தாக்கலு மாற்றியந்த
ஆதங்கந் தீர வடர்த்தான்கை வேல்கொண்டவ் வண்ணலுமே. **(74)**

### பெட்ட வாயில் பெற்றுச் சேறல்

பணையோர் மயிலையன் சிங்கார வேலன் பருவரைவாழ்
பிணையே றனைய வுயிரா ரமுதம் பிறங்கியபந்
தணையோ விரவி தருங்காமக் கோடைத் தணிவழிக்குத்
துணையே யெனவந்த தோழிக்கெ லாஞ்சென்று சொல்லுவனே.
**(75)**

## இரவு வலியுறுத்தல்

அரவுக் கிகன்மயி லேறிய வீரிய ஞர்மயிலைக்
குரவுக் கிசைபுயச் சிங்கார வேலர் குலகிரிமேல்
இரவுக் கினிய திருமுகத் தாளென் றியம்பியபேர்
வரவுக் கிசைய வுரைப்பே னிணங்கியென் மாங்குயிற்கே. (76)

## ஊர் வினுதல்

கார்காட்டுஞ் சோலை மயிலா புரிவளர் கந்தன்வெட்சித்
தார்காட்டு மார்பினன் சிங்கார வேலன் றடஞ்சிலம்பில்
ஊர்காட்டுந் திங்க ளதனேடு நீரு முதித்தலினும்
ஊர்காட்டுங் காட்டு முரையால் விரைமல ரோதியரே. (77)

## பேர் வினுதல்

பாரூர் விசும்பும் படர்சீர்த்தி யென்றும் பயின்மயிலைச்
சீரூர் விளங்கிய சிங்கார வேலர் சிலம்பிடைநீர்
ஆரூர் வினவிலண் ணுமலை யோசொல்ல வல்லரெனில்
ஏரூர் நுமது பெயரேது சொல்லு மெனக்கிசைந்தே. (78)

## வேழம் வினுதல்

சவளச் செயக்கொடி வேளாளர் போற்றுந் தனமயிலை
குவளைத் தொடைபுனை சிங்கார வேலன் குவடனையீர்
தவளப் பிறைநிகர் முத்தான கோட்டுமுத் தானமுமிழ்
கவளக் களிறொன்று வந்ததுண் டோவிந்தக் கார்முகத்தே. (79)

## மரை வினுதல்

உருமரை வாய்க்கிண் கிணியணி பாத னுயர்மயிலை
தருமரைச் செந்துகிற் சிங்கார வேலன் றடங்கிரிமேல்
திருமரை போனு முகத்தீ ரென்வாளி சினக்கவஞ்சி
வருமரை போந்தது கண்டதுண் டோநும் வனத்திடையே. (80)

## பன்றி வினுதல்

உறிப்பன்றி வெண்டயி ருண்டருள் மான்மரு கோன்மயிலை
நெறிப்பன் னிருபுயச் சிங்கார வேல னெடுவரைமேல்
மறிப்பின்றி வானுரு மேறென வார்த்தையில் வாளிதைத்த
குறிப்பின்றி வந்துள தோசொல்லு மென்றன் குறிப்பறிந்தே. (81)

## மானேடு மனம் வினுதல்

வாராகி தந்தவர் சிங்கார வேலர் மகிழ்மயிலைத்
தீராகி யொன்று பொருமுலை யீரித் தினைப்புனத்தென்
சாராகி கொண்டொரு மான்வந்த தோவதைத் தான்தொடர்ந்து
போரா கியமனம் வந்ததுண் டோவிடை போலினைந்தே. (82)

### வழி வினுதல்

வேயினு முன்பதி ஞரு யிரம்விடை மெல்லியலார்
வாயினும் வாய்வைத்த மாலணை யல்குல் மடநடையீர்
தாயினும் நல்லவன் சிங்கார வேலன் றடமயிலை
சேயின தாமலைச் சீறூர் புகும்வழி செப்புகவே. (83)

### மொழியாமை வினுதல்

கவின்முத் தருண கிரிமுலை சேருங் கமலையன்னீர்
அவிமுத்த நீர்திறந் தாவெனத் தம்பல மாகுமன்றோ
செவிமுத் திரைமொழி செப்புக வீரென்றுஞ் சீர்மயிலை
புவிமுத்தர் போற்றிய சிங்கார வேலர் பொருப்பிடத்தே. (84)

### இடை வினுதல்

அனம்படைத் தான்புகழ் நெல்வேலி சூழு மணிமயிலைச்
சனம்படைத் தாண்டருள் சிங்கார வேலனைச் சார்கிலர்போல்
தனம்படைத் தார்க்கு நடுவிலை யேலத் தனநிற்குமோ
சினம்படைத் தாலும் விழியீர் நடுவெது செப்புமினே. (85)

### யாரே இவர் மனத்தெண்ணம் யாது ? எனத் தேர்தல்

சீலத்தர் போற்றிய சிங்கார வேலர் திருமயிலை
ஞாலத் துயர்ந்த மலைமீதுவேட்ட நயந்தவர்போல்
ஆலத்தி ஞடியஞ் சாமரை தேடின ரப்புறுமாக்
கோலத்தை நேடினர் யாரோவென் ஞேவிவர் கொள்கையதே.
(86)

### எண்ணந் தெளிதல்

பாதங்கள் பத்தர்க் கருளு மயிலையன் பங்கயச்செம்
போதங்க மாயவன் சிங்கார வேலனைப் போற்றலர்போல்
சேதங்கள் கூறி யிவர்வேட்டை யாடிய சேவகர்போல்
மாதங்க நாடி வருவாரென் மாதங்க வாஞ்சையரே. (87)

### இருவரும் உள்வழி ஒருமையிற் போதல்

பொருவன்மை மிக்க செயவீர வாகுவென் புண்ணியன்முன்
வருவள்ளி நாயகன் சிங்கார வேலன் மயிலையன்னர்
உருவுந்தன் னீழலு மேவுதல் போலிவ ணுற்றனரிப்
பருவந் தனிசென்று நங்காத லோதும் பருவமதே. (88 )

### கையுறை யேந்தி நின்று அவ்வகை வினுதல்

அன்னந் தருநடை பாலுஞ்செந் தேனு மருளுமொழி
முன்னந் தருஞ்செவ் விளநீர் முலையாம் முறைபடைத்தும்
மன்னன் பெருந்திருச் சிங்கார வேலன் மயிலையன்னீர்
என்னுந் துடியிடை தானிளைப் பாக விருக்கின்றதே. (89)

### பாங்கி எதிர் ஏதின்மொழி கொடுத்தல்

துதிமான் மகள்விண் ணவர்பெரு மான்மக யேதன
நிதிமான் மயிலையிற் சிங்கார வேல னெடுங்கிரியில்
கதிமான் பலபல நீரெய்த தாமெனிற் காயமுறு
மதிமானு நீரெய்தன் மானு மினிமதி மானெவரே. (90)

### இறைவனை நகுதல்

காவினில் வாழைக் கனிதேன் சொரியுங் கவின்மயிலை
மேவிய வாகையன் சிங்கார வேலவன் வெற்பிவர்தாம்
ஏவினில் மான்மரை யானையெய் தோமென் றியம்புவர்கை
மாவிலை யேந்திலர் சேவகஞ் செய்தது மாவிலையே. (91)

### மதியினில் அவரவர் மனக்கருத் துணர்தல்

துள்ளுங் கயல்வயல் சூழு மயிலையன் சோதிமணி
கொள்ளுங் குழைச்செவி சிங்கார வேலன் குவட்டிவர்கள்
உள்ளங் கலந்த வுறவும் பகரு முரைமுழுதும்
கள்ளங் கலந்ததுங் காட்டிடு மீட்டுங் கண்ணிணையே. (92)

பாங்கி மதியுடம்பாடு முற்றிற்று.

---

## பாங்கியிற் கூட்டம்.

### தலைவன் உட்கோள் சாற்றல்

கிளியோப்பு கோமலர் கொய்கோபெய் கோவளை கேசமொய்க்கும்
அளியோப்பு கோபத நீவிநிற் கோவிரு ளாணவந்தீர்த்
தொளிகாட்டு பார்வையன் சிங்கார வேல னுயர்மயிலை
வெளிகாட்டு சிற்றிடை யீரேவு மேவல் விரைந்தெனக்கே. (93)

### இதுவும் அது

செந்தேன் மலர்கொய்து தான்றரு கோவரைத் தேன்றருகோ
அந்தேன் சுவைபடு பாற்கடன் மீன்வலை யாற்றருகோ
பிந்தே னுமது பணியிற் புணிசெயப் பெய்வளையீர்
வந்தேன் மயிலையிற் சிங்கார வேலன் வரையிடத்தே. (94)

### பாங்கி குலமுறை கிளத்தல்

நனைக்கற் பகக்கொடி வாணிதன் கேள்வனை நான்முகப்போ
தனைக்கைக் கொடுகுட்டுஞ் சிங்கார வேலன் றடமயிலை
பனைக்கைக் களிற்றுச் சேகரர்ச் சேகர பார்த்திபனீ
தினைக்கைக் குறவர் குடிவரு மானெங்கள் சேயிழையே. (95)

### தலைவன் தலைவி தன்னை உயர்த்தல்

சொல்லிற் பிறந்த பொருள்போன் மயிலையிற் சோதிசெங்கண்
எல்லிற் பிறந்தருள் சிங்கார வேலர்வெற் பேந்திழையே
கல்லிற் பிறந்த கதிர்மணி போன்மறக் கானவர்தம்
இல்லிற் பிறந்த திருவையிவ் வாறே னியம்புவதே. (96)

### பாங்கி அறியாள் போன்று வினுதல்

நித்தன் மயிலையிற் சிங்கார வேல னெடுங்கிரிமேல்
முத்தங் கொழித்து மணிவண்ட லாடி முருகுயிர்த்துச்
சித்தங் களிக்கு மடவார் பலருளுன் சிந்தனையை
வைத்தங் கிருக்கு மடவா ளெவள்சொல்லு மன்னவனே. (97)

### இறையோன் இறைவி தன்மை இயம்பல்

சாந்தணி மார்பினன் சிங்கார வேலவன் சணமுகவன்
பூந்தரு வாரு மயிலைப் பொழில்வளர் பொற்கொடிக்கு
மாந்தளிர் மேனி மதிமுக மான்விழி மாலளகம்
காந்தளஞ் செங்கை யிலவிதழ் கோங்கங் கனதனமே. (98)

### பாங்கி தலைவி அருமை சாற்றல்

கருத்தை நயனந் திருத்தவற் றேபுவி காவலவுன்
அருத்தி விரகந் தவிர்க்கெனப் பூமக ளன்னவளைத்
திருத்தி மொழிபவ ளியாளுேசொ லாய்விண்ணிற் றேவர்குடி
இருக்கு மயிலையிற் சிங்கார வேல னிருங்கிரியே. (99)

### தலைவன் இன்றியமையாமை இயம்பல்

தேவின்முன் னவன் சிங்கார வேலன் றிருமயிலை
நாவின்மின் னளன்றி யின்ரும் படைப்பந்த நான்முகற்குப்
பூவின்மின் னளன்றி யின்ரும் புரத்தலப் பூவைவண்ணர்க்
கோவிலும் மாரரு ளின்றேலின் றுமென் னுடலுயிரே. (100)

### நின்குறை நீயே சென்றுரை யென்றல்

கூந்தற் பிடிக்கு மதயானை வேழங் கொடுத்தருவிப்
பூந்தட் புனன்முகந் தூட்டும் பொருப்ப புகழ்மயிலைக்
காந்தட் சிகையினன் சிங்கார வேலன் கனங்கிரியில்
சாந்தத் தனத்திக்கு நீயேசென் றுன்குறை சாற்றுகவே. (101)

### பாங்கியைத் தலைவன் பழித்தல்

தீதைத் தவிர்த்தருள் சிங்கார வேலன் றிருமயிலைச்
சூதைப் பொருமுலை யாட்கென் குறைசொலுஞ் சூழ்ச்சிமிக்க
மேதைப் பெரியனென் றெண்ணியிந் நாளுன்னை வேண்டுதலால்
பேதைப் பெயரின் றெனக்குமுண் டாயது பெய்வளையே. (102)

### பாங்கி பேதைமை ஊட்டல்

யானைப் பருமருப் பால்வேலி கோலி யலங்குதினைக்
கானைப் புரக்குங் குறமானின் ஞேயைக் களைந்துசுகத்
தேனைத் தரவல் லவளோ மயிலையிற் சேந்தனம்பொன்
வானைப் பணிகொள்ளுஞ் சிங்கார வேலன் வரையண்ணலே. (103)

### காதலன் மூதறிவுடைமை மொழிதல்

வாடும் பயிர்க்கு மழைபோ லன்னுண் வருத்தமெல்லாம்
வீடும் படிக்கரு ணேக்களித் தாண்முன்னர் மெல்லியலாள்
தேடும் பொருள்புகழ் பூசனை வாய்த்த திருமயிலை
கூடும் பெருகருட் சிங்கார வேலர் குலவரைக்கே. (104)

### முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்

வாருதி மீது வருநதி சேருமம் மாநதியைச்
சேருதி யென்றுபின் செப்பவா வேண்டுங்கொ றண்சிலம்பா
பாருதி செல்வியை முன்போ லணைந்தருள் பான்மயிலைத்
தாருதி யாகஞ்செய் சிங்கார வேலர் தடங்கிரிக்கே. (105)

### தன்னிலை தலைவன் சாற்றல்

அளிப்பெடை பண்பயில் சோலை மயிலை யவர்க்குநிதிக்
களிப்பருள் வாஞ்சையன் சிங்கார வேலன் கருணைமின்னே
குளிப்பினு மோடி யொளிப்பினுங் காயுங் கொழுங்கனலாம்
வெளிப்படுங் காமத்துக் குன்னரு ணீரன்றி வேறில்லையே. (106)

### பாங்கி உலகியல் உரைத்தல்

பாட்டா லுயர்தமிழ் நக்கீர ராற்றுப் படைக்குவந்து
தாட்டா மரைதரு சிங்கார வேலவர் தண்மயிலை
நாட்டா ரறியநன் னுள்பெற வீன்றவர் நல்கமின்னை
வேட்டா லணைத லிருவோர் குடிக்கும் விழுமியதே. (107)

### தலைமகன் மறுத்தல்

இடுகுண் டலகன்னன் சிங்கார வேல னெழின்மயிலைத்
தொடுகுங் குமமுலை மானுளைச் சேர்வனின் சொற்படியே
கடுகும் பசியொடு வந்தார்க்குச் சோறு கழனிகொண்டு
முடுகும் படிசமைத் துண்மினென் றேசொலல் மொய்குழலே. (108)

### பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

கல்லார மார்பினன் சிங்கார வேலன் கவின்மயிலை
வில்லாரு மையுறு வெய்யசொல் லாவரும் வேளையிதால்
எல்லாரு மேற்றிசை சென்றனர் யாமு மிவணகல்வோம்
ஒல்லாது நிற்பது மன்னுசெல் கங்கு லுறுமுனமே. (109)

### தலைவன் கையுறை புகழ்தல்

இதமுற்று நல்கிய சிங்கார வேல ரெழின்மயிலை
முதல்வர்க்கு முன்னருட் சத்திக்குத் தாண்டு முன்னும்விந்துப்
பதமுற்ற வந்த முறுமணி மூவொன் பதின்மர்மின்னூர்
மதமற்ற வேவல் செயத்தக்க தாகு மகிமைமின்னே. (110)

### பாங்கி மறுத்தல்

ஒண்சங்க நித்திலந் தாரகை போல வொளிர்மயிலை
வண்சங்கம் போற்றிய சிங்கார வேலர் வரையண்ணலே
வெண்சங்க முத்தணி நீதரின் மான்முலை மேலணிந்தால்
பெண்சங்க மாண்சங்க நல்குமுத் தோவெனப் பேசுவரே. (111)

### ஆற்று நெஞ்சினோடு அவன் புலத்தல்

செய்யுறை சங்க மதிபோ னிலாவு திருமயிலை
வையுறை நீளிலைச் சிங்கார வேலவர் மால்வரைமேல்
கையுறை யேற்றிவள் வாயுறை யின்சொலுங் காட்டிலணம்
மெய்யுறை வேதனை தீர்வதெவ் வாறென் வெளிநெஞ்சமே. (112)

### பாங்கி ஆற்றுவித்து அகறல்

பேரிகை முன்றி றெறுமார்க்கும் வீதிப் பெருமயிலை
ஆரியை பாலகன் சிங்கார வேல னணிவரைமேல்
காரிகை பாலுன் கலித்துறை யோதிக் கருத்தறிந்தால்
சீரியல் பாமணி மாலைகொள் வேன்வந்து தேர்மன்னனே. (113)

### தலைவன் மடலே பொருளென மதித்தல்

இந்திர செல்வம் புவிமீ தருள்பவ னோர்மயிலைத்
தந்திர வேதியன் சிங்கார வேலன் றுணிவனையாப்
புந்தியின் மேவிய காமவெம் பேயினைப் போக்குதற்கு
மந்திர வாதி தருமே டல்லாது மருந்தில்லையே. (114)

### பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல்

வழிபடர் மாந்த ரினைப்பாறத் தேன்கனி வாய்த்திடுமாம்
பொழின்மயி லாபுரி சிங்கார வேலர் பொருப்புமின்னே
ஒழிவறு காமமுற் றோர்நீ றெருக்கு முடலணிந்து
கிழிபெற வோலையை வாசித் தவரெனக் கிட்டுவரே. (115)

### அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்

தடமாரு நீலத்து வண்டோ லிடுந்தண் டலைமயிலை
இடமாரு மெய்யெழிற் சிங்கார வேலர்வெற் பேந்திழையே
படமார நின்றிரு மாறு ளுருவம் பரிந்தெழுதி
மடமாவி னேறிநுஞ் சீறூரி னூனை வருகுவனே. (116)

## வரைதல் வேட்கை

### தலைவியைப் பாங்கி பருவரல் வினவல்

வெற்றி தருமயி லாபுரி வாழும் விமலையன்பால்
பெற்ற திருமகன் சிங்கார வேலன் பிறங்கன்மின்னே
முற்ற வுடம்பு நுணுகக்கண் முத்த முலைக்கணிய
இற்றை வரையுனக் கெய்தா வருத்தமெ னெய்தியதே. (224)

### தலைவி அருமறை செவிலி அறிந்தமை கூறல்

கற்றலை வந்தருள் சிங்கார வேலர் கவின்மயிலை
நற்றலை வன்பிரி வெண்ணி யுளமாழ்கி நளிர்வரைவாய்
நிற்றலை யாய்கண்டிங் கென்னே கவல்வது நீயெனயான்
உற்றலை சிற்றிலை முத்தா லழித்ததென் றேதினனே. (225)

### தலைவி, தலைவன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்

ஊரு முறங்கில தாயு முறங்கில ஊர்ப்புறங்காப்
பாரு முறங்கிலர் நாய்கூகை சேவல்கண் பாடிலவிண்
ஆரு மதியுறங் காதன்பர் மேவு மமைய முண்டோ
சாரு மயிலையிற் சிங்கார வேலர் சயிலமின்னே. (226)

### தலைவி, தலைமகன் ஊர்க்குச்செல ஒருப்படுதல்

சொல்லருஞ் சூர்முத லோர்தோற்றம் பொன்னவன் சொல்ல
[மகிழ்
நல்லார் மயிலையிற் சிங்கார வேலரை நண்ணிலர் போல்
இல்லாரைக் கைவிட்டுக் கூடிய செல்வ ரிருக்குமவ்வூர்
எல்லாருங் காணச் செல்வொமோ வினவி யிலங்கிழையே. (227)

### பாங்கி தலைவனைப் பழித்தல்

சீரா ணமைவந் தணைந்தனர் முன்னஞ் செறிந்தபின்னர்
ஓரா திருக்கவும் வல்ல ரென் றுற்புவி யுள்ளமட்டும்
சோரா திருக்கும் பழிநா ணிலரன்பர் சொன்மயிலை
ஊரான் மயில்வருஞ் சிங்கார வேல னுயர்வரைக்கே. (228)

### தலைவி இயற்பட மொழிதல்

காவிற் கடிமல ரென்றுற் றடையின்றிக் காரளிதேன்
தாவிப் புசிக்கு மலர்பேழை யுள்ளுறிற் சார்வதெங்ஙன்
மேவிப் பிரிந்தவ ரன்பில ரோமனை மேவிடினும்
வாவிச் சரவணன் சிங்கார வேலன் மயிலைமின்னே. (229)

### கனவு நலிவுரைத்தல்

வீட்டிற் பெரும்பொருள் சிங்கார வேலர் வியன்மயிலை
நாட்டிற் றலைவரைப் பூங்காவில் வந்தென் னலநுகரக்
காட்டிக் கலப்பித்த கண்ணே விழித்துக் கனவுதனை
ஓட்டிக் கெடுத்ததென் றுன்னேவ தாரை யுளமெலிந்தே. (230)

### கவின் அழிபு உரைத்தல்

பூங்கிளி பாக னுதலிற் பிறந்த பொறியுருவம்
தாங்கிய மேன்மையன் சிங்கார வேலன் றண்மயிலை
ஓங்கிய மெய்யி லரிசனப் பூச்சென வுற்றுநெஞ்சம்
ஏங்கிடச் செய்யும் பயலைக்கென் னோசெய்த தென்னழகே. (231)

### தன்துயர் தலைவர்க்கு உரைத்தல் வேண்டல்

தரைக்கா மயிலையிற் சிங்கார வேலனைச் சார்கிலர்போல்
விரைக்கான பூசனி வாடிடப் பீர்க்கலர் மெய்யுறமா
சுரைக்கா வருந்தின ளென்றேநங் கோவைமுந் துற்றணங்கே
உரைப்பா யவனரைக் கொடியெனின் னுட்பெறி லுத்தமமே. (232)

### நின் குற்றம் நீயே சென்றுரை என்றல்

பசிப்பா ரமுதங் கொடுப்பார் மருங்குறிற் பாங்கறிந்து
புசிப்பா னவைதரு வாருன தாசைப் புதுமையெல்லாம்
சுசிப்பார்த் திபர்முனம் யானோதி லாவதென் றென்மயிலை
வசிப்பா னருட்குகன் சிங்கார வேலன் வரையணங்கே. (233)

### அலர்பார்த் துற்ற அச்சக் கிளவி

அருக்கனைப் போல விளங்கு மயிலைய னன்பருக்குச்
சருக்கரை யானவன் சிங்கார வேலன் சயிலமன்னு
திருக்கட வூர்செம்பொன் பள்ளிய தாகத் திருப்புகலூர்
தருக்கிய வம்பல் கடந்தல ரானதுன் றண்ணளியே. (234)

### ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவி

தொழுதும்பர் போற்று மயிலா புரிவளர் சுந்தரனை
முழுதும் புகழ்குரு சிங்கார வேலனை முன்புதொழாக்
கழுதும் புலியு மராவு முலாவுமிக் கங்குல்வரில்
பழுதும் பெரிதென் றெமதுள மேங்கிடும் பார்த்திபனே. (235)

### காம மிக்க கழிபடர் கிளவி

எழிலார் மயிலையிற் சிங்கார வேல ரிருங்கடல்வாய்
நிழலார் தொழுனித் திரையே யகன்றன னித்திரையே
முழுநீரின் முத்தின மேற்றதெ னுண்டி முத்தினமே
வழுவா மனவன்பர் வன்பாதங் காதல் வரிசைகொண்டே. (236)

### தன்னுள் கையாறு எய்திடு கிளவி

ஒருநா ளெனினுந் துணைபிரி யாம லுயர்விசும்பில்
வருநாண் முழுமதி யேமண வாளர் வருவதுண்டோ
பெருநாண் பெறவெனக் கோர்வார்த்தை நீமொழி பேரலங்கல்
திருநாண் மயிலையிற் சிங்கார வேலர் சிலம்பிடத்தே. (237)

### தலைவி நெறி விலக்குவித்தல்

மால்விழி சாத்த மகிழு மயிலை வரதனெற்றி
மேல்விழி வந்தருள் சிங்கார வேலர் வியன்சிலம்பா
கால்வழி யாக வரைவழி நாடிக் கனையிருள்வாய்
சேல்விழி யிங்கு வருவ தடாதெனச் செப்புகவே. (238)

### தலைவி குறிவிலக்குவித்தல்

தோய்த்த தயிருண்ட மாலோன் மருமகன் றென்மயிலை
வாய்த்த குருபரன் சிங்கார வேலன் வரையி லன்னை
காய்த்த தினைப்புனஞ் சேய்த்தாக வொன்றெமைக் காமினென்றாள்
ஆய்த்தா லிவணினி வாரேலென் றேதவர்க் காரணங்கே. (239)

### வெறி விலக்குவித்தல்

பொன்னாட் டமரர் முனமக வென்று பொரவவர்பால்
அன்னாட்ட ணுண்மைசெய் சிங்கார வேல ரணிமயிலைப்
பன்னாட் டலைவ ரருளா துவந்த படர்தணிக்கத்
தன்னாட்டைத் தானலைத் தென்பய னென்றுரை தாய்தனக்கே. (240)

### பிறர் விலக்குவித்தல்

வாழ்வான் மயிலையிற் சிங்கார வேலன் வரனருளால்
ஏழ்வான் பிறப்பினு மெய்தியின் பார்பவ ரில்பிறப்பில்
ஊழ்வா னணைந்தரு ளின்பத்து ளென்னை யுரிமைகொள்வச்
சூழ்வான் பிறர்விடு தூதுகள் காணுற்ற தூதுகளே. (241)

### குரவரை வரவு எதிர்கொள்ளுவித்தல்

ஓவிய மாமதில் சூழ்மயி லாபுரி யுத்தமர்சீர்ப்
பாவினில் வாஞ்சையன் சிங்கார வேலர்ப் பணிகுரவர்க்
காவியில் வீழ்ந்தநம் மாவியை நல்கு மவர்வரவை
மேவிமின் னேயெதிர் கொள்வா னெவ்வாறு விளம்புவதே. (242)

(வரைதல் வேட்கை முற்றிற்று.)

---

## வரைவு கடாதல்.

### வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்

மொழிக்கண் மயிலையிற் சிங்கார வேலவர் முன்னர்முன்னீர்க்
கழிக்க ணிருந்து வருந்துவ தேதென்ற காதலன்னைக்
கெழிற்க ணெனத்தகு மாயத்தர் நீங்கமுன் பென்னவிந்தப்
பொழிற்க ணவனை யுருவிட ரென்று புகன்றனனே. (243)

### அலர் அறிவுறுத்தல்

உடலா யிரங்கண் வனமயி லாய்வர வூர்ந்தவருட்
கடலான மயிலையிற் சிங்கார வேலன் கனகவெற்பா
படரா தயலின் வளமனை மேவுமென் பைங்கொடிக்குத்
தொடரா வலர்பல பூத்தன நீமணஞ் சூழ்ந்துகொள்ளே. (244)

### தாய் அறிவுறுத்தல்

தேனிக் குயர்வயல் சூழ்மயி லாபுரிச் செல்வர்கடற்
பாணிக் கருள்குரு சிங்கார வேலர் பரங்கிரிமேல்
மேனிப் பசப்பும் விழியார் மதர்ப்பும் விரகநெஞ்சும்
மானுக் கிசைந்தது கண்டுயிர்த் தாளன்னை மன்னவனே. (245)

### வெறி அச்சுறுத்தல்

வள்ளை மணிக்குழை யம்பிகை பாகன் மகிழ்ந்தளித்த
பிள்ளை மயிலையிற் சிங்கார வேலன் பிறங்கன் மன்னு
தள்ளைமின் னேய்க்குன் னருள்மருந் தாமென்று தானுணராள்
வெள்ளை கறுக்க வெறியாடல் செய்ய விரும்பினளே. (246)

### பிறர் வரைவு உணர்த்தல்

வன்னக் குருபரன் சிங்கார வேலன் மயிலையன்ன
பொன்னுக்குப் பொன்னிடப் பூவேந்தர் பற்பலர் போந்துபல்கால்
மின்னுக்குத் தாழை மலர்வது போன்மண வேட்கை கொண்டார்
கன்னற் சிலைமன்ன தாழாது செய்கநின் காரியமே. (247)

### வரைவு எதிர்வு உரைத்தல்

வலனுயர் வார்சிலை சிங்கார வேலர் மயிலைவெற்பில்
குலமெழில் செல்வ மதியிவை மிக்குயர் கொற்றவனே
நலமிய னின்வரை வேலார்கள் யாவர் நயந்துகொள்வார்
அலரணி கூந்த லெனத்தாயுங் கேளிரு மையருமே. (248)

### வரையுநாள் உணர்த்தல்

எளியன் பிழைபொறுத் தேழேழ் பிறவி யெடாதளித்த
ஒளியன் மயிலையிற் சிங்கார வேல னுயர்வரைமேல்
வெளியம் புலிபரி வேட மிசைந்தது வீட்டயலே
அளியந் துணரெனு மாமண வேங்கையி னுகியதே. (249)

### தலைமகள் அறிவு அறிவுறுத்தல்

நயனுர் மயிலையின் சிங்கார வேல னளிர்வரைமான்
வியனு ரரிவையென் சொல்வேனம் மாதுமெய் வேற்றுமைகண்
டயலார் வினவுக் குரைமறைத் தோதுவ தன்றிநண்பா
தயலார் பசலைக்கும் வேறென்று கூறுந் தகுதியனே. (250)

### குறி பெயர்த்திடுதல்

ஏவிட வார்சிலை கொண்டோன் மயிலைய னென்னிதயப்
பூவிடங் கொண்டவன் சிங்கார வேலன் பொருப்பிலிந்தக்
காவிட மோவிட மாயது மேலினிக் காணமுதம்
மேவிட மாகவோர் வேறிடந் தேர்ந்துகொள் வேலண்ணலே. (251)

### பகல் வருவானை இரவு வருகென்றல்

செந்திற் பதியுவந் தோன்மயி லாபுரிச் செல்வன்மத்த
தந்திக் கிளையவன் சிங்கார வேலன் சயிலமன்று
பந்திக் கதிர்விரி நண்பகல் நீவரல் பான்மையன்றால்
அந்திக்கு நீவரிற் சந்திக்குஞ் சிந்திக்கு மாரணங்கே. (252)

### இரவு வருவானைப் பகல் வருகென்றல்

கொழிக்கு நிதித்தொண்டை நாட்டுவெண் பாலிக் குளிர்புனலால்
செழிக்கு மயிலையிற் சிங்கார வேலவர் திண்சிலம்பா
விழிக்கு நயனம் புதைத்தன்ன காரிருள் வேலைவரேல்
வழிக்கணெல் லாரும் வருங்கால் வரின்வரு மாதுறவே. (253)

### பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்

மஞ்சு டுலாவு கொடிநெடு மாட மயிலையன்பா
தஞ்சூழ் சதங்கையன் சிங்கார வேலன் றடங்கிரிமேல்
செஞ்சூரி யர்க்கின்றிச் சோமற்குந் தாமரை சேரநண்பை
அஞ்சூ ரவர்புகழ் வேன்மன்ன வாதிரு வார்தரவே. (254)

### பகலினும் இரவினும் அகல் இவண் என்றல்

அன்பால் நீள்பவன் சிங்கார வேல னணிமயிலை
நின்பா லிலகிலை வேற்குங் கலைக ணிறைமதிக்கும்
இன்பா முளமஞ்சி வானோ டிருகதி ரிக்களவை
வன்பாய் வெளிப்படுக் கும்மிரு போதும் வரேல்மன்னனே. (255)

### காவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்

துதிகா வலர்புகழ் பாதாம் புயன்வளஞ் சூழ்மயிலை
விதிநா யகன்மிக்க சிங்கார வேலவன் வெற்பண்ணலே
நிதிநாடு மெய்க்குல மூர்புகழ் தொன்மைக்கு நேர்வதல்லால்
பதினா லுலகு முலைவிலைக் கேற்கும் பரிசலவே. (256)

### ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி

காரா ரெழிலி யெழுத்தாலும் வாழ்த்தக் கனற்கணைநோய்
சேரா தருள்புரி சிங்கார வேலர் திருமயிலை
ஊரா களிற்றினை வெம்புலி கோபிக்கு மோங்கல்வழி
நீரார் கலுழி கடந்தே வரற்கஞ்சு நேரிழையே. (257)

### ஆற்றுத் தன்மை ஆற்றக் கூறல்

மருந்தெனு மாமருட் சிங்கார வேலர் மயிலைவெற்பில்
இருந்தது காப்பிங் கெழுந்தது பேரல ரெங்குமெய்யில்
பொருந்திட வந்தது வேள்கணை நல்லெழில் போனதென்றே
வருந்துமென் மான்பிணைக் கென்னுமன் னவுன் மனத்தருளே.
(258)

### காவல் மிக வுரைத்தல்

மாலைத் திருப்புயன் சிங்கார வேலன் மயிலைவெற்பின்
வேலைத் தருங்கையர் துஞ்சாத காவலர் வீக்குபறை
காலைப் பொழுது வருங்காறு மார்க்குங் கடுங்குரலால்
பாலைத் தருஞ்சொல்லி நோக்கங்க ணீரைப் படைத்தனவே. (259)

### காமம் மிக வுரைத்தல்

பொற்றூணின் வந்த திருமா லுதவிய பூவைநல்லார்
சொற்றூய தேனுகர் சிங்கார வேலர் துதிமயிலை
முற்றுக் கனதன மானுக்குக் காம முதிர்ச்சிநண்பா
சிற்றூரிற் பாரப் பெருங்கூத்துப் போல்வந்து சேர்ந்ததுவே. (260)

### கனவு நலிவுரைத்தல்

ஏனூர் மயிலையிற் சிங்கார வேலனை யேற்றுதற்குப்
பூனூ கதிவந் தணையுங் கனவு புலரநொந்து
வானூடு கண்ணிணை மூடினள் பின்னரும் வாய்க்குமெனக்
கானூ விழித்தனள் கண்டாள் கண்வெள்ளக் கலுழியையே.
(261)

### கவின் அழிபு உரைத்தல்

குசலர்க் கதிபதி சிங்கார வேலன் குணமயிலை
அசலப் புயத்தண்ணை னின்மார் புருவைக லன்னமன்னாள்
சுசலக் கொடியிடை மீதா முயலெழிற் றேற்றமெல்லாம்
பசலைக் கழியப் படைத்தான்முட் டாட்பள்ளிப் பங்கயனே. (262)

வரைவு கடாதல் முற்றிற்று.

---

## ஒருவழித் தணத்தல்.

### தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்

வாளைப் பயில்கரன் சிங்கார வேலன் மயிலையன்னாள்
தோளைத் தொடியைத் துணைமா முலையைச் சுழித்தயர்ந்த
வேளைக் குறித்து மெலியா துரையேம் வியனகர்போய்
நாளைக்கு நான்வரு வேன்வெரு வேல்நெஞ்ச நன்னுதலே. (263)

### பாங்கி விலக்கல்

மாயா புரிதிற லாசுரம் வீர மயேந்திரஞ்சீர்
வாயா தடர்த்தவன் சிங்கார வேலன் மயிலைநண்பா
வீயா துடல முதுமக்கட் சாடி விதித்தமன்னன்
நீயாகி னின்பதிக் கேகுதி கூறுவ நேரிழைக்கே. (264)

### தலைவன் நீங்கல் வேண்டல்

வானோர் மயிலையன் சிங்கார வேலன் மணிவரைமேல்
தேனே ரமுதெனச் செல்விதன் சிந்தையென் சிந்தையுடன்
தானே கலந்தத னற்பிரி வில்லை தாழ்ந்துநில்லேன்
மானே யருள்சே யிருசொ லொருசொ லவ.......... (265)

### தலைமகனைப் பாங்கி விடுத்தல்

புடைநின்ற தேம்பொழின் மாங்கனி தேன்சொரி பூமயிலைத்
தொடைநின்ற மாலையன் சிங்கார வேலன் சுனைவரைமேல்
படைநின்ற கண்ணி தனக்கு முனக்கும் பரிவுபுரிந்
திடைநின்ற யான்பழி யெய்தாம லூவந் தெய்துகவே. (266)

### பாங்கி தலைவிக்குத் தலைவன் செலவு உணர்த்தல்

புனைமயில் வாகனன் சிங்கார வேலன் புகழ்மயிலை
உனைமனத் தேவைத் தெனைத்தன் பிரிவினை யோதுகென
அனையவண் மேலங் ககன்றனர் போனுநம் மன்பர்நையேல்
துனைபரி வெய்யவன் போய்மீளும் போதுடன் றேன்றுவரே. (267)

### தலைவி நெஞ்சொடு புலத்தல்

பரிவா ருலவைதன் றேர்ப்பாக னுகைப் படைத்தமர்மேல்
திரிவான் மயிலையிற் சிங்கார வேலன் சிலம்பர்நெஞ்சே
பிரிவா ரலரென்று நீமிகத் தேறப் பெருவிருப்புப்
பூரிவார் பிரியிற் செயலே தலரைப் புணர்வதுவே. (268)

### காமம் மிக்க கழிபடர் கிளவி

கைவளை யிட்டுக் கணையாழி யிட்டுக் கடகமிட்டு
மெய்வள மென்னி னுறுங்கட லேபொன் வியன்மயிலை
சைவ சிகாமணிச் சிங்கார வேலனைச் சாருமன்பர்
உய்வகை சொல்லி யகன்றன ரோசொல் லுறவெனக்கே. (269)

### தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்

வானந் தினம்பணி சிங்கார வேலர் மயிலைமின்னே
நானங் கமழ்குழல் சோரநும் மேவன்பர் நண்ணுவரால்
தானங்கை யேற்றிடும் வேதிய ரார்ப்புந் தவளசங்கக்
கானங் கிளர்வதுங் கேட்கின்ற வாதங் கடிநகர்க்கே. (270)

### பாங்கி தலைவிக்கு இறையோன் வந்தமை யுணர்த்தல்

சேற்றுய் வருக்கைக் கனிகீறி மாங்கனி சிந்தவந்தேன்
ஊற்றுர் மயிலையிற் சிங்கார வேலவ ரோங்கன்மின்னே
தோற்ருன் மதனினித் தோற்ருன் முன்புள்ள துயரமெல்லாம்
மாற்று வுளத்தினைத் தேற்றுய்நங் காதலர் வந்தனரே. (271)

### வந்தோன் தன்ஞெடு நொந்து விஞதல்

சொரிந்தாடல் வாளி வெகுகொடி தான்வரத் தும்பைமுடி
அரிந்தாண்மை கொண்டவர் சிங்கார வேல ரணிமயிலை
புரிந்தார் குழலி சொரிந்தாள் விழிமழை பொன்னுருவம்
கரிந்தா ளியல்பு திரிந்தாளென் னேயுன்னைக் காணுமுன்னே. (272)

### தலைவன் பாங்கியொடு நொந்து விஞதல்

தஞ்ச மயிற்பரிச் சிங்கார வேலர் தடமயிலை
பிஞ்சு மதிக்கும் பெருக மதிக்கும் பிறரலர்க்கும்
அஞ்சு மலர்க்கு மயர்ந்தயர்ந் தாவிபெற் ருற்றினிரோ
கொஞ்சு மணிக்கிளி யன்னீரென் போலன்பு கொண்டுநெஞ்சே. (273)

### பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்

தண்ணீர்மை யாரருட் சிங்கார வேலவர் தார்மயிலை
உண்ணீர் விரும்பினர்க் கந்நீர் வரும்வழி யோதினர்போல்
அண்ணீர்மை வேண்டு மிவட்கைய நீவர லாறுசொல்லிக்
கண்ணீரு நெஞ்சக் கவலையுந் தீர்த்துயிர் காத்தனனே. (274)

ஒருவழித் தணத்தல் முற்றிற்று.

---

## வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

### என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல்

இருதன.......................................
கருதனந் தன்னுருச் சிங்கார வேலர் கருணையொப்பாய்
விருதனங் கண்படை யாமற் புரந்தருள் மெல்லியலாள்
இருதனங் கொள்ள வருதனங் கோடிகொண் டெய்துவனே. (275)

### நின்பொருட் பிரிவுரை நீ அவட்கென்றல்

விழித்த விழியிமை மூடித் திறந்தகண் மேவிடுநாள்
கழித்த பலபல நாளெனுங் கன்னிக்குன் கௌவை சொல்லிச்
சுழித்த புனல்மலைக் கான்கடந் தேகுவை தொன்மயிலைச்
செழித்த திருவருட் சிங்கார வேலர் சிலம்பண்ணலே. (276)

### நீடேன் என்று அவன் நீங்கல்

கவளக் களிற்று நிரைநிதி யேற்றிக் கமலைநிகர்
அவளைத் திருமணஞ் செய்வான் விரைவி னணுகுவன்யான்
டவளக் கொடியனை யாய்நுமர் வாழ்த்தப் பதிமயிலைக்
குவளைத் தொடையணி சிங்கார வேலன் குலவரைக்கே. (277)

### பாங்கி

### ஓடரிக் கண்ணிக்கு அவன்செலவு உணர்த்தல்

பெற்றோருஞ் சுற்றமும் பெண்ணோ டொருநிதி பேசுவரோ
மற்றோ ருரைத்த நிதிதரு வானெண்ணி மன்னவரும்
கற்றோர் கதியினன் சிங்கார வேலன் கவின்மயிலை
உற்றோ ரவர்செல் கடுங்கானம் போய்வர வுன்னினரே. (278)

### தலைமகள் இரங்கல்

நாடு மயிலையன் சிங்கார வேலவ னன்மலைமேல்
தோடுங் கழன்று துணைவளை சோர்ந்து துகினெகிழ்ந்து
வீடும் படிசெயக் கண்டேன் பிரிவினை மேவி யன்பால்
நேடும் புணர்வினிச் செய்வதென் னோவுட னின்றிடலே. (279)

### பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்

மெய்யர்க் கருள்பவன் சிங்கார வேலன் வியன்மயிலைச்
செய்யத் திருமண மாநிதிக் கேகினர் செல்வரன்பால்
மையற் பொருந்த மலர்விழி நீர்கொண்டு மாழ்கி நின்றால்
தொய்யற் றனத்திமின் னூர்வா யலரைத் தொடுப்பர்களே. (280)

### தலைவி கொடுஞ்சொற் சொல்லல்

பூரி மணிக்கொடி யோங்கிய கோபுரப் பொன்மயிலைப்
பாரி மலைவள்ளிச் சிங்கார வேலன் பனிவரைமேல்
ஏரி மலாம்வி யூரன்சொல் வாய்மை யிரும்பொழில்வாய்
வேரி மலரணை யார்வாட்டந் தீர்க்கும் விருப்பிலதே. (281)

### வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்

கேளுற நல்விருந் தாற்றுமில் வாழ்க்கை கிளர்மயிலைத்
தாளுறை நூபுரன் சிங்கார வேலன் தடவரைமேல்
வாளுமைக் கண்ணி வருந்தே லகன்றநம் மன்னவனூர்
மீளுவர் நாளையன் றிப்போது காண விழித்துணையே. (282)

### பருவங் கண்டு பெருமகள் புலம்பல்.

ஊர்வந்த திங்க ணிகர்கஞ்ச வோதிம வொண்மயிலைச்
சீர்வந்த தோகையன் சிங்கார வேலன் செழுங்கிரிமேல்
கார்வந்த ததுசென்ற காதலர் வந்திலர் கண்கலுழ
நீர்வந்த முல்லை நகைத்தது தோழிநந் நீர்மைகண்டே. (283)

### இருளி வம்பிது வென்றல்

மீனே றுயரிய காமர்க்கு மைத்துனன் வேண்டினர்க்குத்
தேனே யனையவன் சிங்கார வேலன் றிருமயிலை
மானேநின் கற்பியல் காரா தலின்முன் வளர்த்தகற்புத்
தானே செழிக்க வெழுந்தது காலத் தகுதியன்றே. (284)

### இறைமகன் மறுத்தல்

கொம்ப ரினவண்டு குலமுல்லை கூறுங் குளிர்மயிலை
அம்பரை நாமகன் சிங்கார வேலன் சைலமின்னே
வம்பெனின் மேகம் பலவைகல் மாரி வழங்கிடுமோ
வெம்புறு முட்டைகொண் டேறுங்கொல் லோதெற்றி
[மேலெறும்பே. (285)

### அவர் தூதாகி வந்தடைந்தது இப்பொழுதெனத் தோழி சாற்றல்

வசைபார்த் திடாவிசைச் சிங்கார வேலர் மயிலைதன்பால்
திசைபார்த் தவர்சென்ற தேர்வழி பார்த்துத் திகைக்கு முன்பால்
நசைபார்க்கு நன்பொருள் கொண்டிங்ஙன் மீளு நலம்புகல
மிசைபார்த் தமைமுகில் தூதாய்முன் வந்தது மெல்லியலே.
(286)

### தலைவி ஆற்றல்

மாரி மொழிகரன் சிங்கார வேலன் மயிலையன்பர்
வாரி சுருங்கி மலையசைந் தாலுஞ்சொல் வாய்மைகுன்றார்
தேரினி யூர்ந்துசெல் வார்புரி யேற்றஞ் சிறக்க நம்பால்
பாரிய கார்செயப் பருவநெஞ் சேவந்து பாரித்ததே. (287)

### அவன் அவண் புலம்பல்

மல்கார்வ நல்கிய சிங்கார வேலன் மயிலையன்னாள்
பல்காற் கடைத்தலை வந்தேங்கி யுட்சென்று பாவிமுனம்
சொல்கால னேக்கிச் செவிவழி யோட்டுந் துணைவிழிநீர்
அல்கா தணையி னுருவெளி யானென் றகன்றிடுமே. (28 )

### பாகனொடு சொல்லல்

ஆர்வந் தழைத்தருள் சிங்கார வேல னணிமயிலைக்
கூர்வந்த வேற்கண் மடமான் மருண்டு குறித்துரைத்த
கார்வந்த திங்கென் றுரைமுடி யாமுன் கணவர்திருத்
தேர்வந்த தென்ன வலவாவித் தேரைச் செலுத்துகவே. (289)

### மேகத்தொடு சொல்லல்

வருதவ ராசன் மயிலையன் றுணவர் வானமுறப்
பொருதசங் கிராமமெய்ச் சிங்கார வேலன் பொலன்கிரிமேல்
ஒருதனு வேந்திப் பலவம்பு வீசி யுருத்தெழுந்து
நிருதனைப் போற்றனி மான்வாடச் செல்வதெ னீண்முகிலே. (290)

### பாங்கி

### வலம்புரி கேட்டு அவன் வரவு அறிவுறுத்தல்

கலம்புரி பல்பொரு ணல்கும் பரவைக் கவின்மயிலைத்
தலம்புகழ் மேன்மையன் சிங்கார வேலன் சயிலமின்னே
நலம்புரி சோகந் தவிர்கேள்வர் தேரிவ ணண்ணியதால்
வலம்புரி கூடு மிடம்புரி யார்க்கும் வலம்புரியே. (291)

### வலம்புரிக் கிழத்தி வாழ்த்தல்

செங்கயன் மேதி மடிமோதிப் பாலொடுஞ் சென்றுதுஞ்சும்
பங்கயம் பால்பழஞ் சேர்வள்ளம் போலும் பணைமயிலை
சங்கரன் பாலகன் சிங்கார வேலன் சயிலநண்பர்
மங்கல வாழ்த்தொடு வாழ்கபொற் றேரின் வலம்புரியே. (292)

### தலைவனைப் பாங்கி நினைந்தமை வினுதல்

மயில்பொலி வாகனன் சிங்கார வேலன் மயிலையன்ன
குயில்மொழி யானைப் பொருளீட்ட நீசெல் குளிர்புனனாட்
டயில்பொழு தேனுந் துயில்பொழு தேனு மலர்பொழில்வாய்
பயில்பொழு தேனு நினைத்ததுண் டோசொல்லு பார்த்திபனே.
(293)

### தலைவன் நினைத்தமை செப்பல்

கூவிய குக்குடச் சிங்கார வேலன் குகன்மயிலை
ஓவியப் பூந்துகில் போலநின் பாவை யுருவமதாய்
மேவிய தென்னுள மாதலி னுர்பொருள் வேண்டிச் சென்ற
காவிய னுட்டு நினையாத போதிலைக் காரிகையே. (294)

### பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்தமை கூறல்

வீறுஞ் சுவைனடிப்புனடப் போர்வைகல் மெலியினவர்
தேறும் படிமுனம் வாழ்வுரைத் தாங்குனைச் சேர்ந்தசுகப்
பேறுமுன் காதலும் யான்கூறி யாற்றினன் பெய்வளையைக்
கூறு மயிலையிற் சிங்கார வேலன் குலவரைக்கே. (295)

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்

முற்றிற்று.

## 2. வரைவியல்.

### வரைவு மலிதல்.

#### காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உரைத்தல்

கரமதி மண்டலங் கண்டுகை தண்டலைக் காமலியும்
திரமயி லாபுரிச் சிங்கார வேலவர் திண்கிரிமேல்
வரமலர் மாதுன் மணம்பொருட் டாகநம் வாய்தலின்முன்
சுரர்குரு கோடிகொண் டுய்த்தான்பொற் றுரணி தேரண்ணலே.
(296)

#### காதலி நற்றாய் உள்ள மகிழ்ச்சி உள்ளல்

கூட்டிய மும்முர சார்க்கு மயிலையான் கொற்றமுடி
சூட்டிய சென்னியன் சிங்கார வேலன் சுனைவரைமேல்
ஈட்டிய செல்வ ரியம்பல வார்ப்ப வெனைத்திருநாண்
பூட்டிய மாமணந் தாய்பார்த்து நாளை பூரிக்குமே. (297)

#### பாங்கி

#### தமர் வரைவெதிர்ந்தமை காதலிக்கு உரைத்தல்

குருவேள் குமர குருநாதன் ஞானங் கொடுக்கும்வள்ளல்
மருவேர் மயிலையன் சிங்கார வேலன் மணிவரைவாழ்
திருவே யுனக்குயர் மாலையிட் டார்மணந் தேர்ந்து கொண்டார்
ஒருவே ளனைய தனையருந் தாய்தந்தை யொக்கலுமே. (298)

#### தலைமகள் உவகை உளத்தொடு கிளத்தல்

பரவத் தகுந்தவ நெஞ்சே முனஞ்செய்த பான்மையினால்
விரவத் தலைவந்த தோகைநங் கேள்வர் வியன்மணஞ்செய்
முரசப் பெருமுழக் கார்த்தது கீர்த்தி முருககனங்கோன்
வரசித்து மேனியன் சிங்கார வேலன் மயிலையிலே. (299)

#### தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

தருமா துலன்புகழ் சிங்கார வேலர் தடமயிலை
வருமா னனைய மலர்த்திரு மாதை மணம்புணர்ந்து
திருமா லெனவிருந் தாயினி நானுந் தியாகரெனப்
பெருமான் புகழொடு நீநீடு வாழ்க பெருநிலத்தே. (300)

#### தலைவி மணம் பொருட்டாக
#### அணங்கைப் பராநிலை காட்டல்.

தாலாட்டு தன்னையர் கையுஞ் செவியுந் தழைவுபெறக்
காலாட்டு நூபுரன் சிங்கார வேலன் கதிர்மயிலை
வேலாட்டு செங்கை விறன்மன்ன நின்மண வேட்கையினால்
நூலாட்டு நுண்ணிடை தெய்வதம் போற்றுத னோக்குகவே. (301)

**பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல்**

மிண்டார் வன்பூதப் படையிரண் டாயிர வெள்ளவணி
கொண்டான் மயிலையிற் சிங்கார வேலன் குலகிரிமேல்
வண்டார் குழலி மணம்பொருட் டாய்த்தெய்வம் வாழ்த்துவது
கண்டாய் தனிநெஞ்ச மேயினி வேறென்ன காண்பதுவே. (302)

**வரைவு மலிதல் முற்றிற்று.**

---

## அறத்தொடு நிலை.

**தோழி கண்ணீர் துடைத்தல்**

தண்ணெடுஞ் சோலை மலையொக்குஞ் செந்தில் சாரலெங்கும்
நண்ணிடு மோகையன் சிங்கார வேல னயமயிலை
எண்ணிடு மெண்ணமென் மானே யயலல ரின்றுசொல்லக்
கண்ணிடு மைமுலை மேல்வண்ட லாடக் கலுழ்ந்தனையே. (303)

**தலைவி கலுழ்தற் காரணங் கூறல்**

அலந்து பணிந்த வடியார்க் கருளு மமலன்முன்னீர்
சுலந்துதிக் கும்புகழ் சிங்கார வேலர் நெடுமயிலைக்
கலந்து பிரிந்தேன் விழியெதிர் மேவிய காதலரைப்
புலந்து படுமை கழுவக்கண் ணீர்முன் புறப்பட்டதே. (304)

**தலைவி தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல்**

நெய்தற் படுவிற் சுருக்கொடு நாட்டி நினைந்துதொழும்
தெய்வத் திருமுன் னினைப்பிரி யேனென்று தேற்றியசூள்
மெய்வைத்த சொல்லை மறந்தன ரோவன்பர் வேள்மயிலை
உய்தற் கருள்புரி சிங்கார வேலன்வெற் போதிமமே. (305)

**தலைவன் இகந்தமை எய்தக் கூறல்**

இவரென் றவரென் றெவரென்று நாடு மியல்கடந்த
தவர்நின்று போற்றிய சிங்கார வேலன் றன்மயிலை
அவர்நெஞ்சு மென்னெஞ்சு மன்பாய் மணந்த தயலறியா
துவர்சொன்ன வாய்மைபொய்த் தாரெனிற் செய்வதெ
[ன்னெண்ணுதலே. (306)

**பாங்கி இயற்பழித்து உரைத்தல்**

பண்ணினும் பாலினும் பாகினும் வாழைப் பழத்திலுஞ்சேர்
தண்ணிய வின்சுவைச் சிங்கார வேலவன் சார்மயிலை
நண்ணிய நாந்துய ரெய்தச்சொல் வாய்மை நடுவிகந்தால்
பெண்ணெனிற் பேயு மிரங்குமென் பெற்றியும் பெற்றிலரே. (307)

### தலைவி இயற்பட மொழிதல்

வயங்கு மயிலையன் சிங்கார வேலன் வரையரசர்
முயங்கும் பொழுதவர் மார்பூ டுருது முதுகுகிடந்
துயங்குந் துயர்கண் டிரங்கிக் கையாற வுவந்தணைத்தார்
கயங்கும் படியின்று செய்யாரன் பேசெய்வர் காரிகையே. (308)

### தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல்

வாடா மலர்முகச் சிங்கார வேலன் மயிலைவெற்பர்
நாடா திகந்து நவைபுரிந் தாரவர் நன்றுசெய்வார்
வீடாத மெய்த்தெய்வ நீவெகு ளேலென்று வேண்டிநின்று
தோடார் குழலிசெல் வாம்பலி தூவி தொழுவதற்கே. (309)

### இவ்வயிற் செறித்தமை கூறல்

பாதைக் கடற்சேர் பவளக் கொழுந்து படர்மயிலைக்
கோதைப் புயாசலன் சிங்கார வேலன் குவட்டணங்கே
ஓதைப் பெருஞ்சந்தை போலலர் பூப்ப வுயிர்த்துமெய்த்தாய்
பேதைப் பருவ முலைபோலுள் ளேயுறப் பேசினளே. (310)

### செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்

குமரன் செவ்வேள் மயிலாபுரி நாயகன் கோலவிச
பமரஞ்செய் மாலையன் சிங்கார வேலன் பணிவரைமேல்
தமரஞ்செய் வரயன்ன நம்மனைப் பாலன்பர் சார்தரக்கண்
டெமரஞ்ச யாரிங்கு நின்று ரிரவிலென் றெண்ணினளே. (311)

### செவிலி எறிவனை வேற்றுமைக்கு ஏது வினுதல்

வாளா வழுகையும் வாட்டமுந் தோட்டமும் வாஞ்சைநம்மேல்
மூளாத நெஞ்சுமெய் மூடும் பசலையு மொய்குழற்கிந்
நாளால் விளைந்ததென் னேமக ளேயுரை நன்மயிலைத்
தோளா மணியினன் சிங்கார வேலன் சுனைவரைக்கே. (312)

### வெறிவிலக்கல்

ஏட்டுத் தொடையணி மாமயி லாபுரி யீசர்மைந்தர்
கோட்டுப் பரங்கிரிச் சிங்கார வேலநின் கோயின்முன்னே
ஆட்டுக் குலந்தலை யந்தரள மாமுலை யாளிசையும்
பாட்டுக்குத் தக்கதன் றென்வீணை நீகொண்ட பான்மையதே. (313)

### வெறி விலக்கியவழிச் செவிலி வினுதல்

ஏறு மறிய னிரங்கு மறியை யிசைந்தனனென்
றூறு மொழிபல பேசநன் றேவுயர்ந் தோர்தெளிந்து
தேறு மொழியனைச் சிங்கார வேலனைச் சீர்மயிலை
ஆறு முகவனைத் தேவாதி தேவனை யாயின்மையே. (314)

### பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

வண்டணி செங்கையில் பைந்தேன் வெண்முத்த மருவுகஞ்சம்
ஒண்டொடி நின்முக மொக்குமென் றீந்தன னோர்விடலை
எண்டிசை சேர்புகழ்ச் சிங்கார வேல ரெழின்மயிலைக்
கண்டன சொல்லி விளையாடு காவினுன் காரிகைக்கே. (315)

### புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

ஆயிழை கொங்கை யெழிலிந்த கும்ப மகத்தியனைச்
சேயெனப் பெற்ற தவன்றன் கணவற் சிறுமைசெய்ய
ஏய பகைகொண் டெடுத்தோடும் யாற்றி லெதிர்ந்தெடுத்தான்
மேய மயிலையிற் சிங்கார வேலவன் வெற்பண்ணலே. (316)

### களிறுதரு புணர்ச்சி

மற்பயில் வன்புயச் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
அற்படி வத்தந்தி மங்கையைச் சீற வடர்த்தவண்ணல்
கற்பக மொத்தன னொத்தாணின் மாமகள் காமவல்லி
பொற்புடை வேலங்கி யாற்கரி யானதப் போர்க்கரியே. (317)

### தலைமகள் மெய்வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்

இடுகின்ற வன்ன மெடுத்துண விரகி லிளம்பருவத்
தொடுநின்ற தையறன் மையலு மேனி யுறும்பசப்பும்
விடுகின்ற துஞ்சலும் பார்த்திலை யோநங்கை மெய்மயிலை
நடுநின்ற கச்சினன் சிங்கார வேல னளிர்வரைக்கே. (318)

### செவிலி நற்றாய்க்கு முன்னிலையான் அறத்தொடு நிற்றல்

இரும்புக்கு நேர்மனம் வெண்ணெயைப் போல விளகவருள்
தரும்பரி பாகமெய்ச் சிங்கார வேலவன் சார்மயிலை
அரும்பிற் கலர்மண மானது போல வணியவிளம்
கரும்பிற்கு வெல்ல மதன்கட் சிவந்தது காரிகையே. (319)

அறத்தொடு நிலை முற்றிற்று.

---

## உடன் போக்கு.

### பாங்கி தலைவர்க்கு உடன்போக்கு உணர்த்தல்

கள்ளஞ்செய் யாவிடிற் காரிய மில்லையிக் கானவர்க்கு
வள்ளஞ்செய் தாமரைக் கண்ணர் செயன்பர் வாழ்மயிலை
உள்ளஞ்செய் மேனியள் சிங்கார வேலன்வெற்
[பொத்தசெம்பொன்
வெள்ளஞ்செய் தாலுங்கொள் ளாரெமர் கொண்டுசெல்
[மின்னினையே. (320)

### தலைவன் மறுத்தல்

போதார் மயிலையன் சிங்கார வேலன் பொலன்கிரிமேல்
ஏதாய் மொழிந்தனை மானே தளிரிய லின்றளவும்
மாதா மனையன்றி மற்றறி யாளவள் வல்லவளோ
வேதாஞ் சுரநடப் பார்க்கு நிழலவர் மெய்ந்நிழலே. (321)

### பாங்கி உடன்படுத்தல்

வெளிகாண் பரிய பொழில்சூழ் மயிலையன் வேதமெல்லாம்
தெளிகாண் பரம்பொருள் சிங்கார வேலன் சிலம்பிலங்கும்
அளிகாண் மலர்க்குழல் நின்னுட னேகி லவட்கண்ணலே
குளிர்காவுந் தென்றலு மாவியு மாகுங் கொடுஞ்சுரமே. (322)

### தலைவன் போக்கு உடன்படுதல்

வல்லன் புரிமைசெய் சிங்கார வேலன் மயிலைமின்னே
கல்லுஞ் சுரமும்வெங் கோடையு நீரெனக் காதல்வைத்தால்
செல்லுந் திறமன்றி மற்றுள தோசெந் திருமகளே
இல்லும் பதியு மெனச்சுரங் கொண்டுசென் றேகுவனே. (323)

### பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்

நெய்தன்மெய்த் தாய்க்கு மருதநின் னுணுக்கு நேருமுல்லை
ஏய்து மெமக்குங் கடும்பாலை நீவி ரிருவருக்கும்
செய்து குறிஞ்சி யுறவெண்ணி னுரன்பர் தேவர்புகழ்
மெய்யன் மயிலையிற் சிங்கார வேலவன் வெற்பணங்கே. (324)

### தலைவி நாணழிபு இரங்கல்

கருநாண் கதியருள் சிங்கார வேலர் கதிர்மயிலைத்
திருநாள் புனைந்தெனைக் காதலர் தம்மனைச் சேரவையா
தொருநாண் மலரென வாடிச் சுரஞ்சென் றுயிரின்மிக்க
பெருநாள் மெலியவென் றேவரை வேற்றிலர் பெற்றவரே. (325)

### பாங்கி கற்புமேம்பாடு புகறல்

வாவென் றழைத்து வனத்தே நிறுத்திப்பின் மாவசிட்டன்
மேவென்ற போதுசென் றளே யருந்ததி மெல்லியளே
மாவென்ற வாகையன் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
பூவென்ற கற்புக்கு நாணன்பர் சொல்வழிப் போவதுவே. (326)

### தலைவி ஒருப்பட்டெழுதல்

மன்பா வலர்புகழ் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
அன்பான் மணந்ததும் வன்பா னடக்க வஃமந்ததன்றி
முன்பாக வினையெனை நானேகச் செய்தது மொய்முலையா
இன்பாலு மன்னமு முண்டுடல் பூரித் திருப்பதற்கே. (327)

### பாங்கி சுரத்தியல்பு உணர்த்தல்

எதிர்பொரும் போர்வென்ற சிங்கார வேலனை யேர்மயிலைக்
கதிமுரு கேசனை யேத்தார்கள் போல்வரு கங்கமெல்லாம்
உதிர்சரு காகி விழுந்தெரி பாலையி னேர்பொரிவான்
அதிரிடி யானது தென்றல்தன் வெம்மையெங் காற்றுவதே. (328)

### சுரத்தியல்பு உரைத்துழிச் சொல்லல்

பூச்சினை மாம்பொழில் சூழும் மயிலைப் புரியெனுமோர்
பேச்சினு மலர்ந்தருள் சிங்கார வேலர் பிறங்கன்மின்னார்
ஏச்சினு மன்னை யிறநோக்கு நோக்கினு மேங்குபெரு
மூச்சினுஞ் சாலக் கொடிதோ கடுஞ்சுர மொய்குழலே. (329)

### பாங்கி கையடை கொடுத்தல்

தானென்ன வென்னைத் தகுதிசெய் வோன்புகழ் சார்மயிலைக்
கோனென்றும் வாழ்பவன் சிங்கார வேலன் குவட்டண்ணலே
நானென்ன சொல்லுவ தானுனு மோர்மொழி நன்னுதல்பால்
மானெய் துவந்தவந் நாள்போலெந் நாளுஞ்செய் வாஞ்சையதே.
(330)

### வைகிருள் விடுத்தல்

விடையார் திருமகன் சிங்கார வேலன் வியன்மயிலை
அடையார் நகையு மரும்பு முலரு மகலவிங்ஙன்
கொடையார் பலனெமர் மேவவந் தெய்துவை கொண்டுநுண்ணூல்
இடையாளை நெஞ்சிடை யாதிடை யாமத் தெழுந்தருளே. (331)

### அவன் சுரத்து உய்த்தல்

செஞ்சூட்டு வாரணன் பொன்னார் மயிலையன் றேனலர்வா
சஞ்சூட் டியபுயன் சிங்கார வேலன் சமர்க்குடைந்தோர்
வெஞ்சூட் டியல்சுரஞ் செல்வது போலன்று மெல்லியசெம்
பஞ்சூட் டியபத நோவாது மெல்லச்செல் பைந்தொடியே. (332)

### அசைவு அறிந்து இருத்தல்

பாலைக் குடியென்று பார்மகள் வாய்விட்டுன் பங்கயப்பூங்
காலைப் பிடித்தன ணீர்முத் திடுமுனங் காரெதிர்ந்த
சோலைக்குள் வைகி யிளைப்பாறு வாம்வெட்சித் தூயமலர்
மாலைக்கு வந்தவன் சிங்கார வேலன் மயிலைமின்னே. (333)

### உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந் துரைத்தல்

அலங்கார மேனியன் சிங்கார வேல னணிமயிலைத்
தலங்காதல் செய்யு மிவளடி போற்றித் தருமலர்ப்பூம்
குலங்கார்க் குழன்மிசை சூட்டவும் பார்க்கவுங் கூடியதால்
நலங்கா ணவயவம் யாவினுங் கைக ணயந்தனவே. (334)

### கண்டோர் இரத்தல்

வான்போந்தும் வன்மனக் கைகேசி வஞ்ச மறந்திலளோ
கான்போந் திவர்வர வேன்பிரி யாத கனிட்டனிலன்
தேன்போன் மொழியருள் சிங்கார வேலர் திருமயிலை
மான்போல் பவளுமிவ் வண்ணலும் யார்கொன் மதிப்பரிதே. (335)

### காவின் விலக்கல்

பாவுங் கடலுக் கொருபா றெனவிப் படர்வழியின்
மேவும் பதியிது வந்தியும் வந்தது மேவுமிங்ஙன்
பூவுங் குளிர்பதச் சிங்கார வேலன் புகழ்மயிலை
கூவுங் குயிலனை யாளொடு நாளைசெல் கொற்றவனே. (336)

### தன்பதி அணிமை சாற்றல்

காக்குங் கருணையன் சிங்கார வேலன் கனமயிலை
நோக்குங் கிரியிதற் கப்புறஞ் சென்றிடி ஞன்மறையோர்
வாக்கும் பலபல வேள்வியி ஞர்ப்பும் மணமுரசம்
யேக்குந் துழனியு மல்குநின் னூரெதிர் மேவிடுமே. (337)

### தலைவன் தன்பதி அடைந்தமை சாற்றல்

தோரண வாய்தலுந் தோகைய ராடலுந் தூரியங்கள்
வாரண வார்ப்புட ஞர்ப்பது மேவுமிம் மாநகரம்
காரண காரியன் சிங்கார வேலவன் காண்மயிலைப்
பூரணக் கும்ப முலையன்ன மேயெம் புகழ்ப்பதியே. (338)

உடன் போக்கு முற்றிற்று.

---

## கற்பொடு புணர்ந்த கௌவை.

### செவிலி பாங்கியை வினுதல்

மாணே ருமைசெஞ் சிலம்பின் மணிமங்கை மார்புதல்வர்
தாணேர் தொழவருள் சிங்கார வேலர் தடமயிலை
பூணேர் நெருங்கி புணர்முலை யாய்நம் பொலன்கொடியைக்
காணே னெவனுவ ணுற்றது வேதுசொல் காரணமே. (339)

### பாங்கி செவிலிக்கு உணர்த்தல்

உடலைப் பயினுயிர் சிங்கார வேல னுயர்மயிலை
விடலைப் பருவத் தொருவ ஞெருமலர் மெல்லியற்குத்
தொடலைத் தலைத்துமுன் னீந்ததை நோக்கித் துணைமலர்க்கண்
மடலைச் சிறிது மிமைத்திலள் யான்கண்ட வாறிதுவே. (340)

### செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல்

வானப் பிறையை மனைமீது வைத்து வளர்ப்பதுபோல்
தானக் களிற்றினன் சிங்கார வேலன் றடமயிலை
நானக் குழலியை நான்வளர்த் தேன்வள நற்சுனைவாய்
ஈனத்தின் வீழ வெடுத்தார்க் கினிமைசெய் தேகினனே. (341)

### செவிலி தன் அறிவின்மை தன்னை நொந்து உரைத்தல்

வழித்துணை யாகிய சிங்கார வேலன் மயிலைவெற்பில்
குழப்பயி ரோங்கி வளர்ந்தா லதுவயல் கூடிநின்ற
கழிப்படர் கின்ற தியல்பாகு மென்றுநங் கன்னிசொன்ன
மொழுக்குறிப் போர்ந்தறி யாமன் மயங்கினன் முன்னறிவே. (342)

### செவிலி தெய்வம் வாழ்த்தல்

வயலார் மயிலையிற் சிங்கார வேலர் மலையிடத்தே
இயலா யெமக்கொரு பெண்ணளித் தாயவ ளெம்மைமறைத்
தயலா னொடுசுரம் போகவைத் தாயெம் மகன்மனைக்கண்
செயலால் வரவழைப் பாய்தெய்வ மேயுன் றிருவுளமே. (343)

### செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

ஊரலர் பூப்ப மணம்பிற ரேற்ப வுரைத்தமொழி
வாரணி கொங்கை யறிந்தன்று சீறிய மாவடர்த்த
போரணல் பின்னடந் தாள்போலும் வேறு புகலறியேன்
மாரணந் தீர்த்தருள் சிங்கார வேலர் மயிலைமின்னே. (344)

### நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்

மக்கட் பொருளருள் சிங்கார வேலர் மயிலைநங்காய்
செக்கர்க் கனியிதழ் வாய்ப்பூவை மாமணஞ் சேர்ப்பதின்றிப்
பக்கப் பழிப்புறப் பாழ்ஞ்சுரம் போக்கிப் பரிவுளர்போல்
ஒக்கப் புலம்பி யுருகிக் கலுழ்வதெ னூதியமே. (345)

### நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்

மோகாழி தீர்த்தருள் சிங்கார வேலன் முகுந்தனயன்
நாகாதி பர்தொழு மாமயி லாபுரி நண்ணினர்கள்
ஏகாவெங் கானிடைக் கானடை யாகவோ ரேதிலன்பின்
பாகா யுருகவு நீரவள் போனதென் பாங்கியரே. (346)

### நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல்

வண்ணப்பொற் றாரணி சிங்கார வேலர் மயிலைவெற்பில்
பெண்ணைப் பெற்றாலும் புதல்வற்பெற் றாலும் பெருகுபுகழ்
நண்ணப்பெற் றவது வேபே றதுவன்றி நாடுபழி
எண்ணப்பெற் றால்விடுத் தென்போ லிரங்கி யிருப்பதுவே. (347)

### நற்றாய் பயிலிடம் தன்னொடு புலம்பல்

சகமேழ் துதிசெய்யுஞ் சிங்கார வேலவர் தம்மயிலை
அகமே தடஞ்சுனை யேமயி லேகுயி லார்பொழிலே
சுகமே யிருஞ்சுக மேவரு வேனென்று சொல்லிநல்ல
முகமே புரிந்தகன் றாளோ சொலுமந்த மொய்குழலே. (348)

### நிமித்தம் போற்றல்

செங்கையம் போருகன் சிங்கார வேலன் றிருமயிலை
மங்கல மேற்பை யகன்றே சுரஞ்செலு மாயனுடன்
தங்கை வந்தெய்தத் தமக்கை தருங்கொடி சார்ந்தழைத்தால்
நங்க ளுணவினு நன்காம் பலியிங்கு நல்குவதே. (349)

### நற்றாய் சுரந்தணிவித்தல்

கதுமென் றெழுமசு ரேசரை வென்றவன் காண்மயிலைப்
புதுமன்றல் மார்பினன் சிங்கார வேலவன் பொற்பதம்போல்
பதுமந் தனக்கும் பகலோ னுனக்கும் பரிவுளதால்
மதுமுந் தியமலர் மான்போம் வழித்தண்மை வைத்தருளே (350)

### நற்றாய் தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்

நெடும்பான் மயிலையிற் சிங்கார வேலர் நெடுவரைமேல்
விடும்பான் மையன்றி தெனவேண்டி யூட்டினு மெல்லியளாள்
அரும்பாலை வாய்நுக ராள்சுடும் பாலை யழல்விழிபோம்
கடும்பாவ மென்கொ லிதுவோ தவஞ்செய்து கண்டதுவே. (351)

### இளமைத் தன்மைக்கு உளமெலிந்து இரங்கல்

வள்ளற் குருபரன் சிங்கார வேலன் மயிலையன்னாள்
எள்ளத் தனைபசி தாங்கா தியற்கை யிகந்திரங்கித்
துள்ளித் துடித்து விழுமிந்தப் பிள்ளை சுரத்திடையோர்
கள்ளக் கண்வனோ டேகவுங் கூடுங்கொல் கால்களுக்கே. (352)

### அச்சத் தன்மைக்கு அச்சமுற்று இரங்கல்

கண்பா ரெனப்பணி வார்க்கருள் காட்சியன் காமயிலை
நண்பா கியதுங்கன் சிங்கார வேல னளிர்வரைமேல்
உண்பா யெனுஞ்சொல் லுரப்பாய்ச் சொலினு முளம்வெருவும்
பெண்பால் பொறுத்திடு மோவனத் தானைப் பெருங்குரலே. (353)

### ஆயமும் தாயமும் அழுங்கக் கண்டு காதலின் இரங்கும் கண்டோர் இரங்கல்

தூய மயிலையிற் சிங்கார வேலவர் தோகையன்ன
தாய ரிரங்கத்தம் மாக்க ளிரங்கத் தணிக்கறியா
ஆய மிரங்கா வடிநா ளிவர்குலத் தாகி வந்த
ஞாய மிரங்க நடத்தனன் றேசுர நன்னுதலே. (354)

### செவிலி ஆற்ருத் தாயைத் தேற்றல்

மாற்றகல் பொன்னிகர் சிங்கார வேலர் மலையிலுள்ளார்
தூற்றலு முண்கண் டுளியு மொழியச் சுழலிருங்கால்
ஏற்றிய வெல்லையெல் லாஞ்சென்று தேடிநம் மேந்திழையைப்
போற்றவும் யான்கொணர் வேன்வருந் தேலன்னை
[புந்தி நொந்தே. (355)

### செவிலி முக்கோற் பகவரை வினுதல்

கூனிக் குழைந்து வெயிற்குடை தாங்கிமுக் கோல்பிடித்துக்
கானிச் சுரத்து வருமந்த ணீரெதிர் கண்டதுண்டோ
மேனிப் புழுகணி சிங்கார வேலர் மிளிர்மயிலை
மானிக் கனதண் மொழியா டுணையோடும் வந்ததுவே. (356)

### மிக்கோர் ஏதுக் காட்டல்

சிலையிற் சிறந்தவர் சிங்கார வேலர் திருமயிலை
மலையிற் பிறந்த வருவிமண் மீது வழங்கல்கண்டு
நிலையிற் பிரிந்தம் மலைவந்த தோவன்னை நேசனிட்ட
வலையிற் புணர்ந்துபின் மானேகி லென்னைபின் வந்ததுவே.
(357)

### எயிற்றியொடு புலம்பல்

மங்கலந் தந்தருள் சிங்கார வேலர் மயிலைவெற்பில்
எங்களை வாட்டங்கண் டெம்மான் சுரத்தி லேதிலன்பின்
கொங்கையின் முத்தெனப் பூம்பாதங் கொப்புளங் கொள்ளநடந்
திங்குவந் தாள்கண்ட துண்டோ வெயின ரிளங்கொடியே. (358)

### குரவொடு புலம்பல்

வரவோ திமர்பணி சிங்கார வேலர் மயிலைவெற்பில்
கரவோர் சிலர்மண் மாதவன் செல்லுங் கதிவழக்குக்
குரவோர் துணையென மாமந் திரத்தைக் குறித்துரையா
துரவோ தி விட்டனை யோபாவை யீன்று முளம்வலிந்தே. (359)

### சுவடு கண்டு இரங்கல்

நம்பாகும் பூவடிச் சிங்கார வேலவர் நயமயிலை
எம்பாவை சீறடி யீத்து கானை யிடுமடியாம்
அம்பாவை சீறடி பின்னயன் முன்னெங்கு மாயினதால்
வெம்பாகு போல வுருகியுள் ளஞ்சி மெலிந்ததுவே. (360)

### கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்

இளரும் பெரும்புகழ்ச் சிங்கார வேலர் இளைமயிலை
வளருங் கொடியுங் கொழுகொம்பும் போலவிம் மன்னனையும்
தளருங் கொடியிடை நின்னையும் போலத் தமர்புலம்ப
உளருஞ் சுரத்தெதிர் வந்தன ரோவிரு வோர்கலந்தே. (361)

### அவர் புலம்பல் தேற்றல்

போக விடுத்துப் புறஞ்சொல்லி யன்னை புலம்பல்செல்வாய்
மேக நிகர்குழ லாளுந் துணையும் விடாயகன்று
யோகன் குருபரன் சிங்கார வேல னுயர்ந்தபதி
ஆக விளங்கு மயிலா புரியை யணுகுவரே. (362)

### புதல்வியைக் காணாது கவலை கூர்தல்

சேணுடு வாழ்வித்த சிங்கார வேலர் திருமயிலை
வாணுடு கண்ணியை யான்றேடி வாடி வழிமுழுதும்
காணாது மீண்டவென் கால்கண்முன் செல்லவுங் கண்கள்பின்
[பார்த்
தேணுக நின்றவக் கண்ணேடு சிந்தையு மேய்ந்ததுவே. (363)

கற்பொடு புணர்ந்த கௌவை முற்றிற்று.

---

## மீட்சி.

### சேண் அகன்றமை செவிலி தாய்க்கு உரைத்தல்

முருகா மயிலையிற் சிங்கார வேலரை முன்னலர்போல்
இருகாலுங் காலென வோடியு நேடியு மென்னெதிரே
தருகான் வழியிடைக் காணே னொருமன்னன் றன்னகர்க்கு
வருகாதல் செய்துகொண் டேகின னன்னைநம் மாணிழையே (364)

### தலைவன் மீண்டு தம்பதி அடைந்தமை சாற்றல்

வாம்புலி வென்ற விடமது சேடை மறையவர்தந்
தோம்படை சாற்றிட மீதிளைப் பாறி யுறைந்தநிழல்
பூம்பொழி லீது மலர்புனை காவிது பொன்மயிலை
ஆம்பதி யீதெழிற் சிங்கார வேல ரசலமின்னே. (365)

### தலைவி முன்செல்வோர் தம்மொடு தம்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல்

நிதிமயி லாபுரிச் சிங்கார வேலர் நெடுங்கிரிமேல்
மதிகதி ரோடு செலத்தா ரகையின மாழ்குதல்போல்
அதிபதி யாமென் றுனையோடி யான்செல வல்லலொடு
வதிதரு பாங்கியர்க் கியாம்வர வோது மறையவரே. (366)

### முன்செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தல்

நீளலர் வாவி மயிலை யமலை நிமலன்மகன்
தாளணி தண்டையன் சிங்கார வேலன் றடங்கிரிமேல்
ஆளரி யண்ண லுடன்மாது மீண்டன ளஞ்சனந்தோய்
வாளரி நோக்கு மடவீரிப் போது வருகுவரே. (367)

**பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்**

மும்மையும் வாழ்வருள் சிங்கார வேலர் மொழிமயிலை
அம்மனை கேளொரு சோபன நீபெறு மன்னமன்ன
நம்முறு புண்ணியம் யாவருங் காண நடந்துசுரம்
செம்மலோ டிந்நகர் வந்ததென் றந்தணர் செப்பினரே. (368)

**நற்றாய் உளங்கொள வேலனை வினவுதல்**

பாட்டார் மயிலையிற் சிங்கார வேலனைப் பன்னும்வெறி
ஆட்டாள னேசுரம் போய்மீண்ட மன்னவ னாரணங்கைச்
சேட்டாரு நம்மனைப் பாலுய்க்கு மோநிதி சேந்தனது
வீட்டார வுய்த்திடு மோதெளி வாக விளம்பெனக்கே. (369)

**மீட்சி முற்றிற்று.**

---

## தன்மனை வரைதல்.

**நற்றாய் மணன் அயர் வேட்கையில் செவிலியை வினவுதல்**

விதுமைப் பொழில்வளர் மாமயி லாபுரி வேந்த ரென்றும்
புதுமைப் புகழெழிற் சிங்கார வேலர் பொருப்பரசர்
பதுமத் திருவனை யாண்மண நம்மனைப் பாங்குசெய்யும்
மதுமைக் கயல்விழி சொல்லுது மோவவ ரன்னையர்க்கே. (370)

**செவிலிக்கு இருவர் வரைந்தமை உணர்த்தல்**

திரிசங்க முத்தமிழ்ச் சிங்கார வேலவர் சேர்மயிலைப்
புரசந் ததிபெறு தாயேநல் வாழ்த்தொலி போற்றவெங்கும்
முரசங் கலிக்க முளரிநம் மாதை முறைமைபெற
வரசங் கணிமணஞ் செய்தது தூதர்சொன் னார்மகிழ்ந்தே. (371)

**வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்**

* கம்மூர் சடிலர் கபாலீசர் மைந்தன் கவின்மயிலை
அம்மூர்தி மஞ்ஞையன் சிங்கார வேல னணிவரைநேர்
தம்மூர் மகிழ வவர்மணஞ் செய்ததைத் தாழ்குழலாட்
கிம்மூ துரையன்னை தூதர்முன் னேவந் திசைத்தனரே. (372)

## 3. கற்பியல்

**இல்வாழ்க்கை.**

**தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.**

ஏதுரை யான்மொழிந் தாலு மிதமென் றிசைந்துபன்னாள்
போதுத லானலம் பெற்றேனெனக் காலும் புகழ்மயிலைத்
தூதுறை மாலையன் சிங்கார வேலன் சரணெனவே
மாதுடன் பூமிசை வாழியெந் நாளு மகிபதியே (385)

---

* 373-ஆம் செய்யுளிலிருந்து 384-ஆம் செய்யுள் முடிய ஏட்டில் இல்லை.

### பாங்கி தலைவியைத் தலைவன் வரையுநாள் அளவும் வருந்தாதிருந்தமை உரையாய் என்றல்

பானுவின் சீருருச் சிங்கார வேலர் பயின்மயிலைத்
தேனுமின் பாகுஞ் சுவையுமொப் பாயன்பர் சேர்ந்துமனை
தானுமின் பாமெனு மன்பவ ருன்னைத் தணந்தவந்நாள்
வானுமன் பாங்கற் பிலங்கிழை யேயெங்ஙன் மன்னியதே. (386)

### தலைவி வருந்தாதிருந்ததற்குக் காரணங்கூறல்

மன்னுகர் போற்றிய சிங்கார வேலர் மயிலைவெற்பில்
அன்னு ளளித்த மலர்பொழி லாயமு மன்பர்சொன்ன
நன்னு வசனமும் பேராற் றிடையுற்ற நன்புணைபோல்
உன்னு தரவுங்கொண் டியான்வருந் தாம லுறைந்தனனே.
(387)

### பாங்கி தலைவனை வரையுநாள் அளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல்

செவ்வா யமுது முலையிள நீருஞ்சொற் றேனுமிவள்
இவ்வா றுதவ நுகர்தரு நீயிடை யீடுறுநாள்
அவ்வாறு மாமுகன் சிங்கார வேல னருண்மயிலை
எவ்வாறு காம விடாயாற்றி யண்ண லிருந்ததுவே. (388)

### மன்றல் மனைவரு செவிலிக்கு இருனை அன்புற உரைத்தல்

திருத்தத் திருத்தத் திருந்தா வறிவுந் திருத்தவந்துள்
இருத்தற் குரியவன் சிங்கார வேல னெழின்மயிலை
அருத்திக் குரிய விருவோர் செயலு மறிந்தபின்னர்க்
கருத்துப் பொருளெனும் மன்பினைக் காட்சியிற் கண்டனனே.
(389)

### பாங்கி செவிலிக்கு நன்மனை வாழ்க்கைத் தன்மை உரைத்தல்

நற்குண நற்செய றன்னை விரும்பு நலனுடையாள்
அற்புட னுக்கு மடிசினுண் டன்ப ரகமகிழப்
பொற்புறு மேனியன் சிங்கார வேலன் புகழ்மயிலைக்
கற்புறு நின்மக ளில்வாழ்க்கை முற்றவுங் கற்றனளே. (390)

### செவிலி, பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தல்

கொண்டானைத் தெய்வ மெனப்போற் றுதலுங் குலமுறையும்
கண்டார் வியப்பு மொழுக்கமு மாண்புமக் காதலனல்
உண்டான செய்தலும் பெற்று ளணங்கன்னை யொண்மயிலை
வண்டார் குவளையன் சிங்கார வேலன் வரையிடத்தே. (391)

**செவிலி தன்மனை வாழ்க்கைத் தன்மை உரைத்தல்**

வடிவ னிளமையன் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
குடிகொள் பெரியநங் காதலி வாழுங் குலமனைப்பால்
அடிசின் முழக்கு மருந்தும் வருந்தின ரார்ப்பு மன்பால்
மடிவி லிரவலர்க் கீகையு மோகையும் வாய்த்தனவே. (392)

**செவிலி நற்றுய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்**

முப்பாலின் முன்னிரு பாலியல் யாவு முடிவுகண்டார்
அப்பாலின் மேலுறு மின்பமெப் பாலு மளவுபடா
இப்பா லமைந்தனர் நம்மிரு வோரு மெழின்மயிலை
வைப்பாம் பெருநிதிச் சிங்கார வேலன் வரையனையே. (393)

**இல்வாழ்க்கை முற்றிற்று,**

---

## பரத்தையிற் பிரிவு.

### 1. இளைய கலாம்.

**காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏதுவாம் இவை இறைவிக்கு என்றல்**

வலாரிவந் தனைபுரி சிங்கார வேலர் மயிலைவெற்பன்
உலாவும் பலசந்த மாலையிற் கோவைவைத் தொண்டொடியார்
எலாருஞ்சொல் பாடலு மாடலு மூட லிசைத்திடுமால்
கலாபந் தருசிற் றிடைநீல வார்குழற் காரிகைக்கே. (394)

**தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல்**

களவிற் புணர்வு பிரிந்துபன் னாளிடை கண்டதன்றி
விளவிற் புணர்வும் பிரிவுடைத் தேயெனில் வல்வினையின்
அளவிற் பொருந்துமென் போன்மாதர் யாவ ரணிமயிலை
இளமைக் குருபரன் சிங்கார வேல னெழில்வரைக்கே. (395)

**ஈங்கிது என்னெனப் பாங்கி வினுதல்**

எண்ணு மயிலையிற் சிங்கார வேல ரிமையவெற்பில்
கண்ணு மனமுங் கவின்பெறு மேனியும் காதலர்நீ
நண்ணும் வகைதந்து நீங்காம லின்பரு ணாளையினும்
ஒண்ணு முறையல்ல வேயணங் கேயிந்த வுண்மெலிவே. (396)

**இறைமகன் புறத்தொழுக்கு இறைவி பாங்கிக்கு உணர்த்தல்**

அன்னம் பருகுஞ் செழும்பாலைப் பன்றிக் கருத்துதல்போல்
பொன்னந் துணர்மணன் மீதிடும் புன்னையம் பூந்துறைவன்
தன்னம் புயத்துணை வேற்றயல் மாதர் தமக்களித்தான்
வன்னந் தரும்பதச் சிங்கார வேலன் மயிலைமின்னே. (397)

### தலைவியைப் பாங்கி கழறல்

பார்ப்பார் நகைக்கும் பரிசுசெய் தாலும் பரிவதன்றி
வேர்ப்பா ரலர்கற்பு மின்னுர் தலைவர் விரகமயல்
சேர்ப்பாரைச் சேர்ந்தன ரென்றிடர் கூர்வதென் சீர்மயிலை
ஊர்ப்பா லினிதுறை சிங்கார வேலன்வெற் பொண்ணுதலே. (398)

### செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல்

கூடிக் குலாவிய சிங்கார வேலர் குலமயிலைச்
சேடிக் கணிந்துசெஞ் சந்தனஞ் செந்நிறச் சேலைதற்றுச்
சூடிச்செந் தாமரை மார்பிற் பவளத் தொடர்புனைந்து
பாடிப் பரத்தைமுன் செல்வான் விடுத்தனள் பான்மொழியே.
(399)

### அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்

குணப்பா லருளிய சிங்கார வேலன் குலமயிலை
மணப்பா ரிசாத மலர்பூத்த தாயின் வருமளியார்
உணப்பால ரல்ல ரெனிலிந்தச் சேடி யுருவமெல்லாம்
புணர்ப்பான சேதுப் பெருங்காசி நித்தம் புகழ்பெறுமே. (400)

### பரத்தையர் கண்டு பழித்தல்.

காவள மோங்கு மயிலை யதிபதி கைநெடுந்தந்
தாவள மூர்ந்தவன் சிங்கார வேலன் றடங்கிரிவாழ்
ஏவண நோக்கி யிணங்கிமெய் யெங்கு மிடையலர்ந்த
பூவண மீட்டன ளப்பூஞ் சிலையும் பொறித்திலளே. (401)

### தலைவன் வரவு கண்டுவந்து வாயில்கள் மொழிதல்

சேரிப் பரத்தை மனையகன் றன்பர்நஞ் சேடிசென்ற
பாரிப் பறிந்த வுடனேயுன் மாளிகைப் பாங்குவந்தார்
பூரிப் பதுமெய் புளகிப்ப துந்தகும் பூண்டபுகழ்
வாரிக் குருபரன் சிங்கார வேலன் மயிலைமின்னே. (402)

### தலைவன் வரவு பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

உறுப்பா லுறுபய னின்பணி யென்றுறு வோர்பிழையைப்
பொறுப்பா னருள்புரி சிங்கார வேலன் புகழ்மயிலைச்
சிறுப்பான் மதிநுத லன்பர்வந் தாரெதிர் சென்றுகொண்டு
கறுப்பாறு நெஞ்சுசெவ் வாய்வெளுப் பாமுறுங் கண்சிவப்பே. (403)

### தலைவி எதிர்கொண்டு பணிதல்

ஊடற் கபாடம்வெங் காமக் கனிச்சிச் குடைந்ததென்றல்
கூடற் பொருள்வெளி காணுங் கணவர் குறைபொறுத்துச்
சூடப் பதமலர் வேண்டுவ தாநங்கை சூழ்மயிலை
நாடச் சிறந்தவன் சிங்கார வேல னளிர்வரைக்கே. (404)

### தலைவன் வாயில் வேண்டல்

சுகப்பொறை தாங்கிய தண்கா மயிலையன் றெல்கடல்சூழ்
சகப்பொறை யோர்புகழ் சிங்கார வேலன் றனதுவெற்பில்
மகப்பொறை கூர்ந்த வயிற்று ளெனது வழுநினைந்து
அகப்பொறை கூர்த லரிதோசென் றுற்றுதி யாரணங்கே. (405)

### தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்

உண்ணையங் கொண்ட புதல்வனைப் பெற்றுநொந் துற்றமெய்யில்
எண்ணைய மாடி யிருந்தனண் மன்னவிங் கெய்துநின்பால்
விண்ணை ரமுதனை யாடுணி தீரவும் வேண்டுமிசைப்
பண்ணோர் மயிலையன் சிங்கார வேலன் பனிவரைக்கே. (406)

### புணர்ச்சியின் மகிழ்தல்

ஆந்தொடை நாட்டுக் கிவரே யுரிய வகமுடையார்
ஏந்து புகழுயர் வேளாளர் வாழு மியன்மயிலைக்
காந்தண் மலர்புனை சிங்கார வேலன் கருணையன்னப்
பூந்தண் குழலி பாலின்ப மார்ந்து பொலிந்தனளே. (407)

## 2. முதிய கலாம்.

### வெள்ளணி அணிந்து விடுத்தல்

எங்கட் கருள்புரி சிங்கார வேலவ னின்மயிலை
சிங்கக் குழையுமுத் தாரமுந் தாருத் தளவலரும்
திங்கட் கலையும் புனைந்துசென் றொளொரு சேடிமின்னாள்
அங்கட் புதல்வனைப் பெற்றது கூற வரசனுக்கே. (408)

### தலைவன் தன்மனத்து உவகை கூர்தல்

குஞ்சர வாகனன் சிங்கார வேலன் குலமயிலை
மஞ்சளு நெய்யு மளாவிய மெய்யு மடித்தலமேல்
அஞ்சலெ னும்வேள்வி செயமஞ்ச னும்பர்கொ ளணிமுலையும்
வஞ்சிய வோகையுங் காண்பான்செய் மாதவ மிக்குடைத்தே. (409)

### தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்

தடைக்கலி தீர்த்தருள் சிங்கார வேலர் தடமயிலை
இடைக்கிடை யாக வவர்கைவித் தார மிசையவிம்மும்
புடைப்பெருங் கொங்கையில் பாலுணு மைந்தன் பொலிவலிய
கடைத்தலை வந்துநின் றுரன்பர் தேரொடுங் காரிகையே. (410)

### தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல்

*மாலன் பொடுபணி சிங்கார வேலர் மயிலையிலென்*
*பாலன் பிறக்கும் பருவத் திலாது பரத்தையர்தங்*
*கோலங் களித்தவர் மானேயிப் போது குழைந்துவந்து*
*சாலம் புரிகுவ தென்னேசெல் வாரவ டன்மனைக்கே.* **(411)**

### பாணன் முதலாப் பாகன் ஈறுப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் மறுத்தல்

*ஒலியார் மயிலையிற் சிங்கார வேலரை யுன்னலர்போல்*
*மலியார வாரப் பாத்தையர் சேரிசெல் மன்னவர்க்காய்*
*நலியாத யாழ்பயில் பாணவிங் கென்முன் னவிலுகின்ற*
*கலியாணி தான்சங்க ராபர ணக்குணங் காட்டியதே.* **(412)**

### வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்

*திசையார் புகழ்த்தெய்வ யானையுங் கானவர் சீர்மயிலும்*
*நசையார் மயிலைமன் சிங்கார வேல னளிர்வரைமேல்*
*வசையாரை நோதல் வழக்கா முலகின் மகிழ்ச்சிதரும்*
*இசையாரை நோத லிசையோ வ்சையு மியலணங்கே.* **(413)**

### விறலி வாயில் மறுத்தல்

*ஏலுஞ் சிறப்பருள் சிங்கார வேல ரெழின்மயிலை*
*பாலும் பதக்குக் கடைபட்ட மோரும் பதக்கெனுஞ்சொல்*
*சாலும் படிசெய் தவர்சேர் பரத்தைமுன் சார்மதங்கி*
*கோலுந்தன் னுடலுக் கொக்குநின் பாடலுங் கோலமுமே.* **(414)**

### கூத்தர் வாயில் மறுத்தல்

*தொடிக்காலன் செங்கையன் சிங்கார வேலன் சுகமயிலைக்*
*குடிக்காவ லர்செல் வழிநோக்கி நோக்கிமெய்க் கூத்தர்மன்னு*
*கடிக்காவி யங்கொளி மாழ்கின னென்முன்பு காட்டிலென்னும்*
*படிக்கான நட்டத்தைப் பார்த்தா லிலாபம் பரத்தையர்க்கே.* **(415)**

### பாங்கி மறை

*அணிவாழ் மயிலையிற் சிங்கார வேல ரருவிவெற்பில்*
*மணிவாய் மதலை பிறந்தான் வளர வளரரைக்கிண்*
*கிணிவாய் மிழற்ற நடைசெயும் போதன்பர் கேண்மனைப்பால்*
*பணிவாய் மணியுன்றன் பாங்கிவந் தாரென்ன பாங்கிதுவே.* **(416)**

**பரத்தையிற் பிரிவு முற்றிற்று.**

**திருமயிலைக் கோவை முற்றும்.**

T. 1906

# திருமயிலை உவமை வெண்பா

(திருநெல்வேலி நடலிங்க கவிராஜர் பாடியது)

# திருமயிலை உவமை வெண்பா.

## காப்பு.

பூமான் மகிழ்மயிலை புண்ணியனைப் போற்றி செய்து
நாமா னுவமைவெண்பா நான்பாடக்—காமானுங்
கூத்த விநாயகனுங் கும்பமுலை யாரிருவர்
காத்த விநாயகனுங் காப்பு. (1)

## நூல்.

சுந்தரமாந் தீர்த்தத் துரைச்சாரயி னுடுதலால்
விந்தைக் குளம்விரும்பு மேன்மையதா—லெந்தையருள்
வேண்டுதலா லென்றும் வியன்மயிலைத் தந்திமுகன்
பாண்டிய விநாயகனைப் பாம்பு. (2)

புட்கரணி தீர்த்தம் புனைவளத்தாற் பாவைமுகம்
முட்குதிரை முகத்துண் டாக்குதலாற்—கட்செவியா
னோங்கு நகரிக் குருகீழ்க்காற் செந்தூரான்
றங்குமயி லாபுரிவேள் தான். (3)

வள்ளுவரின் சொல்வளமே வாய்த்தசத்த மால்வரையால்
விள்ளுவகை வாயிலார்க்கு மேலதாற்—றுள்ளலைசூழ்
மாமயில்வன் புன்னையிலே வந்ததாற் செந்தூரே
யாமயிலை யென்றுதுதிப் பாம். (4)

புன்னைமரஞ் சேருதலாற் பொய்யிலா மெய்விளங்குந்
தன்மையினாற் கள்ளவனஞ் சார்தலினாற்—மன்னுமதில்
வீரமார்த் தாண்டனுக்கு மேற்படலா லாவுடைத்தாய்
வூர்களந்தை யூர்மயிலை யூர். (5)

கருத்தன் மருவு கபாலனென் றுங்காண்பால்
நிருத்தர் பொய்யிலார்பால் நிறைவால்—திருத்துபுனைக்
கர்வுடைத்தாய் பச்சைக் கதிரிலகுஞ் சந்நிதியா
லாவுடைத்தாய் கற்பகத்தா யாம். (6)

கங்கை தனுமதியுங் காணுதலாற் றும்ரவன்னி
தங்கு மிறைவனிடஞ் சார்தலினால்—அங்கை
வளைசுரமுங் கற்பகவல் லியுஞ்சேர் பண்பாலத்
தனைமயிலை யேவிதிபா தம். (7)

கண்ணுவர்சூழ் வேலைக் கருத்துவைக் காட்சியதால்
எண்ணியபோ தாயினர் பணியாற்—பெண்வடிவு
தெற்குமுகச் சேவைதருஞ் சீரால் மயிலைநகர்
தெற்குதவு தென்றளிக்கை யே. (8)

நன்காந்தை வேங்கடத்து ணண்ணியே பாலுறலால்
மன்கதிர்வே லாராசை வந்தனையா—லென்றனிகை
வாயே மருவி வரந்தரலாற் கற்பகமாந்
தாயே வடிவுடைய தாய். (9)

பொதிகைமலை மேற்கீழ்ப் பொருந்துமுக வாய்ப்பாற்
பதிகுலசே கரராம் பண்பாற்—குருதிசெய
குறம்வளர்த்தாள் கோங்குயல் பாடியே கையினுல்
யறம்வளர்த்தாள் கற்பகத்தா யாம். (10)

கருவூரார் பாற்றிரும்புங் கண்ணி னருளாற்
மருதப்ப ராசை வளத்தா—லிருமைக்
கடனு விரதிநதி கங்கையெனச் சேரலாற்
புடைமரு தூர்மயிலாப் பூர். (11)

ஆரமலை மேல்பா லணுகலாற் கும்பமுனி
நேர முதல்வ நிரைதரலால்—நாரிசிவ
காமவல்லி மேவு கனவளத்தால் தென்பூவை
நாம் மயிலை நகர். (12)

வேளையென்றும் போற்றும் வியப்பினுற் காசிமன்னன்
நாளும் பரவு நலத்தால்—சூளு
மரகதத்தாய் கற்பக வல்லியென் வாய்ப்பாற்
புரியம்மை யூர்மயிலாப் பூர். (13)

முன்னீரி நாக முடியாட லக்கடனு
நன்னீர்ப் பெரியவள் நாடுதலால்—தன்னேர்
கயிலாய ருள்ளக் களிப்பாற் பிரமை
மயிலா புரியெனவும் வாழ்த்து. (14)

கும்பமுனி சந்தாற் கொற்றந் தமிழ்ப்பெறலாற்
செம்புனல் வாரி சிறந்ததனு—லம்புவியிற்
பொன்மலையின் சீர்வசந்தன் பூவார்ந்த தால்மயிலை
நன்மலய மென்றுதின நாடு. (15)

உலகின்பாற் கல்யாண முற்றுதவு பண்பால்
இலகுமலை யாசலஞ் சேரின்பாற்—பலர்புகழும்
செட்டிக் கருள்செயலாற் சீர்ப்பாவ நாசகங்கை
இட்டமயி லாபுரியே யாம். (16)

அத்திதீர்த் தங்கண் ணழகுறலாற் கல்யாண
சத்தியெந்த நாளுந் தழைத்திடலால்—முத்திக்
கடனை வழங்கூங் கனத்தால் மயிலை
இடமாஞ் சிவசயில மே. (17)

கும்ப நியதிதிரி கூடச் சிவமெனலாற்
சம்பந்தன் பாப்புனையுந் தங்கலவாற்—கொம்புழல்
வாய்மொழித்தா யுங்கள் மருவுதலால் குற்றால
நாம மயிலை நகர். (18)

களவி லடியவரைக் கண்பார்க்கும் பண்பால்
வளர்கபா லீசரென்னும் வாழ்த்தால்—அளவளவா
மொப்பனையும் பக்க முறலாற் கருவைநல்லூர்
இப்புவியிற் றென்மயிலை யே. (19)

நாக மகிமையினல் நற்கூழைச் சொற்பெறலால்
ஏக வடிவிலரி யன்புறலாற்—பாகமெல்லாங்
கோமதி குலாவுதலாற் கோமாசீ ராசைநகர்
பூமயில்வாழ் தென்மயிலாப் பூர். (20)

பூமி வணங்குதன்மை பூணுதலால் மீறுகின்ற
நேமிசுழித் துள்வாங்கு நேர்மையினல்—நாமின்
வழிபாடு செய்ததுணை மாலை புரிவரலாற்
சுழியல் மயிலையெனச் சொல். (21)

காளை வடிவார் களிப்புறலாற் சிங்கார
வேளை வணங்கியருள் வேண்டுதலால்—நீளுலகின்
மானதியாங் கங்கை வாய்த்தவர்கொண் டாடுதலாற்
கானப்பே ரேமயிலை காண். (22)

காணவரு மப்பனெதிர் காட்சி கொடுப்பதனுற்
பூணுவன்னி போலுமுருப் பூத்ததனுற்—பேணுமிசைப்
பாவணந் தானுமவை (வேற்) பாலனெரு பாலுறலாற்
பூவணமே தென்மயிலாப் பூர். (23)

கானப்பே ராறுசிவ கங்கைகுளங் காணுதலால்
ஈனத்தா ரும்பெருமை யெய்துதலாற்—கானல்புனை
நத்தார் வகைப்புனல்நீர் நாடிக்கோ தைக்கிசைவாற்
புத்தாரே யாமயிலாப் பூர். (24)

ஆப்புரையி னுமை மைதலர்ற் பஞ்சவளங்
காப்புகளின் மேன்மைபெறுங் காட்சியினல்—மீப்புவனங்
கூர்ப்பார் வணங்குங் குணத்தினற் றென்மயிலை
யாப்பனூ ரென்றே யறி. (25)

கடம்பவன்ன பெண்பெறலாற் கற்பக விமான
மிடம்பழகுங் காட்சி யிசைவாற்—றிடங்கொள்
கபாலீச னென்றுங் களிவால் மயிலைக்
கபாலீச் சுர மதுரை காண். (26)

பரவர் குடியிருப்புப் பாலியென்ற வாய்ப்பால்
அரசர் திறைகொள்ளும் கவன்பாற்—கரிமுகனைக்
கோனுட்சி யாடற் குலவுசித்தி யாக்கினதால்
மீனுட்சி கற்பகமா மே. (27)

ஆடல் யானைக்கு மணிபூட்ட லாலிறைவன்
கூடலுக்கு மென்முகவாய்க் கொண்டதனுல்—நீடுசெவ்வே
ளொன்று முதற்றலமென் றுற்றதா லோங்குபரங்
குன்று மயிலையென்றே கூறு. (28)

நீர்க்கரையிற் சேரு நிலைமையாற் காளியர்கோன்
கூர்க்குலிச நிறுத்துங் கொள்கையால்—ஊர்க்குளுயர்
மாட மதுரை வனத்துக் கிசைந்ததனுல்
ஏடகநே ராமயிலை யே. (29)

வைகைக்கும் பொன்னி வளநாட்டுக் குஞ்சிறந்த
மெய்வைத்த கீர்த்தி விளங்குதலாற்—கைவைத்த
வேலன் மருவும் விருப்பாற் பழமுதிர்
சோலை மயிலையெனச் சொல். (30)

நேரியரு மீனவரு நின்றுதினம் பொருதலாற்
சீரியரே காணுஞ் சிறப்பினுல்—சார்தலினு
லன்றோர் தினங்காணி யண்ணல்புக ழார்ந்தகொடுங்
குன்றே மயிலையெனக் கூறு. (31)

கோங்குமணம் வீசுதலாற் கூர்பழனி வாயமதாற்
பங்கயனுற் றேவர் பரவுதலால்—மங்கைவள்ளி
மேவுங் குகனும் விரும்புதலாற் றென்மயிலை
யாவினன் குடிக்குநிக ராம். (32)

ஊரர்முனம் விண்ணுக முற்றிடலா லங்கிசைந்த
சேரலர்க்கும் பாய்மா சிந்திடலா—லோரிறைவன்
செஞ்சொற் கவிதைகொள்ளுஞ் சீராற் றிருமயிலை
யஞ்சக் களத்தைநிக ராம். (33)

வன்மீன் மதலை வழங்குதலால் வந்தவர்க்கு
நன்மா மணம்பொருந்த நல்குதலாற்—றென்னூர்
வேந்தர் மகிழ்ந்திடலான் மின்குடபாற் சேருதலால்
ஆய்ந்தவவி நாசிமயி லை. (34)

ஆனிலையிற் காட்சி யருளுதலாற் கைமழுவா
வீனமுற்றோ ருய்ய விரங்குதலாற்—றேனூர்
புனைவளவ னூரின் புகழ்பெறலா னெஞ்சே
நினைமயிலை யூர்கருவூர் நேர். (35)

பேதைப் பிணியகற்றும் பெற்றியினு லெப்பொழுது
மோதக் கடல்முரச மொத்துளதால்—நீதகிள்ளைப்
பேச்சினுல் வேதப் பிறப்பாற் றிருப்பாச்சி
லாச்சிராம மயிலை யாம். (36)

கஞ்சநங் கைமேவுங் கனதனத்தார் வாழ்க்கையினுல்
வஞ்சியுரை மேல்கீழ் வாய்த்தலால்—மிஞ்சு
குடம்பாய்ந்த காவேரி கூடும் வியப்பாற்
கடம்பூர் மயிலைநகர் காண். (37)

ஆராரொன் ருவர்செவ் வந்தி விருப்புறலாற்
பேராவான் கற்பகத்தாய்ப் பெண்ணிசைவாற்—கூருங்
குயில்வார் குழலைக் கூடு நயத்தால்
மயிலைசிராப் பள்ளி மலை. (38)

காவேரி சூழரங்கங் கைநாக நாடுதலால்
பாவேர் சிலம்பி பணிவதனுற்—பூவேயும்
செங்கணனும் போற்றுஞ் சிறப்புளதாற் றென்மயிலை
யங்கணன்வா ழானைக்கா வாம். (39)

மாலயனண் ணுப்பதிகம் வாய்த்ததாற் சிந்தனையில்
நாலையுங்கண் டோர்க்குதவி நண்ணுதலாற்—கோலமுறும்
உண்ணு முலையா ளுவந்தான் புகழ்மிகலால்
அண்ணு மலைமயிலை யாம். (40)

தூய மலைக்குமுன்பு தோன்றுதலாற் கற்பகமுஞ்
சேயவன் னிதம்படிவஞ் சேருதலாற்—றுய்பெரிய
நாயகியு முத்த நதியுமேற் கொள்வதனுல்
ஆயவிர்த்த வெற்புமயி லை. (41)

பல்லக்கு முத்தருட் சம்பந்தர்க் களித்ததனுற்
வல்லகொடை யுங்கொடுக்கு மாண்பதனுல்—மல்கும்
வரத்துறைநெல் வாயிலார் வண்மை பெறலால்
அரத்துறையுந் தென்மயிலை யாம். (42)

வன்றெண்டர் பாட வரும்பெண் மணம்விலக்கி
யன்றுண்டான் நல்கு மருமையால்—ஒன்றினைமெய்
கண்டவர்க்குங் காட்டுங் கருணையினுல் வெண்ணெநகர்
அண்டர்புகழ் தென்மயிலை யாம். (43)

நாவின்மன் னவர்க்கருளை நல்குதலா லாரூரர்
சேவடிகா ணப்பதிவு சேர்ப்பதனுற்—பாவின்
திருக்கெடில வாழ்வுபுனை சீரா லதிகை
யிருக்குமறை சூழ்மயிலை யே. (44)

நாலுமறை பொருளு நன்மயிலே நல்குதலாற்
றாலமதிற் பெண்கொடுக்குந் தன்மையினாற்—பாலனென்றுஞ்
சம்பந்தன் மேன்மை தழைத்திடலாற் றென்மயிலை
நம்பர்திரு வோத்தூராய் நாடு. (45)

தோகை வணங்குதலாற் றொண்டைமான் கண்டதனாற்
வாகைவேள்சிங் காரமா விருப்பதால்—நாகம்
வளர்மாத மாலிசைந்த வண்மையாற் காஞ்சி
இளர்மயிலை யென்றே இளத்து. (46)

கம்பைத் திருநகரிற் காணுலாற் கைவளையும்
விம்பத் தணைக்கும் வியப்பினால்—நம்பன்வல
மாமாட்சி சேர்ந்து வரிசைக் கொலுப்பெறலாற்
காமாட்சி கற்பகத்தாய் காண். (47)

பாவலவர் தாமிசையப் பாக முவந்தனாற்
பூவுலகிற் கற்பகத்தின் பொற்புளதாற்—பூவுலகு
மெச்சியபூம் பாவை விளங்கியதாற் றென்மயிலை
கச்சூ ரெனவுங் கருது. (48)

மெய்ப்பொருள்வே டன்கருத்து மேற்கொளலா லவைபின்பாற்
கைப்பொருள்கள் நம்பினர்க்குக் காணுதலால்—எய்ப்புறவே
யந்தகனைத் தாக்கு மயிலான் மயிலைநகர்
கந்தமலி கோவலூர் காண். (49)

தொண்டைநாட் டார்காணுஞ் சூழ்ச்சியினாற் கைவேழம்
விண்டு நடித்தமுத்த மேன்மையாற்—றண்டலைகள்
பாயுங் குயில்கள் பயிலுவதாற் றென்முல்லை
வாயில் மயிலையென்றே வாழ்த்து. (50)

முடங்கல் வளரு முதுமையினாற் காணு
மிடங்கொண் டிறைவ னிருப்பதால்—அடர்ந்தவயி
னேசா கரத்தார் நிறைதலினாற் றென்மயிலை
பாசூ ரெனவே பணி. (51)

வேளாள வண்மை விளங்குதலால் ரத்னசபை
சூளாத ரவினற்பாற் றேன்றுதலால்—நீள்தடத்தின்
வண்டார் குழற்பெண் மருவுதலா லங்கா
டண்டனுறை தென்மயிலை யாம். (52)

கல்லினிசை கோயிற் காணுதலாற் கற்பகப்பூ
வல்லியுங் காவி மருவுதலால்—வல்லிபுணர்
வேடன் கதிர்வேல் விளங்குதலாற் றென்மயிலை
யாடற் றிருத்தணிகை யாம். (53)

சங்காழி மான்மருவுந் தன்மையா யென்னுளு
மங்காத நாக வடிவிசைவாற்—கொங்காரும்
பூங்கடம்பன் கோயிலென்றும் போற்றுவதாற் றென்மயிலை
வேங்கடமு மாம்புவியின் மேல். (54)

வேடன் பரிவுறலால் வேழமுங்கொண் டாடுதலால்
ஆடக நீர்நாக மணுத்தலா—னீடுகற்பக
ஞானப்பூங் கோதை நலந்தரலாற் றென்மயிலை
யானக்கா ளத்தியிறை யாம். (55)

நந்திவரைச் சார்பா னதிதக் கணமுளதால்
உந்துமனந் திகிரி யொற்றுமையால்—விந்தை
யயிலெடுத்தான் சிங்கார னுகவரு பண்பாலக்
கயிலை மயிலைநகர் காண். (56)

கற்பகத்தே னுரிமையக் கண்ணுறலாற் காசியினு
முற்பனமாங் காட்சி யுதவுதலாற்—றற்பரஞ்சார்
பிருங்கிருடி யானவரைப் பேணுதலாற் கேதாரம்
பொங்கு மயிலையென்றே போற்று. (57)

ஈனப் புலைச்சிக்கு மின்புதவ லாலிலங்கை
மானத் திசையாத வின்புதலாற்—றூனநிறை
கன்னன் விளையாட்டுக் காட்டுதலா லீண்டொருகோ
கன்ன மயிலையென்றே காண். (58)

என்புங் கதிபெறலா லேழுலமே யப்பதனால்
தென்பனுவல் வேள்கதையைச் செப்புதலா—லன்பின்பிணி
கன்னிகைபுன் னுகமுயர் கங்கையுற லாற்காசி
மன்னு மயிலையென்றே வாழ்த்து. (59)

கமலை யிருப்பிடமுங் காட்டுவிக்கும் பண்பால்
அமலை வடிவா மதனு—லிமையோர்
வலமாய் வணங்கும் வளைத்தாள் மயிலை
தலமாந் திருப்பருப் பதம். (60)

இலஞ்சி வியப்பா லெழின்மறையோன் சொற்குப்
பலன்புதிய பெண்கொடுக்கும் பண்பால்—தலஞ்சிறந்த
தென்றுபட்ட ணத்தா ரிசைவால் வடிவுறலா
லொன்றுமொற்றி யூர்மயிலை யூர். (61)

முற்றில் வனங்குசனை மூவராப் பதாலொருசார்
புற்றுமுனி யன்பரென்றும் போற்றுவதாற்—கற்பகஞ்சேர்
கேசகரியும் பாக மிசைவதாற் றென்மயிலை
யாசில்திரு வான்மியூ ராம். (62)

செட்டிமக ளன்பாற் றிரிபுண் டரர்பணியாற்
கட்டழகி பெண்ணினல்லாள் கற்பகத்தாற்—கிட்டு
முழுக்குன்று வேத முறைமையா லெங்கோமாண்
**கழுக்குன்று** தென்மயிலை காண். (63)

பெண்ணை வளர்ப்பதனுற் பேராறு தோன்றுதலாற்
கண்ணுதலார் நாளுங் களிப்புறலால்—நண்ணினர்க்குப்
பாத்தூர்செம் பொன்னுதவு பண்பால் மயிலையு
**மாமாத்தூ** ரெனவே மதி. (64)

பதிசோறுங் கேதகையிற் பூப்பதாற் பந்த
ரதின்மாடங் காட்டு மறைவாற்—பதிகா
வருகால் வழித்துணையின் வாய்ப்பான் மயிலைக்
**குருகாவூ** ரென்றுதினங் கூறு. (65)

பெண்ணைமுத்தங் கூடும் பெருமையினு லாரூரர்
நண்ணியதி செயத்தை நாடுதலா—லெண்ணுமன்பி
.......................................
....................................... (66)

சொல்லரசர் கற்படு தோன்றுதலாற் பாடலத்தின்
வல்ல பெயரு மருவுதலா—னல்லிசையின்
றென்னை வளத்தாற் **றிருப்பா திரிப்புலியூர்**
**புன்னை** வளர்மயிலாப் பூர். (67)

சிவகாமி யார்வாழுஞ் சீரின் சிறப்பாற்
பலகாம மாற்றும் பரிவால்—உவரிமிகு
மெல்லையினை நாகவன மென்பதாற் றென்மயிலை
**தில்லைவன** மென்றுதினஞ் சேர். (68)

நாகம் புலிபயிலு நல்வேலை கொள்வதனுற்
பாக மொருகற் பகமுளதா—லேகனுயர்
**கபால** நாடகம்பெண் **காணு**தலாற் **றென்புலியூர்**
கபாலன் வாழ்மயிலை காண். (69)

பஞ்சாக் கரமதனுற் பாதை பகுப்பதனால்
மஞ்சார் சதத்தீர்க்கால் மண்டபத்தாற்—றுஞ்சில்பே
ரம்பலமுங் காணு மணியா லரன்**றிருச்சிற்**
**றம்பலமுந்** தென்மயிலை **யாம்.** (70)

**கங்கரை**யால் மேல்முகத்திற் காதல் விருப்புதலாற்
றங்குபர மானந்த சார்பதனு—லைங்கரனுங்
**கற்**பகமென் றுடல் கணித்திடலாற் கற்பகத்தாய்
**நற்சிவகா மிப்**பெணென்றே நாடு. (71)

தோணி யென்றுங் கண்டதனூற் றுங்கவேள் தோன்றுதலாற்
பூணுநிலை யழகு பூத்ததாற்—சேணவினைதீர்
காரி மகிழ்ந்து கலிதீர்ப்ப தாற்காழி
யூரே மயிலையென்னு மூர். (72)

புள்ளிமயில் விளங்கும் பொற்பினால் பூங்கதிர்வேல்
வள்ளலதி காரம் வாய்ப்பதனூற்—கள்ளவினை
தீர்த்தொருபா லத்தையல் மகிழ்சேவை மேற்காய்த்தலா
லார்த்தனவே ருர்மயிலை யாம். (73)

வாட்கப் பெண்ணென்றும் வரந்தரலால் முத்தயரு
நாகடுத்த பேரொளிசூர் நல்லிடத்தால்—யோகமிகுஞ்
செயவாரங் கொள்ளுஞ் சிறப்பால்வே ளூர்தையல்
நாயகியே கற்பகமா னுள். (74)

கேகயம் பூசித்துக் கிருபைபெற லாலிறைவன்
பாகமதி லஞ்சல் பழகுதலால்—நாகதரு
நீடுகா வேரி நிதிதரலா லிங்குமயி
லாடுதுறை தென்மயிலை யாம். (75)

செங்கோ லிறைவர் தினமும் பரவுதலாற்
பொங்கோதை நாளும் பொலிவதனூற்—றங்கு
மருமைப் பதிகவிசை யாழொலிக்கும் பண்பாற்
றருமபுர மயிலைநகர் தான். (76)

பொன்னினீர்ச் சங்கம் பொருந்திச் சுவேதவன்
மின்னு மகிமை யினசவதால்—முன்னைமக
னுடவே முக்குளமு நல்குவதால் நன்றறிவன்
காடன்மயி லேசனென்று காண். (77)

அந்தகமா மால்வினைதீர்த் தைங்கரத்தோ னுடுதலாற்
சிந்துரநே ராலச் சிறப்புளதால்—மந்திரத்தின்
சாலை விளங்குந் தகுதியினூற் றென்மயிலை
யாலவன மென்றே யறி. (78)

சமயநிலை நிறுத்துந் தற்பரனூர் வாய்ப்பா
லமைவுறு மேற்கொளி னணியா—லுமையவள்பாற்
போகமார்த் தோங்குமுலை பூம்பாவை யுள்ளதலால்
நாகமயி லைநள்ளா று. (79)

சொற்புலவ ருட்புகலாற் சூழ்ந்துகருந் தார்க்குழலி
கற்பகப் பொன்னூர்க் கருளுவதா—லற்பால
முருகனூர் செய்தொழிலின் மோக முறலாற்
றருமயிலை தென்புகலூர் தான். (80)

இலையந்த ஊனகணப தீச்சுரமென் றூர்பாலத்
தலைவர்கபா லீசரென்றுஞ் சார்பாற்—கொலையில்
மடிமதலைக் காட்டும் வரத்தால் **செங்காட்டங்**
**குடி**மயிலை யென்றுதினங் கூறு. (81)

மன்னுரை நல்க வணிகன்மகள் கைதொழலால்
துன்னும் வன்னி வானுதற்குத் தோன்றுதலால்—மின்னுவண்டு
வார்குழற் பெண்பாக மருவுதலால் **தென்மருத**
**லூர்**நிக ராமயிலாப் பூர். (82)

சுருதி வழிபடலாற் சொல்லினுல் வாரி
விரியக்கோள் செய்விப்பப் பாலக்—கரவில்புக
ழாகுயரச் செய்தாட லரனைவிருப் பால்மயிலை
பாக**மறைக் காட்டுப் பதி**. (83)

ஓடமிகு வள்ளமதி லோட்டுவிக்கு மெய்ப்பதனுல்
நீடுபுத்தர் கீழாக நின்றிடலால்—நாடிவரு
பிள்ளையைக் காண்பார்க்கு பெருமையினுற் றென்மயிலை
**கொள்ளம்பூ தூ**ரெனவுங் கூறு. (84)

பரவையிடந் தூதிசைந்த பாங்கருறு பண்பால்
அரவிந்தப் பூம்பாவை யன்பால்—வரிசையுடன்
கற்பகத்தாய் விடங்கண் கண்ணுதலாற் றென்மயிலை
**யுற்பனஞ்சே ருந்திருவா ரூர்**. (85)

கலையருக்குஞ் செல்வம் கலந்தளிக்கும் பண்பால்
கொலைமறலைப் போக்குங் குணத்தால்—அலையிற்
குடவலை கோகாரி கூடுதலா னுளுங்
**கடவூர்** மயிலையென்றே காண். (86)

பூசுரர்க்கா யான்மாவைப் பூசித் துதவுதலால்
மாசிலா தோங்கு மணிநிறைவாற்—பேசிலொப்பி
லாமுலையு மர்ச்சனைசெய் தன்பா தனையுயர்பாற்
காமயிலை **தென்றுறைசை** காண். (87)

மந்திரஞ்சொல் வாலரசன் வணங்குமிடத் தால்வருஞ்சம்
பந்தர்க்கும் பொன்கொடுக்கும் பான்மையா—லைந்தருவு
மாமணியுஞ் சேர்துறைசை மன்னியோன் யாள்**மாசி**
**லாமணிக பாலீச னும்**. (88)

பூசத்தா னங்களபம் பூத்தபொன்னி வாய்த்ததனுல்
நேசத்தார் வாய்மை நிகழுவதால்—மாசில்
வரகுணரைக் காக்கும் வளத்தால் மயிலை
**யரனு ரிடைமருதூ ராம்**. (89)

நாவலர்க்குக் காசுபடி நல்குதலாற் றேணிவள
மேவியருள் ஞானக்கண்டு வேண்டுதலால்—மாவலவர்
போற்று மயிலை புனைதலாற் றென்மயிலை
யாற்றலுறு வீழிமிழ லை. (90)

மாகநீர் வாரி வழங்குதலாற் கைக்கொண்ட
மோகவிசு வேசுரனு முற்றிடலால்—மேகமொப்பா
யாரா வமுதநிறை நாதற்கு மூந்தவுதலாற்
கூறு மயிலைகும்ப கோணம். (91)

தேவிசெய்யும் பூசை சிறப்பாகக் கொள்ளுதலால்
ஆவியில்லார்க் காவி யளிப்பதால்—மேவரிய
பத்திமுற்று நேசர் பணியார் பொருள்பெறலாற்
சத்திமுற்றந் தென்மயிலை தான். (92)

அமர்நீதி நேசர்பணி யன்றளக்குஞ் சீராற்
றமைநேருங் கோவணமுஞ் சார்பாற்—சுமைதலையா
யெல்லாரும் போற்ற விடநாக மேற்கொளலால்
நல்லூர் மயிலை நகர். (93)

வேணு புரத்தவர்க்கு வேணி லகற்றுவதாற்
றுணுபசும் பூசைகொளுந் தன்மையால்—பேணுகின்ற
பன்மயிலைக் காவிரியும் பைம்புனலுங் காணுதலாற்
றென்மயிலைப் பட்டீச் சுரம். (94)

பொன்னியங்கள் மேவுதலாற் புன்னைவளம் பாடுதலாற்
சென்னியுங்கைக் கொண்டீசன் சேருதலால்—வன்னம்
பயிலுமலைச் சாமியொரு பாலனென்னும் வாய்ப்பான்
மயிலை வலஞ்சுழியு மாம். (95)

காவிரிக்கும் வியபராற் கந்தசா மிக்கிசைவாற்
பூவிரிக்கு நாகம் பொருந்துதலால்—மேவுமறை
நால்வருந்தன் மாசகல நண்ணுதலாற் றென்மயிலை
வேலிறைவ னேகரமா மே. (96)

ஆலத்தால் மாண்டவரை யன்றழைக்கும் கீர்த்தியினாற்
றலத்தார் திங்களூர் சார்தலினு—லேலக்
குழகன் வழிபடுவோர்க் குள்ளிருக்கும் வேளூர்
பழன மயிலைப் பதி. (97)

தங்கொருத்திக் கின்னுகந் தான்வளைவால் நேரயர்ந்து
குங்கிலியத் தாருமகிழ் கூர்தலினு—லங்குந்
தினந்தாள் வணங்கினர்க்குச் சீர்மை தரலாற்
பனந்தாள் மயிலைப் பதி. (98)

வேலவரென் ஞளும் விரும்பும் பதியதனுற்
பாலளித்து பாலனைக்காப் பாற்றுதலாற்—கோலமிகு
சென்னைநக ருக்கடுத்த தென்பால் வளருதலா
லுள்ளுமயி லூர்சேய் ஞலூர். (99)

அப்பனுக்கு வங்கமலை யார்காட்சி காட்டுதலால்
விப்பிரன் சொற்கேட்கும் வியப்பினுல்—மெய்ப்பா
மறையோது மாமுனிவர் வாழுந் திருமறைக்காட்
டிறைவன் மயிலையா னே. (100)

வாகீசர் நற்பணிகொள் வாய்ப்பதனுற் பூவைகிளை
பாகீசை வாகமங்கள் பாடுதலா—லாகூரன்
கூர்ந்தவடி விசைந்து கொண்டால் மயிலை
பூந்துருத்தி யென்றே புகல். (101)

குந்தமலி யாசானக் கும்பிட் டிறைஞ்சுதலாற்
சந்தமா ணிக்கந் தழைப்பதனு—லைந்தடக்கும்
வாயிலார்க் கின்பம் வழங்குதலா லாவுடையார்
கோயில் மயிலையென்றே கூறு. (102)

நல்லபூம் பாவைதொழும் நற்பெரிய நாயகியாம்
வல்லியரு ளெவர்க்கும் வாய்ப்பதனுற்—றெல்லை
மனவாக்குக் கெட்டான் மருவுகடற் சார்பாற்
புனவாயிற் றென்மயிலாப் பூர். (103)

அன்பா யிலேச வளவும் பிரியாத
தன்பாத சேவை தருதலால்—இன்பாக
நேடானைக் கொண்டாடி நேசித்து நிற்பதனுல்
ஆடானை யான்மயிலை யான். (104)

பரிதிகுல ராமன் பணிந்துசெலும் பண்பா
லொருசிவ ஞகங்கொ ளூர்த்தா—லிருவினையுந்
தீர்த்துமட வார்பவமுந் தீர்ப்பதாற் சேதுநகர்
கூர்த்தமயி லாபுரிக்கொப் பாம். (105)

மானிலத்து முந்து மகிமைப் பதியெனலாற்
ருனடங் கற்றேருஞ் சார்வதனுற்—பான்மைமிகு
மங்கலநீர் வாய்ப்பால் வளருத் தரகோச
மங்கைமயி லாபுரிநேர் வாம். (106)

சிந்து மதினுஞ் செறிய நடந்ததனுல்
விந்தையா னந்தவல்லி மேவினதால்—எந்தையிடங்
கங்கைசித் திரமாகக் கலந்ததனுற் றென்மயிலை
கங்கைகொண் டானென்றே கருது. (107)

சிந்து கரையிற் செறிதலாற் சிற்பரமா
மந்தரங்க ளூடு மறையினுல்—விந்தை
பயில்வாகுந் தன்பொருத்தம் பாலுற் றிசைவால்
மயிலைநகர் செப்பறையு மாம். (108)

தெக்கணத்திற் காசி செயல்நடத்து மென்பதனுற்
பக்கணமே யெங்கும் பகுத்திடலா—லக்கணியும்
வேந்தர் கயிலாயர் மேவுதலா லெங்கள்சிந்து
பூந்துறையாந் தென்மயிலாப் பூர். (109)

சந்தி விநாயகனுந் தானுடுந் தன்மையினுற்
புந்தியிசைந்து பூந்துறையா—லெந்தையுரு
முல்லையன கண்காணு முறைமையாற் றென்மயிலை
நெல்லைநக ரென்றே நினை. (110)

வேண்ட வளர்ந்ததனுல் மேலும்வன்னி பூண்பதனுற்
காண்டகுமோர் பெண்வடிவு காணுதலால—நீண்டுயர்ந்த
வேனில் விருப்பான் வியப்பான் மயிலீசர்
சாலிவா டீசரென்று சாற்று. (111)

அத்தியினிற் பூவை யழைத்திடலா லவ்வேழம்
பத்தாவி னூடப் பரிவறலான்—முத்திதரு
கம்பைநதிக் கீழ்பாற் காணுதலால் கற்பக்த்தா
யம்பிகையே காந்திமதி யாம். (112)

செந்தமிழி னெல்லை சிறப்பதனுற் றிண்டிரைகள்
சந்ததமு மோசை தழைத்திடலால்—விந்தைபெறு
கன்னியம் பூம்பாவை கதிதரலாற் றென்குமரி
பன்னுமயி லாபுரிக்கொப் பாம். (113)

மூவர் தமிழ்கொளலால் முன்னுற்று மன்பதைப்பூம்
பாவை யியற்றும் பணியினுற்—காவலவர்
போற்றி யரசுரிமை பூண்பதா லென்சிந்தை
யாற்ற மயிலைநக ராம். (114)

தேசிகமாப் பிள்ளை சிறந்தருளி னூடுதலால்
ஈசர்நா கலையஞ்சேர்ந் தின்புறலாற்—பேசுமிசைச்
சொல்லி னழகுஞ் சுகந்தரலாற் றென்மயிலை
வல்லவடி வீசுர மாம். (115)

வள்ளி மணமலையும் வாய்ப்பாற் றிருமலையி
னுள்ளுங் கதிர்காம முற்றிடலால்—வள்ளனுயர்
மன்றுசுப் பிரமணிய மருவலாற் றென்மயிலை
குன்றுதோ ருடீலென்றே கூறு. (116)

வாரணமுங் கான மடமயிலுஞ் சேர்வதனாற்
காரணவேள் சிங்காரங் காட்டுதலாற்—கூர்மயிலைக்
கற்பக விருப்பினாற் காந்தனருள் மீறுதலா
லுற்பனஞ்சேர் வள்ளிமயி லூர். (117)

சூட்டுமலைச் சார்பாய்த் துலங்குதலாற் றோகைவழி
பாட்டி லுயரும் பசியினா—லீட்டும்
புயல்சூழ் தளவாய் புத்திரன் சிறப்பால்
மயிலைமா யூரமென்று மாம். (118)

சிந்து வாய்க்கும் சிறப்பாற் சிவகாம
சுந்தரியாங் கற்பகமுந் தோன்றுதலால்—வந்தித் •
தணிவிசையு மேய்ப்பா லருட்பலவா லெந்தை
யணிவீச்சு ரமும்மயிலை யாம். (119)

சொன்னு கமம்விளங்குந் தோற்றத்தால் மாயவனு(ர்)
நி(ரி)ன்னு கமங்கொண்டிறை சூடுதலால்—மன்னும்
வயிரவ கபாலரென்றும் வாழ்த்து மியல்பால்
மயிலைம யேந்திர மலை. (120)

சன்னதி யாஞ்சிந்து தழைத்திடலாற் புன்னாகந்
துன்னு மதிற்குமேற் றோன்றுதலா—லென்னிறைவன்
பக்கமதில் நம்பி பரிவுறலாற் றென்மயிலை
மிக்ககுருங் காபுரியா மே. (121)

பெண்ணாகஞ் சேர்ந்ததனாற் புடபாற் கடலிசைவா
லென்னாளுங் கற்பகஞ் சேர்ந்தின்—மின்னாகம்
நீண்டாங் குறுங்குடியால் நித்தமயி லேசரென்னை
யாண்டா தரிக்குநம்பியு மாம். (122)

நாலுதிசை முகமு நண்ணுதலாற் பாரதியுங்
கோலமுறு பங்கங் குலவுதலால்—ஆலுமறை
யன்னங் கமல மடவாவி சூழுதலால்
மன்னுமயி லூர்பிரமா வாம். (123)

நாகமணி யென்றுலகோர் நாடவெயில் நல்குதலா
லேகனுக்குக் கண்ணென் றியம்புதலாற்—பாகமதிற்
பன்னிரண்டு செங்கரத்துப் பண்ணவனுங் காதலினா
லுன்னிரவி காண்மயிலாப் பூர். (124)

எட்டெட்டு வான்கலையா லிந்திரைக்கு மெய்த்துணையால்
வட்டநில வாகுமகிமையினா—லிட்டமுடன்
கற்பகஞ்சேர் நாகதலங் கண்ணுறலாற் கிந்திரனும்
பொற்புமிகு தென்மயிலாப் பூர். (125)

மருத நிலத்தார் மருவுசுக வாய்ப்பாற்
றருவிலுயர் கற்பகமுஞ் சார்பால்—லொருவெண்ணால்
தேவர் கபாலரென்றுஞ் சேர்தலினால் **விண்ணுலகம்**
பூவுலகின் மேல்மயிலாப் பூர். (126)

எட்டுநா கஞ்சூழ்ந் திடுதலாற் கற்பகமுங்
கிட்டலில்லா வெங்கோன்கைக் கேயிசைவால்—வட்டப்
புவனங்க ளுக்குயர்ந்த பொற்பால் **மாமேரு**
நவமயிலை யென்றுதின நாடு. (127)

சலக்கடலும் பாலிற் றழுவுதலால் நாகத்
திலக்குமிக்கு நாத னிசைவாற்—பலத்தாற்
றண்மயிலார் பாலில் சிறந்தவெண்மை சேர்பாற்
கண்மயிலை **யேபாற் கடல்.** (128)

ஆவி னிறைவா லயனும் விரும்புதலால்
மாவின் முகநாடி மருவுதலாற்—காவி
பயில்விழிப் பூம்பாவை பறிவுறலா லென்று
மயிலையிரு **தாமரைப்பூ** வாம். (129)

**பயன்.**

**மயிலையுவ மைவெண்பா** வாசிப்போர் கேட்போர்
பயிலுமிகச் சிந்தை பதிப்போர்—கயிலைமுத
லெல்லாத் தலமு மிறைஞ்சுதவப் பேறெய்தும்
வல்லார் சுகம்பெறு வார். (130)

**திருமயிலை உவமை வெண்பா முற்றும்.**

T. 1906

# திருமயிலை வெண்பா

# திருமயிலை வெண்பா.

## காப்பு.

சீர்மல்கு பூம்பாவைச் செல்வன் திருமயிலை
யூர்வெண்பா மாலைசொல வுன்னுவா—மேர்மலிபொற்
கார்முகத் தானைக் கனிக்குவலஞ் செய்நடனக்
கார்முகத் தானை கழல். (1)

## நால்வர் துதி.

சொல்லரசர் சம்பந்தர் சுந்தரனார் வாசகத்தின்
றொல்லரசர் தாண்முடியிற் சூடுவேன்—கல்லளித்த
தேன்மொழியாள் கேள்வன் திருமயிலை வெண்பாவை
நான்மொழியா நிற்க நயந்து. (2)

## நூல்.

கங்கை முடியோன் கயிலாய வெற்பினக
மங்கைக் கியம்பு மயிலையே—துங்க
வொளியா ரரியார்க் கொளிப்பா ரடியார்க்
கொளியா ரரியா ருழை. (1)

கள்ளமிலா வுள்ளத்துக் கற்புருவாம் வாசுகியார்
வள்ளுவரோ டும்வாழ் மயிலையே—புள்ளியுடைப்
புன்னாக மேயார் புயப்பரமர் பூமணக்கும்
புன்னாக மேயார் புரி. (2)

காக்கிற் சினங்காக்கக் காவாக்காற் கொல்லுமெனும்
வாக்கின்மிக் கோர்வாழ் மயிலையே—ஆக்குமயக்
கங்கரத்த ரத்தர் கணிச்சியார் கள்ளவினைக்
கங்கரத்த ரத்த ரகம். (3)

தோடுசெறி குழையார் சொன்றியளித் தாதுலர்க்கு
வாடுபசு தீர்க்கு மயிலையே—நீடுபுகழ்ச்
சங்கத் தவர்புலவோர் சாற்றரியார் மாமதுரைச்
சங்கத் தவர்புலவோர் சார்பு. (4)

சாற்று முருங்கைத் தருக்காய்கள் செங்கரும்பை
மாற்று சுவைகூர் மயிலையே—போற்றுகின்ற
வேதமொழி வாக்கினார் மெய்த்தொண்டர் தாமும்
வேதமொழி வாக்கினா ரில். (5)

இல்முன்றில் தோறு மிலக்கமிலாப் பூஞ்செடிகள்
மல்குசுக மிக்க மயிலையே—புல்குமலைக்
காரிகையா ரேற்றார் கடல்கடைந்த தேவருமெக்
காரிகையா ரேற்றார் கடை. (6)

ஆர்க்குங் கடலுப்புக் காய்ச்சியர்க ணெய்தயிர்பால்
வார்க்கும் வளஞ்சேர் மயிலையே—மார்க்கசகா
யப்பெருமான் பாணியர வஞ்சடைமேற் சூடுபெம்மான்
அப்பெருமான் பாணியர ணூர்வு. (7)

மான்விழியார் செந்துகிர்நேர் மட்கலம்பொன் மாரிபெறு
வான்வழிந்து செல்லு மயிலையே—மீன்விழியோர்
பாதத் திருத்திணூர் பாவியேன் தப்பிதமன்
பாதத் திருத்திண ரார்வு. (8)

கோயிலாத் தன்னெஞ்சங் கொண்டு சிவனிருக்க
வாயிலார் வாழு மயிலையே—தூய
சிலைமாதங் கத்தர் திருமாலங் கத்தர்
சிலைமாதங் கத்தர் செறிவு. (9)

காசிதிருக் காளத்தி காஞ்சிதிருத் தில்லையினும்
மாசிலிசை யாரு மயிலையே—ஆசில்
சடையனூர் மெய்ப்பொருளார் தாம்போற்றுந் திங்கட்
சடையனூர் மெய்ப்பொருளார் சார்பு. (10)

சங்கரபு ராணத்தைச் சார்ந்த வுருத்திரத்து
மங்கலமா யோது மயிலையே—தங்கும்
பரசினூர் வஞ்சியார் பண்பாளர் நாளும்
பரசினூர் வஞ்சியார் பற்று. (11)

மன்னுயிருஞ் சங்கரனு மானப் பலதலனும்
மன்னவை மேலா மயிலையே—பின்னியொளி
மாசடையார் கோபாலர் மன்புடையா ரின்புடையார்
மாசடையார் கோபாலர் வாழ்வு. (12)

போக முடன்மோக்கம் போகியுல கோர்பெறுவான்
மாக மிழியு மயிலையே—யோகர்
மிழலையார் மூர்த்தியார் மெய்யன்பிற் போற்று
மிழலையார் மூர்த்தியார் வீடு. (13)

ஆரா மருந்துண்ட அண்டர் பவமருந்தாய்
வாராச் சுகங்கூர் மயிலையே—யேரார்பொன்
அம்பரத்தார் தாமரையார்க் கண்ணுதா ராடகச்சிற்
றம்பரத்தார் தாமரையா ரார்வு. (14)

ஊழி யடைந்தெல்லாம் ஒன்றாய் மடிந்தாலும்
வாழி யழியா மயிலையே—காழியார்
காரியார் ஆரூரர் கஞ்சாறர் வாழ்த்துகண்டக்
காரியார் ஆரூரர் காப்பு. (15)

கூவிளந்தே மாப்புளிமாக் கொன்றையொளிர் சோலைகரு
மாவிளங்க வோங்கு மயிலையே—மாவினடிக்
க்ண்டங் கருமையார் கம்பர் கடல்விடஞ்சேர்
கண்டங் கருமையார் காப்பு. (16)

முப்பழத்தே ளொருசார் மொய்யெழிலி நீரொருசார்
மைப்பரவை சேரு மயிலையே—யொப்பிலாச்
செவ்விதழிக் கண்ணியார் தேவிகயற் கண்ணியாஞ்
செவ்விதழிக் கண்ணியார் சேர்வு. (17)

போற்றுகின்ற சத்திகங்கைப் புண்ணியநீ ரெப்பவமு
மாற்றுகின்ற சீர்சால் மயிலையே—சாற்றுமப்
பூதியார் வெண்காடர் போற்றும் பரமவி
பூதியார் வெண்காடர் பூ. (18)

நாதமற நற்போத நண்ணித்தற் போதம்போய்
வாதமறுத் தோர்வாழ் மயிலையே—சீதமதிக்
கங்கைத் தலையர் கமல மலர்பிரமன்
கங்கைத் தலையர் களிப்பு. (19)

தண்டாப் பவவெயிற்குத் தண்ணிழலைத் தந்துபுன்னை
வண்டால நிற்கு மயிலையே—பண்டேனும்
வெண்ணத்தன் போதன் விலங்குபட்சி யாய்த்தேட
வெண்ணத்தன் போதன் இடம். (20)

கைந்நின்ற சூலக்கங் காளி வடாதுதிசை
மன்னி யளிக்கு மயிலையே—துன்னிப்
பரஞ்சோதி யார்மூலர் பத்தியுடன் வாழ்த்தும்
பரஞ்சோதி யார்மூலர் பற்று. (21)

வேளாளர் மாமறைதேர் வேதியர்க டாடாளர்
வாளாளர் வாழு மயிலையே—யாளாக
வைகைக்கு வந்தார் மணந்தடுத்து வன்றொண்டர்
வைகைக்கு வந்தார் மனை. (22)

ஆதவரோர் கோடி யடர்ந்தொன்றாய்க் காலொளிபோல்
மாதவர்வாழ் சீர்சால் மயிலையே—பூதரமார்
மாதிடத்த ராரார் மதிலழித்தார் பொற்சிலைசேர்
மாதிடத்த ராரார் மனை. (23)

சத்துருவைக் கொள்வில் தகைசேர் வயிரவர்கை
வைத்துத் தரம்வாழ் மயிலையே—பத்தியுடன்
மாறன் செருத்துணையார் வாழ்த்துவார் மாமதுரை
மாறன் செருத்துணையார் வாழ்வு. (24)

காதங் கமழ்சோலைக் காழிக்கோ வெள்ளெலும்பை
மாதங்க மாக்கு மயிலையே—ஆதியுரு
வான்றன் பலவான் உமாபதியான் மால்பிரம
ரான்றன் பலவான் உறை. (25)

அந்தணர்க்குக் கோதானம் ஆற்றுவார் முத்தியெனும்
மந்தணத்தை மேவு மயிலையே—நிந்தையற்ற
சத்தி யிடங்கழியார் தாம்வணங்குந் தன்மையினர்
சத்தி யிடங்கழியார் சார்பு. (26)

வேலியா மெய்யன்பு மேவச் சிவபைங்கூழ்
வாலி விளைத்த மயிலையே—மூலசரக்
கொன்றையளித் தார்சூடுங் கோமானே யென்பார்க்குக்
கொன்றை யளித்தா ருறை. (27)

தண்பாற் கடலுறங்குஞ் சக்கரன்போல் வெண்மறையில்
வண்டார் தடஞ்சூழ் மயிலையே—அண்டிக்
கனநாத னீலகண்டன் கண்டுதொழும் பூத
கணநாத னீலகண்டன் காப்பு. (28)

காம வலைப்பட்ட கலிங்கமன்னன் வெம்பவமா
மாமலையைக் கெல்லு மயிலையே—தீமழுவார்
கைம்மா னுடுக்கையார் கண்ணுதலார் வெண்ணீற்றர்
கைம்மா னுடுக்கையார் காப்பு. (29)

ஆய்ந்தமனு வின்மதத்தி லைந்தெழுத்துஞ் சைவமும்பேர்
வாய்ந்ததலத் தோங்கு மயிலையே—யேய்ந்த
புகழ்த்துணையார் சீராளர் போற்றுவார் நாயகப்
புகழ்த்துணையார் சீராளர் பூ. (30)

புண்ணியர்கள் வாழிடமாய்ப் பூமா திருப்பிடமாய்
மண்ணிற் சிவஞ்சார் மயிலையே—நண்ணியையம்
ஏற்றார் மதியார் மதிலழித்தார் ஏறியவெள்
ஏற்றார் மதியார் இடம். (31)

எண்ணின் முனிகணங்கள் இன்படையக் கும்பமுனி
மண்ணில் வழுத்து மயிலையே—நண்ணுமன்பிற்
பூசலார் நேசனர் போற்றுவார் பார்த்தனுடன்
பூசலார் நேசனர் பூ. (32)

தூய்ய மதியணிந்தார் சோதிமய மாயிருந்து
வைய மளிக்கு மயிலையே—செய்யபதந்
தாமோ தரனர் தமக்கருள்வார் வேணிவழிந்
தாமோ தரனர் அகம். (33)

தீயூரங் கண்ணன் செலுபத்த வுமையாளோர்
மாயூர மாய்ச்சேர் மயிலையே—நேயூர்
பசுபதியார் பேயார் பரிந்திறைஞ்சு முக்கட்
பசுபதியார் பேயார் பதி. (34)

அங்க வணிக னலைமுழுகி மாமகத்தில்
மங்குங்கண மாற்று மயிலையே—பொங்குவிடப்
பாப்பணிவார் கோவா மணியனையார் பத்தர்களன்
பாப்பணிவார் கோவார் அகம். (35)

மைப்படியுங் கண்ணுள் மயிலாய்ப் பரவவருள்
மைப்படிகண் டன்வாழ் மயிலையே—யிப்படியிற்
றண்டியார் தாயனூர் தம்பாலன் பாரணையுந்
தண்டியார் தாயனூர் சார்பு. (36)

பாலிதீர்த் தங்கங்கை பாலிக்குஞ் சீர்சான்ற
வாலிதீர்த் தஞ்சேர் மயிலையே—காலுமொளி
அஞ்சக் கரத்தா னனவரத மும்பரவும்
அஞ்சக் கரத்தா னகம். (37)

சோமுகனூர் கையிற் றெடக்குண்ட துக்கமற
மாமறைகள் போற்று மயிலையே—ஆமழநாட்
டானுய னூர்சூதர்க் கன்றருள்வா ரென்பாலன்
பானுய னூர்சூதர் ஆர்வு. (38)

வேததீர்த் தஞ்சிறந்த வெள்ளிதீர்த் தம்பிறவி
வாதைதீர்த் தோங்கு மயிலையே—கோதில்
மலைவில்லார் தீயார் மனத்திரார் நெஞ்ச
மலைவில்லார் தீயார் அகம். (39)

சூர்முடிப்பான் செவ்வேட்டுச் சுந்தரவே லன்புடனே
வார்சடையார் தந்த மயிலையே—சீர்சால்
மறைஞான சம்பந்தர் வாழ்த்துவார் நான்கு
மறைஞான சம்பந்தர் வாழ்வு. (40)

சண்முகனூர் தீர்த்தஞ் சகலகலை ஞான
வண்மை யளிக்கு மயிலையே—உண்மை
அடியா ருழையார் அருந்தவர்க்காக் கல்லால்
அடியா ருழையார் அகம். (41)

சிங்கார வேலரெனு நாமஞ் சிவகுமரர்
மங்காது பெற்ற மயிலையே—யெங்கோ
அருணந்தி யார்வா னடைந்துய்வா னந்நாள்
அருணந்தி யார்வா னகம். (42)

வாலிதக் கன்சங்கன் வசிட்டனுல் வேதங்கள்
மாலுமால் போக்கு மயிலேயே—சூலப்
படையான் வலியான் பயங்கெடுத்தான் பூதப்
படையான் வலியான் பதி. (43)

பூங்கமலத் தண்ணல் புராந்தகன்பாற் பல்வரங்கள்
வாங்கவழி பட்ட மயிலேயே—ஓங்கும்
உமாபதியார் மெய்கண்டார் உன்னுங் கயற்கண்
உமாபதியார் மெய்கண்டார் ஊர். (44)

அத்திரிமார்க் கண்டனள னைவரலே மாதிலிங்கம்
வைத்து வணங்கு மயிலேயே—வித்தந்
தரும துரையாள் தடாதகையை வேட்ட
தரும துரையார் தலம். (45)

கண்ணிழந்த வெள்ளி கதியடைவான் முக்கணனே
வண்ணமுறப் போற்று மயிலேயே—நண்ணியுயர்
சேரமான் கோட்புலியார் தேர்ந்துதொழு வார்தரத்திற்
சேரமான் கோட்புலியார் சேர்வு. (46)

சாற்று மிராமதீர்த் தம்பிறவி நோய்தன்னே
மாற்றும் வளஞ்சால் மயிலேயே—ஏற்றுக்
கொடியார் மருவாருங் கொன்றையார் என்றுங்
கொடியார் மருவார் குடி. (47)

சங்கரனுர்க் கந்நாட் டசரதன்சே யுற்சவங்கள்
மங்கலமாய்ச் செய்த மயிலேயே—பொங்குமலர்க்
கண்ணப்ப ரப்பர் கருதுங் கழலர்முக்
கண்ணப்ப ரப்பர் களிப்பு. (48)

சொன்மலிசீ ராமன்சா முண்டிதுர்க்கை சுக்ரீவன்
மன்மதனும் போற்று மயிலேயே—பொன்னிரத
வாதியா ரூரானுர் மாதுலராய் ஞாதிகள்முன்
வாதியா ரூரானுர் வாழ்வு. (49)

பாண்டவர்கள் வேங்கைமுனி பௌமன்சு மாலியமன்
மாண்டபதம் பெற்ற மயிலேயே—ஆண்டவனுர்
ஆவா கனத்தர் அனைத்துலகுந் தம்வயமே
ஆவா கனத்தர் அகம். (50)

**சிலேடைகள்.**

ஊதும்பொற் கொல்லருட னேங்குமன்னர் வீதிகளும்
மாதங்க மேவு மயிலேயே—நீதர்
வள்மதலே மெய்யர் வனத்திருடி மாதர்
உள்மதலே மெய்யர் உறைவு. (51)

பொங்குங் கடலிடத்தும் பொய்யாத வாதிகட்கும்
வங்கம் பொன்மேவு மயிலையே—அங்க
மருத்தெரிய லார்வான் மலைத்தெரிவை யார்போல்
உருத்தெரிய லார்வான் உறைவு. (52)

காரார் புரிசையுங் காரிகையார் மார்பகமும்
வாராருஞ் சீர்சால் மயிலையே—ஏராருங்
கற்பகத்தை யற்பதியார் காளத்தி யார்கயிலை
வெற்பகத் தையர் விருப்பு. (53)

வீடுதொறு மாடங்கள் வீதியினுங் காட்டிடத்து
மாடு செறியு மயிலையே—நீடுபுகழ்
வேலவனை தந்தா வளமுகனை விண்டுமறை
நாலவனைத் தந்தார் நகர். (54)

ஓதும்பூங் காவனமு முள்ளமறப் பெற்றோரும்
வாதஞ் செறியு மயிலையே—சீதமதிக்
கீற்றினர் மாதரையார் கீர்த்தியினர் மெய்யன்பர்
போற்றினர் மாதரையார் பூ. (55)

போதஞ்சே ரத்தியுடன் பூவாத வத்திகளு
மாதங்காய் மன்னு மயிலையே—யோதியன்பர்
கூப்பிட்டார் வன்னியார் கூடலிலே வந்தியிட்ட
மாப்பிட்டார் வன்னியார் வாழ்வு. (56)

அம்புசெறி கண்ணா ரங்குயமுஞ் சோலைகளும்
வம்பு செறியு மயிலையே—கொம்புழுது
காப்பிட்ட கோலத்தார் கண்டறியார் கோதையைமுன்
கா்ப்பிட்ட கோலத்தார் சார்பு. (57)

மால்மகனைச் செழுங்கரும்பை மாதவரை மாமலரை
மாலை மணக்கும் மயிலையே—ஆலங்
குடியார் பணியார் புரம்பொடித்தார் கோலத்
துடியார் பணியார் தொடர்பு. (58)

மெச்சும்பொன் வாணிபரு மெல்லியர்கண் ணுந்தடமு
மச்சங் கலக்கு மயிலையே—யெச்சன்
தலையரிந்தா ரம்புலியார் மெய்யரிந்தார் தாவுங்
கலையரிந்தா ரம்புலியார் காப்பு. (59)

சுந்தரஞ்சேர் வீதியினுஞ் சொன்மறையோர் நாவினிலு
மந்தரங்கள் மன்னு மயிலையே—அந்தரஞ்சேர்
பொன்னம் பலவன் புலவர்க்கு மெட்டாத
வன்னம் பலவன் மகிழ்வு. (60)

காவலர்கள் கூவுங் கருங்குயில்கள் பூவையர்கள்
மாவிளங்குஞ் சீரார் மயிலையே—தாவின்மெய்
ஞானஞ் சுவைத்தார்க்கு நற்றந்தை கண்டத்
தானஞ் சுவைத்தார் செறிவு. (61)

கோதில் கொடைப்புகழுங் கோவேந்தர் சேனைகளும்
மாதிரங்கள் மன்னு மயிலையே—பாதிமதி
நக்கரவப் பணியார் நாடாச் சிவபெருமான்
நக்கரவப் பணியா ரார்வு. (62)

வஞ்சப் பகைமுடிப்போர் வாலிபர்கள் பாவாணர்
வஞ்சி மணக்கு மயிலையே—பிஞ்சுமதி
வேணியினர் ஆற்றூர் விறலழித்தார் வாசுகியாம்
நாணியினர் ஆற்றூர் நகர். (63)

பட்டமன்னர் கையினிலும் பண்டியிலுங் கேணியிலும்
வட்டந் திகழு மயிலையே—முட்டில்
திரியம் பகனர் சிவனர் பரனர்
அரியம் பகனர் அகம். (64)

மண்டும் விரகமினர் மாதவர்பூ வைங்கணைவேள்
வண்டு நெகிழ்க்கு மயிலையே—தொண்டர்க்
கெளியா ரளியா ரிதழியார் தில்லை
வெளியா ரளியார் விருப்பு. (65)

மாகஞ் செறிசோலை மன்னவர்கள் மாதவர்கள்
வாகை தழைக்கு மயிலையே—ஆகத்துப்
பேதையான் வாரணத்தா னரணத்தான் பேசரிய
மேதையான் வாரணத்தான் வீடு. (66)

ஆசில் கலிமாவு மாவணமுங் காவலரும்
வாசஞ் சிறக்கும் மயிலையே—தாசனுக்கா
வீசு பதத்தான் மனைவீத்தார் நரர்க்கருளும்
பாசு பதத்தார் பதி. (67)

ஓடை மலரிடத்து முத்தியா னத்தெங்கும்
வாடை மலியு மயிலையே—தோடுசெறி
கஞ்சா சனத்தார் கருதரியார் கருத்தெழுந்த
நஞ்சா சனத்தார் நகர். (68)

காலூருஞ் சோலைகளுங் கம்பமத யானைகளும்
மாலூர மன்னு மயிலையே—மேலூரும்
பாகீ ரதிப்பிரியார் பண்டுவைத வன்றொண்டர்
மாகீ ரதிப்பிரியார் வாழ்வு. (69)

ஆசில் புகழ்வேந்த ராவத்துஞ் சேனையினும்
வாசி மருவு மயிலையே—பேசுசைவ
வேதா கமவித்தார் மீனவன்போர் வீரர்க்கு
மாதா கமவித்தார் வாழ்வு. (70)

ஏருழவர் வாரிதிநீர் இல்வாழ்வார் சீரார
வாரஞ் செலுத்து மயிலையே—சூரியவேற்
காமாட்சி யைமணந்தார் காஞ்சியிலே மாவடியிற்
ருமாட்சி யைமணந்தார் சார்பு. (71)

ஆர மணிவளத்தை யங்கங்குந் தானியத்தை
வாரி வழங்கு மயிலையே—ஓரிப்
பரிசெய்தார் மாண்டா ரெலும்பைப் பரித்துங்
கரிசெய்தார் மாண்டார் களிப்பு. (72)

ஆண்டாண்டெண் ணீரரசர் மார்பகமன் னம்பசிக்கு
மாண்டார்பெற் றோங்கு மயிலையே—சேண்டாவும்
வெற்புத் தனுவினர் விண்ணெடண்ட மெல்லாந்தம்
பொற்புத் தனுவினர்பூ. (73)

பேழை யிலந்தோறும் பெண்டுகளுய் யானனங்கள்
மாழை மலியு மயிலையே—ஊழைமார்க்
கண்டனுக்குப் பக்கத் தரங்கண்டார் கண்பறித்த
தொண்டனுக்குப் பக்கத்தர் தோய்வு. (74)

சுந்தரங்கூ ராய்ச்சியர்க்குச் சோலைத் துருமம்
மந்தரஞ் சேரு மயிலையே—இந்தாரம்
பூண்டா ரிருந்தா ரிதழியார் பொற்கூடல்
ஆண்டா ரிருந்தா ரகம். (75)

## வேறு.

நாகமுற்று நற்குகனை நண்ணிச் சேர்த்தருளி
வாகையிரா மன்மான் மயிலையே—ஆகத்
துருக்குற்ற மணவனு ருள்ளத்த ரங்கித்
திருக்குற்ற மணவனுர் சேர்வு. (76)

வெண்புரியுந் தண்புனலு மேவிக் கதிர்மணியும்
வண்ணிறச்செய் மானேர் மயிலையே—எண்ணி
முருக்கோட்ட மேயார் முத்துமைசேர் தெய்வ
திருக்கோட்ட மேயார் செறிவு. (77)

தாமரையுந் தண்ணீருஞ் சார்ந்தநற் பொய்கையும்
மாமதிய நேரா மயிலையே—காமதுரைச்
சித்தர் களங்கறுப்பார் செஞ்சடையார் முத்தி
வித்தர் களங்கறுப்பார் வீடு. (78)

தண்டந் தனைக்கொண்டு சக்காப்பே ருற்றரியை
மண்டலிகர் மானு மயிலையே—இண்டைமலர்
சூடினர் பாடினர் சொன்மறைக ளம்பலத்தில்
ஆடினர் பாடினர் ஆர்வு. (79)

பாண்டரங்கன் றன்கண்ணுய்ப் பார்மீ திரவொழித்து
மாண்டிரவி நேரா மயிலையே—பாண்டவர்கள்
பூசித்துப் போற்றினர் போனகமெய்த் தொண்டர்க்கா
யாசித்துப் போற்றினு ரார்வு. (80)

சங்காழி மேவிச் சதுமுகனைத் தானளித்து
மங்காத் திருமால் மயிலையே—கங்காளர்
விண்டங் கரியார்நால் வேத ரறிவறியார்
கண்டங் கரியார் களிப்பு. (81)

வேதமளித் தஞ்சக் கரம்விளங்கி வேதாவாய்
மாதரையிற் சீர்சால் மயிலையே—சீதவொளிச்
சோமன் றனைமுடித்தார் சோதிக்கண் ணலந்நாள்
காமன் றனைமுடித்தார் காப்பு. (82)

தண்மதியம் பூண்டுசரக் கொன்றைமலர் சார்ந்தவன
வண்ணப்பூங் காநேர் மயிலையே—கண்ணுதலான்
சீலம் பெரியானுன் மாமதிவெய் யோன்சேண்மண்
காலம் பெரியானுன் காப்பு. (83)

அஞ்சுகைபூண் டாடுகையா லங்கனையார் மூத்தசிவ
மஞ்சனையே மானு மயிலையே—பிஞ்சுமதிக்
கங்கா தரனுர் கடையே னிடையென்று
மிங்கா தரனு ரிடம். (84)

வேலையடுத் தாறுதலை மேவிக் கடப்பமலர்
மாலைவே ளொக்கு மயிலையே—ஆலமுண்ட
அஞ்சுகந்தங் கொன்று ரகத்தன்றி மூவருக்கு
நெஞ்சுகந்தங் கொன்றுர் நிலம். (85)

பூமேற் பொலிந்திருந்து பொன்வண்ணப் பேர்மேல்
மாமானுஞ் சீர்சால் மயிலையே—காமாரி
கூரம்பெய் தானன்று கூடலின்மா றன்படைக்கு
நாரம்பெய் தானன் னகர். (86)

பன்னும் பொதியிருந்து பைந்தமிழ்மா தைப்பயந்து
மன்னுகும்ப னேரா மயிலையே—முன்மலர்க்கை
மாதாவைத் தார மருவினுன் புன்றலையின்
மீதாவைத் தாரமரும் வீடு. (87)

பொன்னனையா ளுய்ந்திடலாற் பொற்கஞ்சச் சங்கத்தான்
மன்னு மதுரை மயிலையே—பன்னும்
மறைவனத்தான் பாலா வடுதுறையான் மன்னு
மிறைவனத்தான் பாலா னிடம். (88)

பொன்னு லயமாய்ப் புகழ்ப்பரவை யாரிடமாய்
மன்னுரூர் மானு மயிலையே—முன்னுளோர்
நாகமெய் தார்கூடார் ஞாயிலெய் தார்தீயார்
ஆகமெய் தார்கூடார் ஆர்வு. (89)

வானவிடை யோங்குதலால் வண்பன்முத் தாற்கமுக
மானனையா ரொக்கு மயிலையே—தேனனையார்
வேயனையார் குன்று முலையுமையை வோட்டாரெந்
தாயனையார் குன்றுர் தலம். (90)

போதகத்தாற் சாதகத்தாற் பொய்யாநீ ராற்பொய்கை
மாதவரை மானு மயிலையே—மாதுமையைப்
பாலரிற வாரிதழிப் பாகீ ரதியைமுடி
மேல ரிறவார் விருப்பு. (91)

பன்னுமா சாரமுடன் செய்யுட் பயில்புலவோர்
மன்னுகழை நேரா மயிலையே—முன்னமொரு
தாயுமா னூர்வீடார் தாணுவா னூர்மாலாம்
பாயுமா னூர்வீடார் பற்று. (92)

வெண்முத்தாற் பாகதனால் வேழப்பே ராற்கழைகள்
வண்மத்த மாவா மயிலையே—திண்மைசெறி
வேய்முத்தர் கண்டா மொழியுமையார் மெய்யா
ஆய்முத்தர் கண்டார் அகம். (93)

வெண்மைசெம்மைப் பல்லிதழ்கண் மேவுதலாற் கஞ்சமின்னார்
வண்ணமுக நேரா மயிலையே—ஒண்கரகக்
கையா னனத்தான் கழுகுபன்றி யாய்த்தேடு
மையா னனத்தான் அகம். (94)

ஈசற்குக் கண்மலரை யீந்துவளை கொண்மால்
வாசக்கர மானு மயிலையே—நேசற்குத்
தூதமைந்தார் தோலா நடமரங்கித் தோயமண்விண்
வோதமைந்தார் தோலார் மனை. (95)

கைவளையார் சக்கரத்தாற் காலாழி யான்மாயன்
மைவிழியார் நேரா மயிலையே—கைவிரவும்
போதகத்தார் போதகத்தான் காணுதார் புன்னைநிழற்
சாதகத்தார் போதகத்தார் சார்பு (96)

பண்ணுமத்தி மாவரசாற் பாயுமம்பு வேலாற்கா
மன்னுபடை நேரார் மயிலையே—துன்னிநின்பாற்
சம்பந்த மாற்றினன் தாடொழுதோ மென்பார்தம்
வெம்பந்த மாற்றினன் வீடு. (97)

மைப்படிந்த கண்ட மதியணிந்தார் நேர்முந்நீர்
வைப்பிருந்த சீர்சால் மயிலையே—துப்பிருந்த
செஞ்சடையா ரையர் சிவனென்னார் கல்லுறழு
நெஞ்சடையா ரையர் நிலம். (98)

வானிலவங் கற்பகத்தாற் றேனுவான் மானிலத்தில்
வானுலக மானு மயிலையே—கூனிலவுந்
தேய்ஞ்ச மதியார் திருநீ றிடார்க்கருளத்
தாஞ்ச மதியார் தலம். (99)

பொய்யா மொழியார் புகழாற் புராரியருள்
வையா புரிவேள் மயிலையே—நையாக்
கயிலை யிடத்தான் கடியவிழ்பூங் கோதை
மயிலை யிடத்தான் மனை. (100)

**திருமயிலை வெண்பா முற்றும்.**

T. 1906

# திருமயிலைக் கோவை.

## பிற்சேர்க்கை 1.

### பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்று என்றல்.

வலிபகை வென்றருள் சிங்கார வேலர் மயிலைவெற்பில்
பலியன னூட்டி மறையவர் மேதையர் பாங்குரைப்ப
மலிமல ரோதியை யானெம தூரின் மணந்ததனைச்
சொலிமகிழ் கூர்தரச் செய்வாய் நுமர்க்குச் சுடர்த்தொடியே. (373)

### தானது முன்னே சாற்றினே னென்றல்.

வம்மி னெனவருள் சிங்கார வேலர் மணிமயிலை
இம்மின் மலரடி மன்னவ நின்கை யிணைபிடிக்க
அம்மி மிதித்தங் கருந்ததி பார்த்துநெய் யாகுதிவேட்
டும்மின் மணந்ததை யன்னைக்கு நான்முன் னுரைத்தனனே.
(374)

### தன்மனை வரைதல் முற்றும்.

---

### உடன்போக்கிடையீடு நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செல வுணர்த்தல்.

திலகந் திகழ்நுதற் சிங்கார வேலர் திருமயிலை
உலகம் புகச்செலு முத்தம ரேயென் னுயிர்க்குயிரே
மலகம் பயில்விழி யாருக் குரைப்பிரிந் தண்ணல்பின்னே
கலகம் பயில்சுரம் யான்செல்லு மாறு கருத்துறவே. (375)

### தலைவி, தன்செல வீன்றாட் குணர்த்தி விடுத்தல்.

வளமை மயிலைப் பரன்பூசை செய்து மணிநெடுவேல்
இளமையின் வாங்கிய சிங்கார வேல னெழில்வரைக்கோ
வளமை விழியன்னை பாலோதும் பாலை வழிச்செலவைக்
களமைக் கமைந்த சிவனுக மங்கவர் கண்டவரே. (376)

### ஈன்றாட் கந்தணர் மொழிதல்.

பொற்பூண் புயத்தினன் சிங்கார வேலன் புகழ்மயிலை
விற்பூ னுதலியின் மெல்லியல் வில்லியல் வேந்தனொடு
நற்பூ வெனச்சுரஞ் சென்று ளிரங்கி நலிவதென்னே
கற்போ கணவன் தருங்கனி வோசென்ற காரணமே. (377)

**தமர்பின் சென்ற (வலத்) தலைவிகண் டுரைத்தது.**

கலைமா மறைய ரிச்சித்த மயிலையன் கார்த்திகைப்பால்
முலைமாரி யுண்டருள் சிங்கார வேலவர் மொய்வரைமேல்
த்லைமா மததந்தி யைத்துடர் வார்திற் றலைவனை நீள்
சிலைமாரி வீசித் தொடர்ந்தா ரெமரமர் செய்வதற்கே. (378)

**தலைவன் தலைவினுய் விடுத்தல்.**

தடாத்தமர் சூரோடு நாளாறு தாக்கிவிண் சாரமரர்
கெடாதினிக் காண்டருள் சிங்கார வேலர் கிளர்மயிலை
விடாதுனை மங்கையெ திர்ந்துசங் கிராமம் விளைந்தன்னோர்
கொடார்புறம் விவர்நும ரஞ்சி னேன்செலக் கோநகர்க்கே. (379)

**தமருடன் செல்பவள் அவன்புறம் நோக்கிக் கவன்ருற்றல்.**

மறுவோ தரிய முழுமதி யானனன் மாமயிலை
பெறுவோர் தமக்கருள் சிங்கார வேலர் பிறங்கலின்வாழ்
கறுவோதை வெஞ்சொ லெமர்நோவு மென்னைக் காத்திகலா
துறுவோர் மனத்தினுஞ் செல்கவன் கால்வைய மும்விரைந்தே.
(380)

**உடன்போக்கிடையீடு முற்றும்.**

**களவியல் முற்றும்.**

---

# கற்பியல்.

## இல்வாழ்க்கை.

**தலைவன் அந்தணர் சான்றேர் முன்னிட் டருங்கலந் தந்து மணம் பேசல்.**

பொன்னணி மாமணிப் பூண்கள்முத் தாரம் புலன்கலைக
ணின்னன வந்தணர் சான்றேரை முன்னிட் டினிதுதந்து
மன்னவர் போற்றிய சிங்கார வேலர் மயிலைநண்பன்
மின்னனை யாடமர் பான்மணம் பேச விடுத்தனனே. (381)

**தலைவன் வரைதல்.**

மல்லிகை மாலையன் சிங்கார வேலன் மயிலையெங்கும்
நல்லிய மார்ப்ப மனைதொறு மங்கல நண்ணவண்ணச்
சொல்லிய வந்தணர் வாழ்த்தமெய்த் தானத் துறைமலிய
வல்லியை மங்கல நாண்டேடி வேட்டனர் மன்னவரே. (382)

**தலைவன் வரைந்துழிக் கண்டோர் மகிழ்ச்சி.**

வாணிய யன்மகிழ் சிங்கார வேலர் மயிலைவெற்பில்
ஆணி லழகனைப் பெண்ணி லழகியை யாய்ந்தெழுதிக்
காணி லெவரு மிவரே மணமுமக் காட்சியதே
பேணி யுரைத்திடு நாமேகண் காட்சியைப் பெற்றவரே. (383)

**தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.**

தனக்கிணை தானுற்ற சிங்கார வேலர் தடமயிலை
மனத்துணை யாகி மறைபிறர் காணு வகைசெயலாற்
கனக்கருங் கூந்தலை யான்மணஞ் செய்திந்தக் காசினிமேல்
எனக்கிணை யாரென் றிருந்தேனில் வாழக்கையி னேந்திழையே.
(384)

---

T. 1906

## பிற்சேர்க்கை 2.

**..ிருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு தலைமகன் மகிழ்தல்.**

கதிரா லருளிய சிங்கார வேலர் கவின்மயிலை
மதிமா னிவள்வெகு ளாமையும் போற்று மனைவளர்சந்
ததிபா லுணவரு நேயமும் பாடிய தானுமென
தெதிர்காண் வகைவிருந் தாகிவந் தெய்திய தென்றெய்வமே.
(417)

**தலைவன் புதல்வனைக் காண்டல்.**

நலம்பகர் தேசிகன் சிங்கார வேல னயமயிலை
நிலம்பல தானப் பொருளா நிறையவு நீர்மறையோர்
குலம்பயில் கைமல ரேறவும் வன்னிக் கொழுஞ்சுடர்நெய்ப்
பலம்பலி யுண்ணவும் வந்தெடுத் தானண்ணல் பாலனையே. (418)

**பாங்கி தலைவி மகப்பொறை கூர்ந்தவண்ண முரைத்தல்.**

மறுத்தவர் சோதிமெய்ச் சிங்கார வேலர் மயிலைவெற்பா
கறுத்ததோ ரங்கம் பெருத்தது மைந்தன் றிருவயிற்றில்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
உறத்தக வந்தவ னதென்றுமுன் னுசை யொருதன்மையே. (419)

**பள்ளியினமுங்கல்.**

சேலணை தண்பணை சூழ்மயி லாபுரித் தேவைமயில்
மேலனை வீரனைச் சிங்கார வேலனை வேண்டிலர்போல்
மாலனை யீந்த மலரணை சேர மலரணையின்
பாலணை மெய்யயர் மாலா னவன்பெறல் பாங்கல்லவே. (420)

### சேறேலென்றவள் சேறடி தொழுதல்.

பாடி மயிலையிற் சிங்கார வேலர்ப் பணிஇலர்போல்
நாடிமெய்ப் போர்த்த கலைநீக்கி நோக்கி நகைத்தணைத்தும்
ஊடி யகல வடிமுடி யூடுவைத் தூரன்மனம்
வாடி வணங்க நெடிதுயிர்த் தாள்விழி மாரிபெய்தே. (421)

### இஃது எங்கையர் காணின் நன்றன்றென்றல்.

தோடக மாலையன் சிங்கார வேலன் துதிமயிலை
நாடக வாழ்க்கையி லெங்கேனுந் தம்மனை நாயகிதன்
பாடக மெல்லடி யாடவர் போற்றிப் பணிவதுண்டோ
சூடக வங்கைய ரெங்கையர் காணிற் றுரிசுடைத்தே. (422)

### நின்னல தங்கவர் யாரையு மறியே னென்றல்.

தேமல நீயதி லூறிய தேனுகர் தேனளியே
நாமிது வன்றி யிலையிலை தும்பி யருந்திடுமோ
யேமுறு நானடி தாழ்ந்து மிரங்கிலை யீதழகோ
மாமல ராள்புகழ் சிங்கார வேலர் மயிலைமின்னே. (423)

### காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

காணிக்கை யிட்டு மகுடா திபர்பணி கம்பமதில்
மாணிக்க வாலயன் சிங்கார வேலன் மயிலைநண்பா
நாணிக் கவிழ்ந்து நிலங்கிளை யாவொரு நங்கைமகற்
பேணிக் கடைத்தலை நின்று ளுரிமைகள் பேசினனே. (424)

### தலைவியைப் பாங்கி பு(க)லவி தணித்தல்.

மள்ளர்க் கடல்புரி சிங்கார வேலர் மயிலையொப்பாய்
உள்ளத் தறிவு புலன்வழி யோடிப்பி னுள்ளமுற்றால்
தள்ளக் கருதுவ துண்டோ வுளமந்தத் தன்மையைப்போற்
கொள்ளக் கடவது கற்பாற் கணவர் குறைபொறுத்தே. (425)

### தணியாளாகத் தலைமக னூடல்.

தாழ்ந்தா லிரவி புவிநீளு நீழற் றலையில் வந்தால்
வாழ்ந்தே யடியு ளடங்குமந் நீழலொப் பாகுமன்பா
சூழ்ந்தேசெய் செய்கையு மானூர் வெகுளியுஞ் சொல்லிலென்னுள்
வாழ்ந்தான் மயிலையிற் சிங்கார வேலர் வரையிடத்தே. (426)

### அன்பிலை கொடியையென் றிணர்த்தார் மார்பனை இகழ்தல்.

வாடலின் றுமலர் சிங்கார வேலர் மயிலைநண்பா
ஆடலும் பாடலுஞ் செய்வார் வெகுளி னவரடியை
சூடலுங் கூடுந் துதித்தலுங் கூடுந் துணையுயிராந்
தேடருந் தேன்மொழி பால்வெகுண் டேடல் சிறப்புனக்கே. (427)

### காமக்கிழத்தி வாயில் வேண்டல்.

மாமற்கு வாழ்வருள் சிங்கார வேலர் மயிலைவெற்பிற்
காமக் கமைந்தவென் போல்வார்க் கிதுதகுங் கற்பமைந்த
வாமக் குலக்கொடி காய்கனி யாஞ்சொலும் வாறதென்னே
தாமப் புயத்தன்பர் செய்யா தனவில்லை தாழ்ந்துநின்றே. (428)

### பாங்கி வாயினேர்வித்தல்.

நீரோட நோக்க நிறம்பசப் பூர நிமிர்ந்தகொங்கை
பீரோட வீன்ற புதல்வனும் வாடப் பெரும்புலவி
வேரோட வூடல் முறையோ விரங்குக வெஞ்சமஞ்செய்
வாரோட வென்றவன் சிங்கார வேலன் மயிலைமின்னே. (429)

### ஆயிழை மைந்தனு மாற்றுமையும் வாயிலாக வரவெதிர் கொள்ளல்.

சூளைப் பிரிக்கக் கரும்பாறை விட்டுறத் தோன்றல்வல்லே
காளை வரச்செய் தனனிளைப் பாரக் கருதிவேறூர்
நாளை யடுப்பைப் பிரியாம லாக்கினை நல்லன்னமே
வேளை மயிலையிற் சிங்கார வேலனை வேண்டிநின்றே. (430)

### தலைவி புதல்வனைப் புகழ்தல்.

பெருமைக் குருபுத் திரனிரு ராமர்முன் பெற்றவருக்
கொருமைப் புதல்வர்க ளாகியுந் துன்ப முதவினரால்
அருமைப் புதல்வ னிவனெமக் கென்றுமின் பாதல்செய்தான்
வருமைப் புறத்திவர் சிங்கார வேலர் மயிலையுள்ளே. (431)

### தலைவி தலைவனைப் புகழ்தல்.

கூறுங் கொடுமை பலவும் பொறுத்துக் குணமெனக்கு
தேறும் படியெந்த நாளும் புரிந்து சிறப்பருளி
ஊறுங் கனிவருள் சிங்கார வேல ருவர்மயிலைப்
பேறுங் கொடுத்தனர் நங்கா தலரன்பு பேசரிதே. (432)

### பாங்கி தலைவியைப் புகழ்தல்.

களவிற் குறியிடை யீடும் பிரிவொடு கௌவையும்போ
மளவிற் பெருகிய வாட்டமுங் கற்பி லயலொழுக்கும்
வளவிற் கரத்தினன் சிங்கார வேலன் மயிலைவெற்பில்
உளவிற் பனமின் பொறுத்தன பாங்கி லுயர்ந்தனனே. (433)

---

## கல்விப் பிரிவு.

### தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

காரா மணியுந் துவரையுங் கொள்ளுங் கடலையடுத்
தோரா மயிலையிற் சிங்கார வேல னியம்புமெய்நூற்
சீரார் பயோததிப் பான்மதி மந்தரஞ் சேர்த்துமதித்
தாரா வமுதுகா ணுண்டார்கண் டாரின்ப மாரணங்கே. (434)

### தலைவனைப் பாங்கி விலக்கல்.

தேருங் கலைசென்று தேர்வே னெனுஞ்சொல் செவியுறுமுன்
நாருஞ் சொல்வல்ல வேதங் கரைகண் டனனளியேன்
சேருங் கருணையன் சிங்கார வேலன் றிருமயிலை
ஊரும் புரவறி வாகாசென் றெங்ங னேதுவதே. (435)

### தலைவன் பாங்கியை உடன்படுத்தல்.

இற்கா தலியியற் சொற்கா தலியென் றிருவர்மின்னு
நற்கா தலர்க்குளர் செந்தேன் மனைவியை நம்புமுன்னால்
அற்காத கல்விமின் னுள்சேர் வுஞ்செய் யணிமயிலைப்
பொற்காண் மலர்த்துணைச் சிங்கார வேலர் பொருப்பணங்கே. (436)

### பாங்கியுடன்படுதல்.

ஒருபிறப் போதிய கல்வி யெழுமையு முற்றுதவுந்
தருபிறப் பூதிய மென்றுலென் செய்வது தக்கமறை
இருபிறப் பாளர் பயில்பெரு வேள்வி யியன்மயிலை
வருபிறப் பார்க்கருள் சிங்கார வேலர் வரையண்ணலே. (437)

### பாங்கி தலைவிக் கறிவுறுத்தல்.

மல்லற் சரவணச் சிங்கார வேலர் மயிலையன்பன்
சொல்லச் சிறந்தமெய்ப் **பூம்பாவை வேலப்பன்** சொற்புதல்வன்
செல்வக் குமர குருநாத பூபதி தேர்வதுபோல்
கல்விப் பொருள்முற்றுந் தேர்ந்துசெல் வார்நண்பர் காதலியே.
(438)

### கார்ப் பருவங் கண்டு தலைவி மருங்கல்.

அம்புஞ் சிலையும் பிடித்துமின் வாள்விதிர்த் தார்த்துமுகில்
பம்பும் பொழுதிது காயம் படாதளிப் பாரெவர்காண்
நம்புங் கருணையர் சிங்கார வேலர்புன் னுகமலர்க்
கொம்புந் தராளந் தருமயி லாபுரிக் கோகிலமே. (439)

### பாங்கி யாற்றுவித்தல்.

செய்யாடன் மால்பணி சிங்கார வேலர் திருமயிலைப்
பையாடு நாகம் பிடித்தாட மஞ்ஞை படர்விசும்பின்.
மையாடன் நோக்கி வருவார் மையாடன் மகிழ்ந்துசென்றார்
பொய்யா டலர்முகின் மின்னுக்குத் தீங்கு புரிவதின்றே. (440)

## காவற் பிரிவு.

### தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

பூவலை யத்துப் புறப்பகை யுட்பகை போக்கியருட்
காவலைச் செய்வதற் கேகுவன் வென்றிசெய் காற்படையாம்
சேவலைக் கொண்டவன் சிங்கார வேலன் திருமயிலைக்
கூவலைக் கொண்ட குயில்போலுந் தேமொழிக் கோமளமே. (441)

### பாங்கி தலைவிக் கறிவுறுத்தல்.

முறைவேண்டி னுருங் குறைவேண்டி னுரு முகம்பெறமெய்த்
துறைவேண்டு நல்லற மோங்கிட வாருயிர் துன்பகல
நிறைவேண்டு நாடு புரப்பான்சென் றுரன்பர் நீண்மயிலைப்
பொறைவேண்டு சிந்தையன் சிங்கார வேலன் பொருப்பணங்கே.
(442)

### தலைவி கூதிர்ப் பருவங் கண்டு மயங்கல்.

வாடை துருத்தி யுடலுலை காமம் வளருமனல்
மாடை யுயிரென நின்றே யுருகி மயங்குகின்ற
சோடை யறிந்திலர் பேடையுஞ் சேவலுந் தோய்வதுநீர்
ஓடை மயிலையிற் சிங்கார வேலவ னுரன்பரே. (443)

### பாங்கி யாற்றுவித்தல்.

நாடெங்கும் வாழ விடரெட்டு நீக்கி நலனளித்துத்
தோடொன்று மாலை மலிமார்பர் வந்தனர் சூழ்வரைமேல்
ஏடென்றும் வாழ்த்தும் மயிலா புரிவள்ளல் வேள்விவந்த
வாடென்று மேறிய சிங்கார வேலர்வெற் பாரணங்கே. (444)

---

## தூதிற் பிரிவு.

### தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

கையானை மாவினம் பண்விடத் தோனிலை காணவைவேல்
நொய்யார வாய்தற் கதவந் திறந்திட நேருமன்னர்
மொய்யார யான்செல்வன் சிங்கார வேலர் மொழிமயிலை
மையாடு கண்ணியை யாற்றுதி தேற்றுதி மாணிழையே. (445)

### பாங்கி தலைவிக் கறிவுறுத்தல்.

முருந்தமர் மூர லணங்கே யிருமன்னர் முண்டுபன்னுள்
வருந்தமர் தீர்த்து வரவேகி னுரன்பர் வாடிலையேல்
திருந்தம ரேசுரன் சிங்கார வேலவன் சீரடியார்க்
கருந்தமர் தாய்தந்தை யானேன் மயிலை யணிவரைக்கே. (446)

**முன்பனிப் பருவங்கண்டு தலைவி மயங்கல்.**

தனித்தவம் பூண்ட முனிவோருந் தம்முழந் தாளணைத்துக்
குனித்துடல் வாடிக் கிடக்கும் பனியினிற் கூடலின்றி
இனித்தினம் போக்குவ தெவ்வாறு காவல ரெய்திலரால்
மனித்தரன் பாற்பணி சிங்கார வேலர் மயிலைமின்னே. (447)

**பாங்கி யாற்றுவித்தல்.**

அந்தணர ரானின மூத்தோர் மடந்தையர்க் கச்சமின்றி
வந்தனர் தங்கள் பதிதோறு மாதலின் மாமயிலைக்
கந்தனைச் சேந்தனைச் சிங்கார வேலனைக் கார்த்திகையார்
மைந்தனைப் போற்றனப ரெய்தினர் தூது வகுத்துரைத்தே. (448)

---

## துணைவயிற் பிரிவு.

**துணைவயிற் பிரிவு தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.**

சிலைவஞ்ச நெஞ்ச வசுரேசர் யாருஞ் சிதையவென்றோன்
மலைவஞ்சி கொஞ்சிய சிங்கார வேலன் மயிலை நங்காய்
தொலைவஞ்சி நொச்சி மதிண்மன்னர் சூடத் துணைவருக்காய்த்
தலைவஞ்சி சூடின னீயிடை வஞ்சிக்குச் சாற்றுகவே (449)

**பாங்கி தலைவிக் கறிவுறுத்தல்.**

மருமலை யாண்மகன் சிங்கார வேலன் மயிலைவெற்பிற்
பொருமலை யானனம் போலிடை வார்குழற் பூங்கொடியே
தருமலை யார்பட நான்குடன் சூழத் தலைவர்சென்றார்
செருமலை யாநின்ற வேந்தர்தம் போர்த்துணை செப்புதற்கே.
(450)

**பின்பனிப் பருவங்கண்டு தலைவி மயங்கல்.**

முடுகிய மஞ்ஞையை யூர்ந்தரு ளாறு முகன்மயிலைத்
தொடுகுழை நீள்செவிச் சிங்கார வேலர்த் தொழாரெனவே
கடுகிய பின்பனிக் காலமென் ஞர்பனிக் காலமென்றல்
இடுகுறி யேனும் பிரிந்தாருக் கின்ன விடுகுறியே. (451)

**பாங்கி யாற்றுவித்தல்.**

தளபங் கயந்திரு மாமனை யாகுந் தடமயிலை
யுளபன் னிருபுயன் சிங்கார வேலவ ஞேங்கன்மின்னே
களபம் புனைபுனை மெய்யணி மையணி கார்விழிக்கு
வளபன் மலைமன்னர் வந்தார் துணைமன்னர் வாழ்த்துடனே.
(452)

## பொருள்வயிற் பிரிவு.

### தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

என்னத்த ஞனவன் சிங்கார வேல னெழின்மயிலை
வன்னத் தனத்துணை மார்புறச் சேர்ந்து மரலணைமேற்
சொன்னத்தை யான்மற வேனெனப் பொன்னிறந் தோன்றி [வெம்பும்
அன்னத்தை யாற்றுதி யானுசை கொண்டிங் கணைகுவனே. (453)

### பொருள்வயிற் பிரிவு பாங்கி மறுத்தல்.

கட்டிட்ட செச்சையன் சிங்கார வேலன் கவின்மயிலைப்
பொட்டிட்ட வாணுத லாளைப் பிரிந்து போர்க்ககல்வாய்
முட்டிட்ட குண்டரை வென்றருள் சம்பந்த மூர்த்திசொன்ன
மட்டிட்ட புன்னைத் தமிழ்போற் றமிழ்சொல் வரம்பெற்றிலே. (454)

### பாங்கியைத் தலைவனுடன்படுத்தல்.

வில்லாந் தடம்புயன் சிங்கார வேலன் வியன்மயிலை
யெல்லாந் தரும்பொருள் மேன்மேலு மீட்ட விறைவர்தொழில்
வல்லாந் துணைமுலை யாய்மேடப் பானு மயிலையுறச்
சொல்லாம் பெருநிதி கொண்டேயது வென்சொலச் சொல்லுகவே. (455)

### பாங்கி யுடன்படல்.

சிற்பர னவருள சிங்கார வேலன் திருமயிலைக்
கற்பியன் மாதர் கணவர்சொற் காத்தல் கடனேனனி
சொற்பிரி வாய்கல்வி தூதொடு காவல் துணைபொருளால்
கற்பிரி வாயெண்ணில் யானேது சொல்வ திறையவனே. (456)

### பொருள்வயிற் பிரிவு பாங்கி தலைவிக் குணர்த்தல்.

நிரைதொடி கேளம்மை பான்மடி மேவி நிமலரொடு
முரைப்பில காதலன் சிங்கார வேலவ னுயர்மயிலைத்
திரை கடலோடியுந் தேடு திரவியஞ் செவ்விதென்ற
புரைதவி ரவ்வைசொல் லாய்ந்தேகி ஞர்நம் புரவலரே. (457)

### பொருள்வயிற் பிரிவுழித் தலைவனழுங்கல்.

வலந்தரும் வச்சிரன் சிங்கார வேலன் மயிலைவெற்பிற்
கலந்திரை யாரு மயிலென்று நான்சொலக் காற்கடன்மேற்
புலந்தரப் போதல்சொன் ஞரென்று சோர்ந்தயர் பூவைமெய்யே
நலந்தரு மீழத்திற் சென்றுலெவ் வாறுய்யு நானிலத்தே. (458)

### இளவேனிற் பருவங்கண்டு தலைவி வருந்தல்.

செக்கர்ச் சிவந்தவன் சிங்கார வேலன் றிருமயிலை
இக்கிற் கனிந்த சொல்லா யிளவேனி லிசைதலுமே
கொக்குக் குயிற்குர னன்கா டை சோரக் குருகுவிழ
மிக்குற்ற தெங்க னகம்மா மதிலன்னம் வேண்டுவதே. (459)

### வருந்திய தலைவியைப் பாங்கி யாற்றுவித்தல்.

ஆனிடந் தாவி யமர்ந்தருள் வானமக் னன்புவள்ளி
மானிடந் தான்மகிழ் சிங்கார வேலன் மயிலைமின்னே
தேனிடந் தாதலர் பூந்தளிர் தேம்பொழில் சேர்தரத்தேன்
கானடந் தீங்கு வரலால் வருவர்நங் காதலரே. (460)

### தலைவன் வந்தமை பாங்கி தலைவிக் குணர்த்தல்.

வாரையம் பன்மணி சிங்கார வேலர் மயிலைவெற்பர்
ஆரையுந் தன்வச மாக்கு நிதிபல வாக்கிவந்தார்
தாரையுஞ் சங்குந் தருமோசை காதுளச் சார்ந்தனநின்
தாரையுஞ் சங்கு மினியோகை கூருந் தளிரியலே. (461)

### தலைவன் வந்துழி மகிழ்ச்சி.

உள்ளங் குளிர்ப்ப நயனங் களிப்ப வுடலம்விம்ம
வள்ளம் பொருமுலை பூரிப்ப வின்ப மருவியதால்
தெள்ளும் பெரும்புகழ்ச் சிங்கார வேலர் திருமயிலை
வெள்ளந் தருநிதி வேன்மன்ன நீவர மெல்லியற்கே. (462)

### இதுவுமது.

கோகன கந்தர மஞ்சன நித்திலக் கோவைகொள்ள
கோகன கம்பொரு மாமுலை யாளின்பங் கூர்ந்தனளால்
கோகன கம்புனை சிங்கார வேலர் குலமயிலைக்
கோகன கந்திகழ் வேலார் சயங்கொண்ட கொற்றவனே. (463)

திருச்சிற்றம்பலம்.

### திருமயிலைக் கோவை முற்றும்.

விக்ருதி வருஷம் பங்குனி மாதம் 17உ சோமவார நாள் அத்த நட்சத்திரமும் பிரதமை, சுபயோகம், சுபகரணம் பெற்ற தினத்தில் குரு க்ஷேத்திர பூமியாகிய **தருமபுரத்திலிருக்கும்** குரு சுவாமி யருளில், சிவஞான தேசிகன் சந்நதி தானத்திலிருக்கும் **அம்பலவாண கவிராய சிகாமணியார்** பாடின **திருமயிலாப்பூர்க் கோவை** எழுதி நிறைவேறினது. கற்பகந்துணை. இந்த ஏடு நீடூழி வாழ்க. பூம்பாவை யீசுவரன் துணை. சிங்கார வேலர் துணை. வயித்தியநாத சுவாமி துணை. குழந்தை வடிவேலன் துணை. குருபாதந் துணை.

# திருமயிலைப் பிள்ளைத் தமிழ்.

## பாட்டு முதற்குறிப்பு அகராதி.


| பாட்டு. | பக்க வெண். |
|---|---|
| அகனகம் .. .. | 8 |
| அசமுகிதன் .. .. | 36 |
| அந்தண் .. .. | 4 |
| அம்போருக் .. .. | 14 |
| அருவுமுருவு .. | 23 |
| அன்போர் .. .. | 13 |
| ஆசில்விரை .. .. | 42 |
| ஆதிமறையு .. .. | 34 |
| ஆறுதலை .. .. | 35 |
| இந்தீவ .. .. | 14 |
| உந்தைவேட .. .. | 33 |
| உரையைப் .. .. | 6 |
| உன்மயம் .. .. | 41 |
| ஊனேசுமந்த .. | 12 |
| எண்டிசை .. .. | 36 |
| எவ்வுயிர் .. .. | 30 |
| ஒண்பதி .. .. | 15 |
| ஒளிர்சிறை .. .. | 22 |
| ஒளிவிண் .. .. | 13 |
| கங்குவளை .. .. | 41 |
| கங்கையக .. .. | 25 |
| கஞ்சம .. .. | 11 |
| கடலேழு .. .. | 36 |
| கரிபொரு .. .. | 12 |
| கருவார் .. .. | 32 |
| கலையார .. .. | 40 |
| களமாரி .. .. | 21 |
| களமிசை .. .. | 38 |
| கற்கடக .. .. | 28 |
| கனகரை .. .. | 4 |
| காசிபன் .. .. | 28 |
| காதினுனது .. .. | 26 |
| கானமிசை .. .. | 17 |
| குண்டலம் .. .. | 11 |
| குவடுதோ .. .. | 11 |
| கொஞ்சுகிளி .. .. | 7 |
| கோலவாரண .. .. | 37 |
| சதிர்முத் .. .. | 20 |
| சரவணபவ .. .. | 19 |
| சித்தசன் .. .. | 28 |
| சிலைநுதலி .. .. | 24 |
| சிலைநுதன் .. .. | 39 |
| சின்னம்படைத் .. | 31 |
| சீர்கொண்ட.. .. | 3 |
| சுக்கில .. .. | 9 |
| செங்கயல் .. .. | 24 |
| செஞ்சர .. .. | 24 |
| சொற்கமல் .. | 5 |
| தண்கோட்டு .. .. | 6 |
| துட்டநமனை .. .. | 32 |
| தென்றறவழ்ந் .. | 18 |
| தேரினுரு .. .. | 29 |
| நத்தமிப்பி .. .. | 21 |
| நள்ளின் .. .. | 12 |
| நாகநிழற் .. .. | 38 |
| படியினிடத் .. .. | 39 |
| பணிவட்ட .. .. | 16 |
| பண்டிங்க .. .. | 5 |
| பண்டைநான் .. .. | 15 |
| பத்தியுட .. .. | 42 |
| பாராள .. .. | 40 |
| பலகலை .. .. | 19 |
| பாற்கட .. .. | 9 |
| பிரமர் .. .. | 27 |
| புங்கவர் .. .. | 37 |
| புடவிக் .. .. | 38 |
| புயலைநிகர் .. .. | 43 |
| பைங்காய் .. .. | 15 |

| பாட்டு. | பக்க வெண். |
|---|---|
| பையவந் .. .. | 40 |
| பொழியுஞ் .. .. | 20 |
| பொறியோ .. .. | 26 |
| பொற்பளிங் .. .. | 25 |
| மஞ்சரி .. .. | 19 |
| மணிமக .. .. | 10 |
| மதியினில .. .. | 34 |
| மதுமுகந் .. .. | 18 |
| மயன்மனத் .. .. | 7 |
| மருமமிசை .. .. | 8 |
| மறுவற் .. .. | 21 |
| மனந்தனி .. .. | 30 |
| மாவேந் .. .. | 35 |
| மின்னலிணை .. | 9 |
| மீண்டுமடித் .. .. | 33 |
| முகமலரை .. .. | 10 |
| முகில்வண் .. .. | 3 |
| முடவர் .. .. | 27 |
| முந்துதொகை .. | 43 |
| முந்துவா .. .. | 16 |
| வகிருமதி .. .. | 23 |
| வட்டமிடு .. .. | 17 |
| வண்டார் .. .. | 34 |
| வன்னமலர் .. .. | 22 |
| வார்பெறு .. .. | 41 |
| வானப்பொரு .. | 20 |
| விண்ணுறு .. .. | 30 |
| விறன்மிகு .. .. | 18 |
| வீரனொரு .. .. | 29 |
| வீறுநிறை .. .. | 26 |
| வெம்மையவு .. | 31 |
| வையமளந்த .. | 32 |
| வையம்புக .. .. | 13 |

# திருமயிலைக் கோவை.

## பாட்டு முதற்குறிப்பு அகராதி.


| பாட்டு. | பக்க வெண். | பாட்டு. | பக்க வெண். |
|---|---|---|---|
| அணிவாழ் | 108 | இன்னம்பிறப் | 74 |
| அப்புற்ற | 49 | உடலாயிரங் | 84 |
| அரவுக்கிகன் | 59 | உடலைப்பயி | 98 |
| அருக்கனைப் | 82 | உடுமணி | 56 |
| அருந்தமி | 55 | உணர்ந்தார் | 58 |
| அரையாமம் | 77 | உண்ணேயங் | 107 |
| அலங்கார | 97 | உருமரை | 59 |
| அலந்து | 93 | உறிப்பன்றி | 59 |
| அழைக்குங் | 72 | உறுப்பா | 106 |
| அளிசெய்க் | 73 | ஊடற்கபா | 106 |
| அளிப்பெடை | 63 | ஊரலர் | 99 |
| அனம்படைத் | 60 | ஊருமுறங் | 81 |
| அனையும் | 48 | ஊர்வந்த | 89 |
| அன்பாமெனக் | 70 | ஊழிற்பெருவலி | 53 |
| அன்பாலெனக் | 53 | எங்கட் | 107 |
| அன்பால் | 85 | எண்ணு | 105 |
| அன்னந்தரு | 60 | எண்ணும் | 72 |
| அன்னப் | 77 | எண்ணூறு | 66 |
| அன்னம் | 105 | எண்முத்தலம் | 66 |
| ஆடுஞ்சரணக் | 67 | எதிர்பொரும் | 97 |
| ஆத்தன் மயிலை | 73 | எயில்காண் | 68 |
| ஆந்தொடை | 107 | எல்லாப் | 70 |
| ஆயிழை | 95 | எழிலார் | 82 |
| ஆர்வந் | 90 | எழுதிய | 69 |
| ஆழியின் | 78 | எளியன் | 84 |
| ஆளியுங் | 76 | என்னேமய | 51 |
| ஆவிக்கருள் | 55 | ஏட்டுத் | 93 |
| இடுகின்ற | 95 | ஏணூர் | 86 |
| இணக்குதரும் | 76 | ஏதுரை | 103 |
| இதமுற்று | 64 | ஏனுஞ்சிறப் | 108 |
| இந்திர | 64 | ஏவிடவார் | 85 |
| இருகுண்டல | 63 | ஏறுமறி | 94 |
| இரும்புக்கு | 95 | ஐம்பொறி | 67 |
| இவரென் | 93 | ஒண்சங்க | 64 |

| பாட்டு. | பக்க வெண். |
|---|---|
| ஒருநாளெனி | 82 |
| ஒலியார் | 108 |
| ஓங்கிய | 79 |
| ஓமொன்று | 79 |
| ஓவியமா | 83 |
| கண்ணுக்குச் | 69 |
| கண்ணுக்கொளி | 53 |
| கண்ணுங் | 68 |
| கண்பாரென | 100 |
| கதுமென் | 100 |
| கமரிட்ட | 66 |
| கம்மூர் | 103 |
| கயிலைப் | 57 |
| கரமதி | 92 |
| கரம்பல | 78 |
| கருங்காவி | 52 |
| கருத்தை | 62 |
| கருநான் | 96 |
| கருமன்னு | 65 |
| கருமைப் | 53 |
| கரும்புங் | 57 |
| கரைசாய | 71 |
| கலம்புரி | 91 |
| கலைமுறை | 54 |
| கல்லார | 63 |
| கவளக் | 89 |
| கவின்முத் | 60 |
| களவிற் | 105 |
| களவிற்பெரு | 71 |
| கள்ளஞ் | 95 |
| கற்றலை | 81 |
| கனங்கமழ் | 68 |
| கனவேங்கை | 73 |
| காக்குங் | 98 |
| காமதி | 92 |
| காராரெழிலி | 85 |
| கார்காட் | 59 |
| காவளமோங் | 106 |
| காவிற்கடி | 81 |
| காவினில் | 61 |
| கானிட | 47 |
| கானுறை | 56 |

| பாட்டு. | பக்க வெண். |
|---|---|
| கான்மயி | 48 |
| கிருதன | 88 |
| கிளரும் | 101 |
| கிளியோப்பு | 61 |
| குசலர்க் | 86 |
| குஞ்சர | 107 |
| குடைகொண்டு | 66 |
| குணப்பா | 106 |
| குமரன் | 94 |
| குருவிற் | 73 |
| குருவேள் | 92 |
| குளமத | 65 |
| குளிக்குந் | 79 |
| கூடிக் | 106 |
| கூடிய | 74 |
| கூடியு | 79 |
| கூட்டிய | 92 |
| கூந்தற் | 62 |
| கூவிய | 91 |
| கூனிக் | 101 |
| கேளுற | 89 |
| கைம்மா | 71 |
| கைவளை | 87 |
| கொங்கார் | 50 |
| கொங்கைக் | 77 |
| கொண்டலை | 75 |
| கொண்டானைத் | 104 |
| கொம்பரின | 90 |
| கொழிக்கு | 85 |
| கோடலுஞ் | 74 |
| கோமான் | 65 |
| கோலத்தை | 69 |
| சகமேழ் | 100 |
| சகலோகம் | 76 |
| சவனச் | 59 |
| சாந்தணி | 62 |
| சாலிசொரிந் | 49 |
| சித்தம் | 49 |
| சிந்தித்த | 52 |
| சிலைமான | 67 |
| சிலையிற் | 101 |
| சிலையேறு | 73 |

| பாட்டு. | பக்க வெண். |
|---|---|
| சிலையோர் | 65 |
| சீரானமை | 81 |
| சீரானை | 54 |
| சீலத்தர் | 60 |
| சீற்றார் | 53 |
| சுகப்பொறை | 107 |
| சுருங்கிய | 58 |
| சுரும்புண்ட | 74 |
| சுழிப்புன | 80 |
| செங்கயன் | 91 |
| செங்கை | 100 |
| செஞ்சூட்டு | 97 |
| செந்திற் | 85 |
| செந்தேன் | 61 |
| செப்பனை | 65 |
| செய்க்கும் | 75 |
| செய்யுறை | 64 |
| செவ்வாய | 104 |
| சேணாடு | 102 |
| சேந்தன் | 51 |
| சேயிழை | 69 |
| சேரிப் | 106 |
| சேவைப் | 55 |
| சேற்றாய் | 88 |
| சொரிந்தா | 88 |
| சொல்லாருஞ் | 81 |
| சொல்லிற் | 62 |
| சோதிகண் | 56 |
| சோதிமயி | 52 |
| சோர்ந்த | 72 |
| ஞானவரோ | 71 |
| தஞ்சமயிற் | 88 |
| தடத்துக்கு | 58 |
| தடமாரு | 64 |
| தடைக்கலி | 107 |
| தண்ணீர்மை | 88 |
| தண்ணெடுஞ் | 93 |
| தண்ணேர் | 56 |
| தருசொற் | 54 |
| தருமாதுலன் | 92 |
| தரைக்கா | 82 |
| தவந்தினம் | 80 |
| தாகந்தவிர் | 69 |
| தாய்க்கே | 50 |
| தாலாட்டு | 92 |
| தானென்ன | 97 |
| திசையார் | 108 |
| திடமுற்ற | 68 |
| திரமேறு | 80 |
| திரிசங்க | 103 |
| திருத்தத் | 104 |
| திருநாளுயர் | 80 |
| திருவாய்க் | 77 |
| திருவார் | 65 |
| தீதைத் | 62 |
| துடியேற்ற | 49 |
| துதிகாவ | 85 |
| துதிமான் | 61 |
| துள்ளுங் | 61 |
| துன்னுமணிப் | 76 |
| தூயமயிலை | 100 |
| தென்பால் | 71 |
| தெள்ளிக் | 70 |
| தேராது | 54 |
| தேவின்முன் | 62 |
| தேனிக்குயர் | 84 |
| தொடிக்காலன் | 108 |
| தொழுதும்பர் | 82 |
| தோட்டுத் | 74 |
| தோமேழ் | 75 |
| தோய்த்த | 83 |
| தோரண | 98 |
| நந்தா | 66 |
| நம்பாகும் | 101 |
| நயனார் | 84 |
| நல்லருள் | 76 |
| நறவே | 79 |
| நறைக்கனி | 80 |
| நற்குண | 104 |
| நனைக்கற் | 61 |
| நன்மனத் | 70 |
| நாடுமயிலை | 89 |
| நாமணி | 72 |
| நாலார | 75 |

| பாட்டு. | பக்க வெண். |
| --- | --- |
| நிதிமயி | 102 |
| நித்தன் | 62 |
| நிறைவாருதி | 56 |
| நினைப்போர் | 70 |
| நீடிய | 67 |
| நீர்கொண்ட | 47 |
| நீர்தந்த | 48 |
| நீளலர் | 102 |
| நெடும்பான் | 100 |
| நெய்தற் | 93 |
| நெய்தன் | 96 |
| பசிக்கா | 51 |
| பசிப்பா | 82 |
| பண்ணினும் | 93 |
| பந்தக் | 54 |
| பயிலும் | 56 |
| பரவத் | 92 |
| பரிவா | 87 |
| பலவும் | 78 |
| பனையோர் | 58 |
| பாட்டார் | 103 |
| பாட்டாலு | 63 |
| பாணாற்ற | 79 |
| பாதங்கள் | 60 |
| பாதைக்கடற் | 94 |
| பாமேல் | 75 |
| பாரும்விண் | 48 |
| பாளூர் | 59 |
| பார்ப்பார் | 106 |
| பாலைக்குடி | 97 |
| பரவுங்கட | 98 |
| பானுவின் | 104 |
| புடைநின்ற | 87 |
| புணர்வும் | 71 |
| புனைமயில் | 87 |
| பூங்கினி | 82 |
| பூச்சினை | 97 |
| பூரிமணிக் | 89 |
| பெரிதா | 69 |
| பெருகார | 47 |
| பெற்றாரின் | 67 |
| பெற்றோருஞ் | 89 |

| பாட்டு. | பக்க வெண். |
| --- | --- |
| பேரிகை | 64 |
| பொய்ச்சங் | 50 |
| பொய்த்தெய்வ | 51 |
| பொருவன்மை | 60 |
| பொருளொன் | 67 |
| பொற்றூணின் | 86 |
| பொன்மயி | 52 |
| பொன்மார்பு | 68 |
| பொன்னாட் | 83 |
| பொன்னார் | 74 |
| போகவிடு | 102 |
| போதார் | 96 |
| போதினை | 72 |
| போதைச் | 55 |
| போராகும் | 52 |
| மகஞ்சேர் | 67 |
| மக்கட் | 99 |
| மங்கலந் | 101 |
| மஞ்சூடு | 85 |
| மணங்கான் | 66 |
| மணியுந் | 75 |
| மணிவாய் | 49 |
| மண்ணாடர் | 56 |
| மதன்களி | 68 |
| மதிநுதல் | 57 |
| மதுவொன்று | 68 |
| மந்தாகினி | 57 |
| மயில்பொலி | 91 |
| மருந்தெனு | 86 |
| மருமொய்த்த | 49 |
| மருவார் | 48 |
| மல்கார்வ | 90 |
| மல்லிக்கு | 55 |
| மறப்பார் | 77 |
| மற்பயில் | 95 |
| மற்புயன் | 52 |
| மன்பார் | 54 |
| மன்பாவ | 96 |
| மன்மந் | 57 |
| மன்னாகர் | 104 |
| மன்னாண் | 78 |
| மன்னும் | 73 |

| பாட்டு. | பக்க வெண். | பாட்டு. | பக்க வெண். |
|---|---|---|---|
| மாகத்தர் .. | .. 51 | வழிகுழி .. | .. 70 |
| மாணேருமை .. | .. 98 | வழித்துணே .. | .. 99 |
| மாதைப் .. | .. 78 | வழிபடர் .. | .. 64 |
| மாயாபுரி .. | .. 87 | வள்ளற் .. | .. 100 |
| மாரிமொழி .. | .. 90 | வள்ளிக்கொடி | .. 51 |
| மாலன்பொடு .. | .. 108 | வள்ளே .. | .. 84 |
| மாலன்ன .. | .. 50 | வண்ணக் .. | .. 84 |
| மாலேத்திருப் .. | .. 86 | வன்னக்கரும் .. | .. 75 |
| மால்விழி .. | .. 83 | வாடாமலர் .. | .. 94 |
| மாவரந் .. | .. 58 | வாடும்பயிர் .. | .. 63 |
| மாற்றகில் .. | .. 101 | வாம்புலி .. | .. 102 |
| மிண்டார் .. | .. 193 | வாரக்கருணே .. | .. 69 |
| மீனேறு .. | .. 90 | வாரணி .. | .. 47 |
| முதிரா .. | .. 49 | வாராகி .. | .. 59 |
| முதிர்கின்ற .. | .. 72 | வாருதி .. | .. 63 |
| முப்பாலின் .. | .. 105 | வார்க்கட் .. | .. 48 |
| மும்மையும் .. | .. 103 | வாவென் .. | .. 96 |
| முருகா .. | .. 78 | வாழ்வான் .. | .. 83 |
| முருகாமயிலே .. | .. 102 | வாளாவழுகை | .. 94 |
| முன்றிற் .. | .. 66 | வாளேப்பயில் .. | .. 86 |
| முன்னெண்ண .. | .. 79 | வானந் தினம் .. | .. 87 |
| மெய்காட்டும் .. | .. 73 | வானப்பிறை .. | .. 99 |
| மெய்த்தே .. | .. 48 | வானினுஞ் .. | .. 51 |
| மெய்யர்க் .. | .. 89 | வானேர் .. | .. 87 |
| மெய்வாரணத் | .. 57 | வான்போந் .. | .. 98 |
| மேடையுஞ் .. | .. 50 | விடையார் .. | .. 97 |
| மேழிவளர் .. | .. 55 | விட்டுப் .. | .. 77 |
| மொழிக்கண் .. | .. 83 | விதுமைப் .. | .. 103 |
| மோகந்தரும் .. | .. 76 | வியலா .. | .. 47 |
| மோகந்தவிரத் | .. 53 | விரியாயி .. | .. 55 |
| மோகாழி .. | .. 99 | விழித்த .. | .. 88 |
| யானேப் .. | .. 63 | விழைவார் .. | .. 74 |
| வசைபார்த் .. | .. 90 | வீட்டிற் .. | .. 81 |
| வடிவனிள .. | .. 105 | வீறுஞ்சுவை .. | .. 91 |
| வண்டணி .. | .. 95 | வெம்போது .. | .. 71 |
| வண்ணப் .. | .. 99 | வெளிகாண் .. | .. 96 |
| வயங்கு .. | .. 94 | வெள்ளிக் .. | .. 80 |
| வயலார் .. | .. 99 | வெற்றிதரு .. | .. 81 |
| வரவோதி .. | .. 101 | வேதங்கள் .. | .. 58 |
| வருசாதி .. | .. 78 | வேயினுமுன் .. | .. 60 |
| வருதவ .. | .. 91 | வேரித்திரு .. | .. 50 |
| வலனுயர் .. | .. 84 | வைச்சமெய்க் .. | .. 57 |
| வலாரிவந் .. | .. 105 | வைத்தடி .. | .. 76 |
| வல்லன் .. | .. 96 | | |

# திருமயிலை உவமை வெண்பா

## பாட்டு முதற் குறிப்பு அகராதி


| பாட்டு. | பக்க வெண். | பாட்டு. | பக்க வெண். |
|---|---|---|---|
| அத்திதீர்த் .. .. | 112 | கற்பகத்தே .. .. | 117 |
| அத்தியினிற் .. .. | 123 | காணவரு .. .. | 113 |
| அந்தகமா .. .. | 119 | காவிரிக்கும் .. .. | 121 |
| அப்பனுக்கு .. .. | 122 | காவேரி .. .. | 115 |
| அமர்நீதி .. .. | 121 | காளைவடி .. .. | 113 |
| அன்பா .. .. | 122 | கானப்பே .. .. | 113 |
| ஆடல்யானை .. .. | 114 | குந்தமலி .. .. | 122 |
| ஆப்புரை .. .. | 113 | கும்பநியதி .. .. | 113 |
| ஆரமலை .. .. | 112 | கும்பமுனி .. .. | 112 |
| ஆராரொன் .. .. | 115 | கேகயம் .. .. | 119 |
| ஆலத்தால் .. .. | 121 | கோங்கு .. .. | 114 |
| ஆவினிறை .. .. | 125 | சங்காழி .. .. | 117 |
| ஆனிலையிற் .. .. | 114 | சந்திவிநா .. .. | 123 |
| இலஞ்சி .. .. | 117 | சமய நிலை .. .. | 119 |
| இலையந்த .. .. | 120 | சலக்கட .. .. | 125 |
| ஈனப்புலைச் .. ... | 117 | சன்னதி .. .. | 124 |
| உலகின் .. .. | 112 | சிந்துகரை .. .. | 123 |
| ஊரார்முனம் .. .. | 114 | சிந்துமதி .. .. | 122 |
| எட்டுநாகஞ் .. .. | 125 | சிந்துவாய் .. .. | 124 |
| எட்டெட்டு .. .. | 124 | சிவகாமி .. .. | 118 |
| என்புங் .. .. | 117 | சுந்தராமாந் .. .. | 111 |
| ஓடமிகு .. .. | 120 | சுருதிவழி .. .. | 120 |
| கங்கரை .. .. | 119 | சூட்டுமலைச் .. .. | 124 |
| கங்கைத் .. .. | 111 | செங்கோ .. .. | 119 |
| கஞ்சநங் .. .. | 115 | செட்டிமக .. .. | 118 |
| கடம்ப .. .. | 113 | செந்தமிழி .. .. | 123 |
| கண்ணுவர் .. .. | 111 | சொல்லரசர் .. .. | 118 |
| கமலையிருப் .. .. | 117 | சொற்புலவ .. .. | 119 |
| கம்பைத் .. .. | 116 | சொன்னக் .. .. | 124 |
| கருத்தன் .. .. | 111 | தங்கொருத்திக் .. | 122 |
| கருவூரார் .. .. | 112 | தூயமலை .. .. | 115 |
| கலையருக் .. .. | 120 | தெக்கணத்திற் .. | 123 |
| கல்லினிசை .. .. | 116 | தேசிகமாப் .. .. | 123 |
| களவிலடி .. .. | 113 | தேவிசெய்யும் .. | 121 |

| பாட்டு. | பக்க வெண். | பாட்டு. | பக்க வெண். |
|---|---|---|---|
| தொண்டைநாட் | 116 | பெண்ணைவளர்ப் | 118 |
| தோகை | 116 | பேதைப்பிணி | 115 |
| தோணியென்றுங் | 119 | பொதிகைமலை | 112 |
| நந்திவரைச் | 117 | பொன்னீயங்கள் | 121 |
| நல்லபூம் | 122 | பொன்னீர்ச் | 119 |
| நன்கரந்தை | 112 | மந்திரஞ் | 120 |
| நாகமகிமை | 113 | மயிலை | 125 |
| நாகமணி | 124 | மருதநிலத் | 125 |
| நாகம்புலி | 118 | மன்னுரை | 120 |
| நாலுதிசை | 124 | மாகநீர் | 121 |
| நாலுமறை | 116 | மாலயனண் | 115 |
| நாவலர்க்குக் | 121 | மாநிலத்து | 122 |
| நாவின்மன் | 115 | முடங்கல் | 116 |
| நீர்க்கரை | 114 | முற்றில் | 118 |
| நேரியரு | 114 | முன்னீரி | 112 |
| பஞ்சாக்கர | 118 | மூவர்தமிழ் | 123 |
| பதிசோறுங் | 118 | மெய்ப்பொருள் | 116 |
| பரவர்குடி | 114 | வள்ளிமண | 123 |
| பரவையிடந் | 120 | வள்ளுவரின் | 111 |
| பரிதிகுல | 122 | வன்மீன் | 114 |
| பல்லக்கு | 115 | வன்றொண்டர் | 115 |
| பாவலவர் | 116 | வாகீசர் | 122 |
| புட்கரணி | 111 | வாட்கப் | 119 |
| புள்ளிமயில் | 119 | வாரணமுங் | 124 |
| புன்னைமரஞ் | 111 | வேடன்பரி | 117 |
| பூசத்தா | 121 | வேணுபுரத் | 121 |
| பூசுரர்க்கா | 120 | வேண்டவளர்ந் | 123 |
| பூமான் | 111 | வேலவரென் | 122 |
| பூமிவணங் | 113 | வேளாள | 116 |
| பெண்ணுகஞ் | 124 | வேலையென் | 112 |
| பெண்ணமுத் | 118 | வைகைக்கும் | 114 |

# திருமயிலை வெண்பா.

## பாட்டு முதற் குறிப்பு அகராதி


| பாட்டு. | பக்க வெண். | பாட்டு. | பக்க வெண். |
|---|---|---|---|
| அங்கவணிக | 133 | கைவளையார் | 139 |
| அஞ்சுகை | 138 | சங்கர | 130 |
| அத்திரி | 134 | சங்கரனார்க் | 134 |
| அந்தணர் | 132 | சங்காழி | 138 |
| அம்புசெறி | 135 | சண்முகனார் | 133 |
| ஆசில்கலி | 136 | சத்துருவைக் | 131 |
| ஆசில்புகழ் | 137 | சாற்றுமிராம | 134 |
| ஆண்டாண் | 137 | சாற்றுமுருங் | 129 |
| ஆதவரோர் | 131 | சிங்கார | 133 |
| ஆய்ந்த | 132 | சீர்மல்கு | 129 |
| ஆரமணி | 137 | சுந்தரங் | 137 |
| ஆராமருந் | 130 | சுந்தரஞ் | 135 |
| ஆர்க்குங் | 130 | சூர்முடிப்பர்ன் | 133 |
| இல்முன்றில் | 129 | சொல்லரைசர் | 129 |
| ஈசற்குக் | 139 | சொன்மலி | 134 |
| ஊதும்பொற் | 134 | சோமுகனார் | 133 |
| ஊழியடைந் | 130 | தண்டந்தனை | 138 |
| எண்ணின் | 132 | தண்டாப் | 131 |
| ஏருழவர் | 137 | தண்பாற் | 132 |
| ஓடைமல | 136 | தண்மதியம் | 138 |
| ஓதும் பூங் | 135 | தாமரையுந் | 137 |
| கங்கை | 129 | தீயூரங் | 133 |
| கண்ணிழந்த | 134 | துய்யமதி | 132 |
| கள்ளமிலா | 129 | தோடுசெறி | 129 |
| காக்கிற் | 129 | நாகமுற்று | 137 |
| காசிதிருக் | 130 | நாதமற | 131 |
| காதங்கமழ் | 132 | பட்டமன்னர் | 136 |
| காமவலைப் | 132 | பன்னுமத்தி | 140 |
| காரார்புரி | 135 | பன்னுமா | 139 |
| காலூருஞ் | 136 | பன்னும் | 138 |
| காவலர்கள் | 136 | பாண்டரங்கன் | 138 |
| கூவிளந்தே | 131 | பாண்டவர் | 134 |
| கோதில் | 136 | பாலிதீர்த் | 133 |
| கோயிலாத் | 130 | புண்ணியர்கள் | 132 |
| கைந்நின்ற | 131 | | |

| பாட்டு. | பக்க வெண். |
| --- | --- |
| பூங்கமலத் | 134 |
| பூமேற் | 138 |
| பேழையிலந் | 137 |
| பொங்குங் | 135 |
| போகமுடன் | 130 |
| போதகத்தாற் | 139 |
| போதஞ்சே | 135 |
| போற்றுகின்ற | 131 |
| பொய்யா | 140 |
| பொன்னனையா | 139 |
| பொன்னுலய | 139 |
| மண்டும் | 136 |
| மன்னுயிருஞ் | 130 |
| மாகஞ்செறி | 136 |
| மால்மகனை | 135 |
| மான்விழி | 130 |
| முப்பழத்தே | 131 |
| மெச்சும் | 135 |
| மைப்படிந்த | 140 |
| மைப்படியுங் | 133 |
| வஞ்சப் | 136 |
| வாலிதக்கன் | 134 |
| வானவிடை | 139 |
| வானிலவுங் | 140 |
| வீடுதொறு | 135 |
| வெண்புரி | 137 |
| வெண்முத்தாற் | 139 |
| வெண்மை | 139 |
| வேததீர்த் | 133 |
| வேதமளித் | 138 |
| வேலியா | 132 |
| வேலையடுத் | 138 |
| வேளாளர் | 131 |